www.padippakam.com

# தமிழ்
# அகத்தம்



உரூ. 15

இதழ்: 17

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



தமிழ் அமிழ்தம்
காலாண்டிதழானதும்
மிகுந்த வரவேற்பு

இம்முறையும்
நல்ல படைப்புக்களைத் தர
முயன்றிருக்கிறோம்.

இதழ் தொடர்ந்து வர
மிகப் பெரிய அளவில்
பங்கெடுத்த கட்டணதாரர்களாகிய
உங்களுடன்
பேரா. கா. பட்டாபிராமன்
எஸ்.இ. லோகநாதன்
பெ. அன்பு
ஜீ. முருகன்
விளம்பரதாரர்கள்
இவர்களும் நன்றிக்குரியவர்கள்

பொங்கல் வாழ்த்துக்கள்!

செந்தமிழ்



படிப்பகம்

www.padippakam.com



**தமிழ் அமிழ்தம்**
காலாண்டிதழ்

மொழிப்பற்று மிக்குடையோன்
மொழிப்போர் வீரன்
-பாவேந்தர்

இதழ் - 17
சுறவம் - 2032
சன - மார் 2001

ஆசிரியர்
செந்தமிழ் - முருகன்

வெளியிடுபவர்
இரா. தில்லைக் கோவிந்தன்

முகவரி
அஞ்சல் பெட்டி எண் : 18
திருவண்ணாமலை-606 601
தொலைபேசி - 25276

தனியிதழ் : 15 உருபா
ஆண்டுக்கு: 60 உருபா

ஒளியச்சு:
ஜீவா கம்ப்யூட்டர்ஸ், செங்கம்

கதை

3
எஸ். இராமகிருஷ்ணன்
6
ஜீ.முருகன்
10
மனோஜ்தாஸ்
17
சி. மகேந்திரன்
24, 35
இடாலோ கால்வினோ
40
அழகிய பெரியவன்
48
ஏஞ்சலா கார்ட்டர்

கவிதை

5
கே. ஸ்டாலின்
25
பெ.அன்பு
34
ஸ்ரீநேசன்
38
அ.குமார்
43
யுவபாரதி











படிப்பகம்

www.padippakam.com

# சயன விடுதி

எஸ். ராமகிருஷ்ணன்

நான்கு மணற்குன்றுகளுக்கிடையே ஒரு செம்மஞ்சள் மலரென விரிந்த நகரமாகயிருந்தது உத்கலா. வீதிகளில் மணற்துகள்கள் படிந்து நிரம்ப, நடமாடும் மனிதர்களின் குரலில் கூட மணல் ஒட்டிய ஊராகயிருந்தது. முடிவற்ற மணல்தொலைவை தனது வஸ்திரமாக உடுத்தியது போல நகரம் வீழ்ந்து கிடந்தது. நயோகான் வம்ச அரசர்களின் கல்லறைத் தோட்டமெனக்காணப்படும் அதன் பெருவெளியில் பறவைகள் பறப்பது கூட அபூர்வமாகவே காணப்படுகிறது. இந்த நகரின் கதியைத் தீர்மானிக்கும் காற்றானது தொலைதூர் மலை உயரத்தில் சாந்தி கொண்டிருந்தது. அது வருடத்தின் மூன்று மாதங்களில் மட்டுமே விழிப்புறுவதாக நம்பினார்கள். சிவப்பு செங்கற்களாலும் மூங்கில் கழிகளாலும் வடிவமைக்கப்பட்ட வீடுகளிருந்த பாலை நகரமானது முற்றாக மனிதர்கள் யாவரும் காலி செய்து போய்விட்டவெறுமையோடிருந்தது. நயோகான் அரசர்களில் இளையவனான ஒருவன் தனது கனவில் விழித்தெழுபவன் போல இங்கிருந்த மக்களை அழைத்தபடி பாலை கடந்து போய் புதிய நகரமொன்றை நிர்மாணித்துக் கொண்டான். பின்பு இந்நகரம் திறந்த புகலிடம் போலவேயிருந்தது. நடமாட்டமற்ற வீதிகளில் இடுபாடுகள் மிக துவங்கியதும் இதை கடப்பதைக் கூட பயணிகள் விலக்கி கடந்தனர். எல்லா இடிபாடுகளையும் மீறி இந்த நகரத்தில் ஒரேயொரு விடுதி அழிக்கப்படமுடியாமல் விடுபட்டு போய் இருந்து கொண்டேயிருந்தது. இந்த விடுதியின் கதவுகள் மூடப்பட்டு வெகு காலமாகிவிட்டன. சாவித்துவாரத்தின் வழியாக உள்ளே பார்க்கும் எவரும் குறைந்த ஒளியும் இருளும் நடனமாடுவதைக் காண்பார்கள். உத்கலாவின் சயனவிடுதி ஒரு திறக்கப்படாத விநோதமெனச் சொன்ன மேய்ப்பன் ஒருவன், திறவா இந்த விடுதி நான்கு வாசல் கொண்டதென்றும் அவை விசித்திர நிகழ்வுகளால் மூடப்பட்டதாகவும் நினைவு கூர்ந்தான்.



பால்கிளி

## வட சயனம்

உத்கலாவின் தென்பகுதியின் தொலைவில் இருக்கும் அடர் காட்டில் மதிமானை வேட்டையாடுவதற்காக நதி கடந்து நான்கு யுவர்கள் வந்து சேர்ந்திருந்தார்கள். அவர்கள் வனவெளியில் ஊதுகுழலால் சப்தமிட்டபடியே மான்களை விரட்டி அலைந்தனர். பெரிய கொம்புகளையுடைய மான்கள் மருண்டு தாவின. தேடியலைந்து கொண்டிருந்த மதிமானை மட்டும் அவர்களால் அறிய முடியவேயில்லை. உத்கலா மணல்வனத்தில் யாரும் கண்டிராத மதிமான் ஒன்று அலைந்து கொண்டிருந்தது. அதன் உடலில் நிலவு வளரவளர வெண்திட்டுக்களாக புள்ளிகள் தோன்றத் துவங்கும். நிலவு முழுமை கொள்ளும்நாளில் மானின் உடல் முழுவதும் புள்ளிகளாகிவிடும். நிலவு பின் தேயத் தேய மதிமானின் உடற்புள்ளிகள் உதிரத் துவங்கி அது அமாவாசை நாளில் புள்ளியற்ற தூய மானாகிவிடும் என்றார்கள். அது நிலாவின் திசையிலேயே சுற்றியலையக்கூடியது என்றும் ஒளியை அருந்தி வாழ்வதாகவும் சொன்னதைக் கேட்டு



படிப்பகம்

www.padippakam.com

வேட்டையாடுவதற்காக அலைந்த அவர்கள் இரவில் மணற்பாடுகள் உள்ள உத்கலாவைக் கண்டார்கள். அங்கே நிலா வரும் வரை தங்கிச் செல்லலாம் என மூடிக்கிடந்த விடுதியின் கதவைத்தனது வலிய பிரயோகத்தால் உடைத்துத் திறந்த வேட்டையாளன், உள்ளே நடந்த போது விடுதியில் சிறிய அறைகள் இரண்டு வரிசையாக இருந்தன. எப்போதும் சயனிப்பதற்குத் தயாராக இருப்பது போல அதில் படுக்கைகள் போடப்பட்டிருந்தன. நால்வரும் மதிமானைத் தேடிய களைப்பில் தனித்தனி படுக்கைகளில் அவர்கள் வில்லோடு உறங்கிப் போனார்கள். நிலா கிளைத்த இரவோடியது. யாவும் மறந்து நல்ல உறக்கத்தில் மூழ்கினார்கள்.

ஏதோ சப்தத் துணுக்கு ஒன்று மோதக்கேட்டு விழித்த வேட்டைக்காரர்களில் ஒருவன் தான் நதியின் வடபக்கமிருந்த பாறையொன்றில் படுத்துக்கிடப்பதை உணர்ந்தவனாக எழுந்து தனது சிநேகிதர்களைத் தேடினான். மற்ற மூவரும் கானத்திலும், மலைச் சரிவிலும், மரத்தடியிலும் என வேறு வேறு இடங்களில் விழித்தனர். அவர்களுக்கு நடந்த குழப்பம் புரிபடவில்லை. ஒன்றாக படுக்கைக்கு ஒரே இடத்தில் போன அவர்கள் எப்படி வேறு இடத்தில் விழிக்க முடியும் எனப் புரியாமல் மறுநாளும் அதே விடுதிக்கு வந்தனர். முந்திய நாளைப் போலன்றி ஒரே அறையில் நால்வரும் அருகாமையில் படுத்துக்கொண்டனர். விழித்து எழுந்த போது கடந்த நாளைப் போலவே நதிக்கரை மலைமடுவென வேறு வேறு திசைகளில் வேறு இடங்களில் விழித்து எழுந்தனர். துயிலின் நீண்ட பற்கள் தங்களைக் கவ்வி இழுத்து வந்து எங்காவது போட்டுவிடுவதாகப் பயந்த நால்வரும் மதிமானை வேட்டையாட மறந்து ஓடினர். வடசயனம் என்ற சூட்சுமம் அறியாத அவர்கள் கானகத்திற்கு வரவேயில்லை. பின் அந்த வடசயனம் மூடப்பட்டது.

## கிழக்கு சயனம்

தனது 14 வது ரெஜிமெண்டோடு தெற்கில் கிளர்ந்து எழும் வீரர்களை அடக்குவதற்காக இரவில் பயணித்த மேஜர் காம்பெல் மயக்கமூட்டும் தொல் வாசனையை நுகர்ந்தபடி உத்கலாவிற்கு வந்தபோது வளர்பிறை நாளாக இருந்தது. எங்கும் வெண்ணிற ஒளியில் சிதைந்த நகரம் ஒளிர்ந்து கொண்டிருந்தது. தைல ஓவியமொன்றைப் போல முழு நகரமும் ஒளிர்வதைக் கண்ட அவன் அந்த நகரத்திற்குள் பிரவேசித்துத் தன் வீரர்களைத் தங்குமிடம் தேடி வரச்சொன்னான். பூட்டிக் கிடந்த கிழக்கு சயனவிடுதியைத் திறக்கச் செய்து தன் படைவீரர்களோடு தங்குவதற்காகப் போனபோது அங்கே சிறிய குகை போன்ற வடிவில் ஒற்றைப் படுக்கை மட்டுமே இருந்தது. வெளியில் பார்க்கும்போது பெரிய விடுதி போல தெரிந்தும், உள்ளே குகை படுகை போல சுருங்கியும் இருவடிவம் கொண்ட இடத்தினைப் பார்த்தபடி குனிந்து அந்த குகைப் படுகையினுள் நடந்தான். ஒரே ஓர் ஆள் தூங்கக் கல்லால் ஆன ஒரு படுக்கையிருந்தது. அதில் குளிர்ச்சி கசிந்து கொண்டிருந்தது. காம்பெல் தனது உடைவாளைக் கழற்றி வைத்துவிட்டு அதில் அமர்ந்தான். உடன் வந்த வீரர்கள் தன் பின்னே ஊர்ந்து ஊர்ந்து வந்து அருகாமையில் நின்ற போது, ஒரு நபருக்கு மட்டுமே போதுமானதாக இருந்த வெளி இப்போது படையே தங்குவதற்குரிய இடம் போல விரிவு கொண்டிருந்தது. காம்பெல் அதன் மர்மம் அறியாமல் கண்ணை மூடிக்கிடந்தான். தன் படுக்கையின் ஒரு புறத்தில் வீரர்கள் வரிசையாக அமரக் கல் விரிந்து கொண்டேயிருந்தது. நூற்றுப் பதினோரு வீரர்கள் படுத்தும் அதில் மீதம் இடமிருந்தது. வீரர்கள் களைப்பில் தூங்கிப்போயினர். விடிந்து பார்த்த போது யாவரும் பெண் உருக்கொண்டிருந்ததைப் புரிந்து கொள்ள முடியவேயில்லை. காம்பெல் செய்வதறியாது தன் பெண் உருவின் புதிர்மையோடு விலகிப்போன பிறகு கிழக்குச் சயன அறைக்கு எவரும் வரவேயில்லை.

## தென் சயனம்

உத்கலாவின் தெற்கே நிற்கும் மணற்குன்றின் உயரத்தில் இருந்து கணித்தால் நட்சத்திரங்களின் பாதைகளும் கிரகங்களின் நடமாட்டமும் துல்லியமாகக் கணக்கிடப்பட முடியுமென அறிந்த பன்னிரெண்டு வானசாஸ்திரர்கள் வேறு வேறு தேசங்களிலிருந்து புறப்பட்டு உத்கலாவிற்கு வந்து சேர்ந்திருந்தனர். அவர்கள் குன்றின் உச்சியில் ஏறி அமர்ந்த போது வானம் வெகு துல்லியமாக இருந்தது. வானசாஸ்திரர்கள் தங்கள் கண்களைக் கிரகங்களின் வழியில் நீந்த விட்டனர். நெருங்கிய மனிதனைப் போல அவர்கள் நட்சத்திர வழி அறிந்து விடிகாலையில் கீழே இறங்கி வந்தனர். தெற்குப்பகுதி நகரத்திற்குள் பிரவேசித்தபோது சாம்பல் நிறவெளிச்சம் எங்கும் பரவியிருந்தது. தெற்கு சயன அறை பூட்டினைக் கண்ட ஒரு வானசாஸ்திரி அதன் சாவித்துவாரமே அதன் அமைப்பின் நுட்பத்தைக் காட்டிவிடுகிறதென்று அறிந்தவனாகத் தனது பையிலிருந்த இரு எழுத்தாணிகள் வழி அந்தத் சூட்சுமத்தைத் திறந்தான். உள்ளே அசப்பில் ஒன்று போலிருந்த நான்கு அறைகள் மூன்று வரிசையில் இருந்தன. எதிலும் ஒரு துளிக் கூட மாற்றம் இல்லை. அதே நிறப் படுக்கை விரிப்பு, மலர்கள், மரக்கட்டில் பதுமைகள் என அவர்கள் ஆச்சரியமடைந்து தங்கள் படுக்கைக்குப் போனார்கள். விடிகாலையில் விழித்த மனிதன் இரவில் தான் ஒரு சொப்பனம் கண்டதாகவும், அதில் ஒரு மணற்புலி தன்னைத் துரத்தியதாகவும் தப்பி ஓடிக் களைத்த துர் சொப்பனம் அது என்றான். அதற்கு இரண்டாமவன் அவன் சொன்னது தன்னுடைய கனவென்றும் மணற்புலி தன் கனவிலும் நடமாடியதாகச் சொன்னான். இல்லை அக்கனவு தன்னுடையது என அருகிலிருந்த மற்றப் பத்து வான சாஸ்திரிகளும் சொன்னார்கள். பன்னிரெண்டு வான சாஸ்திரிகளும் ஒரே கனவைக் கண்டிருந்ததைச் சொன்ன ஒருவன் இந்த விடுதி அசப்பில் மட்டுமல்ல. கனவிலும் ஒன்றையே யாவரிடமும் பிரதிபலிக்கின்றது. இங்கு தொடர்ந்து சயனிப்பவர்கள் வேறு மனிதர்களாகிவிடுவார்கள் வெளியேறிவிடுங்கள் என்றான். பின் தெற்கு சயனமும் திறக்கப்படவில்லை.

## மேற்கு சயனம்

சதா பெண்சுகத்தில் மிதந்து கொண்டேயிருக்கும் நீலன்



படிப்பகம்

www.padippakam.com

தனது ப்ரிய கன்னிகளுடன் களியாட்டத்திற்குப் பாலை வந்தபோது உத்கலாவின் இடிபாடுகளைக் கண்டவனாக அதன் மேற்கு சயன அறைக்கு வந்தான். அந்த பகுதியில் இரண்டே அறைகள்தாம் இருந்தன. அதில் ஓர் அறை சதா ஒளியோடும், ஒரு அறை சதா இருளோடுமிருந்தன. நீலன் தனது கன்னிகளோடு இருளின் அறையைத் தனதாக்கிக் கொண்டான். உறக்கம் ஒரு தாரையைப்போல அவர்களைச்சுற்றிக் கொண்டிருந்தது. சிரிப்பும் குடியுமாக உறக்கம் கொண்ட அவன் இரவில் தாகம் மிகு கொண்டு எழுந்தபோது அந்த அறையில் எந்தப் பொருட்கள் எங்கிருக்கின்றன எனத் தெரியவில்லை. தாகம் மீற அடுத்த அறைக்குப் போய் படுத்துக்கொண்டான். காலையில் ஒரு பெண் கூச்சலிட்டபோது நீலன் எழுந்து வெளியே வந்தான். அந்த பெண்கள் வியப்புக் கலையாமல் அவனை பார்த்து நீ யார் எனக் கேட்டார்கள். அவன், தான் நீலனென்றதும் சிரித்தார்கள். நீலனுக்கு இது புரியவேயில்லை. அப்போது நீரில் பிரதிபலிக்கும் தன் உரு கண்டபோது தனது உருமாறி தான் ஒரு சிறுவனாக இருப்பதைக் கண்டான். பெண்கள் தங்களோடு வந்த யுவனைக் காணாது தேடியபோது நீலனுக்கு மிகுந்த கோபம் வந்தது. ஓர் உறக்கம் கழிந்த விழிப்பில் தான் எப்படிப் பாலகனாக முடியுமெனப் புரியாமல் திகைப்புக் கொண்டான். அவன் மனம் யுவனாக விழிப்புற்றேயிருந்தது. அந்தப் பெண்கள் ப்ரிய காதலனைத் தேடியபடி காத்திருந்தனர். தான் நீலனென நம்ப வைக்க மறுநாளில் இரவில் அதே அறையில் பெண்களைத் துயில் கொள்ள செய்தான். அன்றும் அவன் படுத்த பிறகு தாகம் மிகுதியாகவேயிருந்தது. மறுநாளில் விழித்துப் பார்த்தபோது பெண்கள் வயது கலைந்த சிறுமிகளாக இருந்தார்கள். நீலன் இப்போது உருமாறி முதியவனாக விழித்தெழுந்தான். தங்கள் வயது கலைந்ததின் வியப்பில் விடுபட முடியாமல் வெட்கித்தவர்களாக ஒருவரையொருவர் பார்க்கக்கூட இயலாமல் போனபிறகு அந்தச் சயனமும் மூடப்பட்டது.

உத்கலாவின் சயன அறை என்னை வெகு நாட்களாகவே ஈர்த்தது தேடி அலைந்து வரைபடங்களிலும் துணை தேசாந்திரிகளிடம் கேட்டு அறிந்தவனாக ஓர் இரவில் நான் பிரவேசித்தபோது நகரின் மைய வழியாக உள்ளே புகுந்து போனேன். சயனவிடுதியில் நான்கு அறைகளும் சந்திக்கும் மைய அறையொன்று இருந்தது. சயனவாசம் கண்டவனாக நான் மையப் படுக்கையில் படுத்துக்கொண்டேன். விழித்தபோது நான் என் வீட்டின் படுக்கையில் எழுந்தேன். வியப்புப் பிடிபடாமல் கேள்வியுற்றேன். உத்கலா என்ற நகரம் வரைபடத்தில், நிலவெளியில் எங்கும் இல்லை என்றும், அது ஒரு சாயை எனவும் உங்கள் எங்கள் ஊரின் புறவெளியிலும், தொலைதூர மலையிலும் அறியாத பாதைகளின் நெருக்கத்திலும் அது தானே உருக்கொள்ளக் கூடியதென்றும், பார்ப்பவர்களின் கண்ணுக்குப் புலப்படக்கூடிய எந்த நிலத்திலும் கால் ஊன்றாத உத்கலா, ஒரு வண்ணத்துப்பூச்சியின் கால்களில் ஒட்டிக்கொண்டு பறந்தலைவதாகவோ, எழுதப்படாத ஒரு வாக்கியத்தில் வந்தமரக் காத்திருப்பதாகவும் சொல்கிறார்கள்.

•

## ஓர் அழைப்பு

சலிப்புறாத
மீள் திருப்பிய ஒலி நாடாபோல்
மீண்டும் அழைக்கிறேன்
உன்னை ஒரே குரலில்.
இலக்கண வரம்புகள் உடைத்து
உனக்கான சொற்களைத்
தேடிச் சலித்துக் களைப்புற்றேன்
எனது மொழியின் போதாமையுணர்ந்து.
மீயொலி முதல் பேரொலி வரை
சப்தித்துச் சோர்ந்து
சைகைகளால் நான் கடத்திய செய்திகள்
அர்த்தமற்று நடனமிடும் பைத்தியத்தை
நினைவூட்டியிருக்கக்கூடும் உனக்கு.
புரிதலுக்குட்பட்டதென
நான் அனுப்பிய எல்லா சமிக்ஞைகளும்
உனது செவியிருக்கும் திசையறியா
அகால வெளியில் அலைந்து திரிந்து
என்னுள்ளேயே புகலுறுகின்றன.
உனக்கான மொழியை இனம் காணும்
எனதெல்லா முயற்சியும் தோற்று
மொழி குறித்த பிரக்ஞையற்றிருக்கும்
பொழுதொன்றில்
எனது ஆவலனைத்தையும்
விரல் நுனியில் தேக்கி
உனைத் தீண்டும் மென்மையான தொடுதலில்
நீயுணரக்கூடும்
நான் சொல்ல வந்த எல்லாவற்றையும்.

கே. ஸ்டாலின்



படிப்பகம்

www.padippakam.com

ஜீ. முருகன்

# மகாவிஜயம்

சூரியனிலும், சந்திரனிலும், நட்சத்திரங்களிலும், அடையாளங்கள் தோன்றும்; பூமியின் மேலுல்ல ஜனங்களுக்கு தத்தளிப்பும், இடுக்கணும் உண்டாகும்; சமுத்திரமும், அலைகளும் முழக்கமாய் இருக்கும். வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும். ஆதலால் பூமியின்மேல் வரும் ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம். அப்போது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும், மகிமையோடும் மேகத்தின்மேல் வருகிறதைக் காண்பார்கள்.

லூக்கா *21:25:27*


மைக்கலாஞ்ஜெலோ

சிறிய நகரம்தான் என்றாலும் தெய்வீக ஒளி ஒன்று சூழ்ந்திருப்பதாகக் கருதி இந்நகரத்தை காண வெகு தொலைவிலிருந்தெல்லாம் ஆட்கள் வரத் தொடங்கி யிருந்தார்கள். எந்த மலைத் தொடரோடும் தொடர்பற்று தனித்திருந்த ஒரு உயரமான மலைக்குன்றின் கிழக்குச் சரிவில் அமைந்திருந்ததால் மாலையில் இந்நகரத்தின்மேல் பெரும் நிழல் ஒன்று கவிந்தது. மழைக்காலங்களில் தேக்கமற்று உருண்டு ஓடும் நீர், நகரத்தைப் பரிசுத்தமாக்கிவிட்டு ஒரு அகன்ற ஏரியில் சென்று கலந்தது. அன்னசத்திரங்களும், மடங்களும் கொண்ட வீதிகளில் காவி உடைதரித்த சாதுக்களையும், ரிஷிகளின் ஆஸ்ரமங்களுக்கு வருகைதரும் வெளி நாட்டுக் காரர்களையும் காணலாம்.

ஒரு தீயகனவுக்குள் சிக்கும் வரை இந்த நகரம் பேரமைதியின் தூய காற்றையே சுவாசித்துக் கொண்டிருந்தது. கூச்சலும், குழப்பமும், களேபரமும் கொண்ட இக்கனவினுள் அது தன்னை மூழ்கடித்துக்கொண்டதை யாரும் அவ்வளவு எளிதாக மறந்துவிடவும் முடியாது.

முதல்வரின் வருகைக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு பின்னிரவில்தான் அது தொடங்கி யிருக்கவேண்டும். அதிலும் கட்சித்தொண்டர்கள் நடுசாமத்தையும் தாண்டி வேலை செய்துவிட்டு, களைப்பில் உறங்கப்போய்விட்ட பின்புதான் நடந்திருக்கவேண்டும். பெரியார் சிலை சந்திப்பை சுற்றியிருந்த சுவர்களில் தலைவரின் உருவப்படங்கள் ஒட்டப்பட்டிருந்த போஸ்டர்களுக்கு மேல் அடாவடித்தனமாக அவை ஒட்டப்பட்டிருந்தன. வெள்ளைத்தாளில் சிவப்பு மையினால் பின்வருமாறு அச்சிடப்பட்டிருந்தது.

'பூமியில் மீண்டும் கடவுளின் சாம்ராஜ்யம்! ஜுன் 8 இரவு 12.00 மணிக்கு....இடத்தில் கடவுள் எழுந்தருளப்போகிறார்'

'கடவுள்' என்ற வார்த்தையை மட்டும் பெரிய எழுத்தில் அச்சிட்டிருந்தார்கள்.

தாலுக்கா அலுவலகத்தின் சுவர், அதை ஒட்டிய கைவிடப்பட்ட ஒரு பொதுக்கழிவறைச் சுவரிலும், எதிர்சாரியிலிருந்த தேவாயலத்தின் சுவரிலும், பெரியார் சிலையை சுற்றி கட்டப்பட்ட சுற்றுச்சுவரிலும் அது ஒட்டப்பட்டிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

முதல்வர் வருகை தரும் அதே இரவில் கடவுளும் இந்நகருக்கு விஜயம் செய்யப்போகிறார்! பொழுது புலரும் போதே இந்த விஷயம் நகரத்தின் ரத்தநாளங்களில் கலந்து பரவியது. முதல் பார்வைக்கு சாதாரண அத்துமீறல்போல் தோன்றினாலும் அந்த வாசகம் எல்லோரையும் திகைப்பில் ஆழ்த்தியது.

சிவப்பு மையினால் அச்சிடப்பட்டிருந்ததால் தோற்றத்தில் அது ஏதோ கம்யூனிஸ்ட்டுகளின் சுவரொட்டிகள் போலவே இருந்தாலும் அவர்கள் இதை ஒட்டியிருக்கமுடியாது. 'கடவுள்' என்ற இடத்தில் 'காரல்மார்க்ஸ்' என்று வேண்டுமானால் அவர்கள் எழுதியிருக்கக்கூடும்.

தேவன் பூமிக்கு வரப்போவதாகவும் பரலோக சாம்ராஜ்யத்தை நிறுவப்போவதாகவும், சொல்லிக் கொண்டிருப்பவர்கள் கிருஸ்துவர்கள்தான். அவர்கள் ஒருவேளை இதை ஒட்டியிருக்கலாம். அதிலும் அருகிலேயே பழமையான தேவாலயம் ஒன்று இருக்கிறது. அதன் சுவர்களில் கூட அந்த விஷமத்தனமான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. ஆனால் 'எழுந்தருளல்' என்பது அவர்களுடைய பாஷையில்லை; இந்துக்களுக்குரியது. எல்லாவற்றையும், 'அவன் கேட்டுக்கொண்டிருக்கிறான்', 'பார்த்துக்கொண்டிருக்கிறான்' என்றுதான் சொல்லிக் கொண்டிருப்பார்களே தவிர ஒருநாளும் கடவுள் பூமிக்கு வந்து மனிதர்களுடன் கலப்பார் என்பதை அவர்களும் நம்பியதில்லை.

முதல்வரை கடவுளாக பாவித்து தீவிர கட்சித்தொண்டன் எவனோகூட இந்த வரவேற்பை கொடுத்திருக்கலாம். 'தெய்வமே' என்பதற்கு பதிலாக 'கடவுள்' என்ற வாசகத்தை பயன்படுத்தியிருக்கலாம். ஆனால், அவர்களுடைய கட்சியின் வண்ணத்திற்கும் இந்த சுவரொட்டிக்கும் சம்மந்தம் இல்லை. அடுத்ததாக முதல்வர் பேசுவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இடமும், நேரமும் வேறு.

இதை எதிர்கட்சிகளின் சதி என்றுகூட பேசிக்கொண்டார்கள். முதல்வர் இங்கே தொடங்கப்போகும் திட்டம் அவர் ஆட்சிக்காலத்தின் சாதனையாக எப்போதும் பேசப்படப்போகிறதே என்ற பொறாமையில் அவர்கள்தான் செய்திருக்கவேண்டும். வழக்கமான இந்த யூகமும் அவ்வளவாக எடுபடவில்லை.

பிரசித்திபெற்ற பல கோவில்களும், மடாலயங்களும், ஆஸரமங்களும் மலிந்துகிடக்கும் இந்த நகரத்தில், இதையெல்லாம் விட்டுவிட்டு கடவுள் ஏன் இந்த இடத்தை தேர்ந்தெடுக்க வேண்டும் என்றுதான் ஒருவருக்கும் விளங்கவில்லை. இங்கே பேருந்துகளுக்காக நிற்கிற ஜனங்கள் தனக்காகத்தான் காத்துநிற்கிறார்கள் என்று கடவுள் தவறாகத்தான் புரிந்து கொண்டிருக்கவேண்டும்.

கட்சித்தொண்டர்கள்தான் வருத்தமுற்று காணப்பட்டார்கள். தலைவரின் வருகை எங்கே ரத்தாகிவிடுமோ என்று பயந்தார்கள். லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவிடப்பட்டு செய்யப்பட்ட அலங்காரத்தையெல்லாம் அவர் பார்க்காமல் போனால் என்ன ஆவது?

மத ஸ்தாபனங்களும், ஆன்மீக இயக்கங்களும் தங்களுக்குள் கூடிப்பேசின. பத்திரிக்கைகள் எழுதின. தொலைக்காட்சிகள் பல்வேறு தரப்பினரின் கருத்துக்களை விவாதித்தன. ஆரம்பத்தில் சலசலப்பாகவும், புரளியாகவும் இருந்த இச்சம்பவம் பின்பு, யார், எப்படி, எதற்காக, என்ற பேச்சாக மாறி, கருத்துக்களின் ஒருங்கிணைப்பாக திரண்டு வளர்ந்தது.

எண்ணிக்கையற்ற கேள்விகள் நகரத்தின் மேல் வட்டமிட்டன.

கடவுள் வரப்போவது உண்மையானால் அது எந்த கடவுள்? ஆண் தெய்வமா, பெண்தெய்வமா? கோவில் சிற்பங்களிலோ, ஓவியங்களிலோ, நாடகத்திலோ, சினிமாவிலோ பார்த்த மாதிரியா அல்லது வேறுமாதிரியா? மனிதனின் உருவத்தைத்தான் ஒத்திருப்பாரா? வேறு ஏதாவது ஒரு மிருகத்தைப்போலவோ, பறவைகள் போலவோ இருப்பாரா? அல்லது இதுவரை காணா புதுவகை உருவத்துடனா? ஆடை, ஆபரணங்கள் அணிந்திருப்பாரா அல்லது நிர்வாணமாகவா? எந்த மொழியில் பேசுவார்? நகைச்சுவையாக பேசுவாரா, உம்மென்று இருப்பாரா?

நன்மை விளைவிப்பாரா, தீமை விளைவிப்பாரா? நாடு சுபீட்சமடையுமா? சமூகத்தை எப்படி மாற்றி அமைக்கப்போகிறார்? காலத்தோடு ஒட்ட ஒழுகல் என்பதற்கு தக கட்சி தொடங்கி ஆட்சி அமைப்பாரா?

ஒருவேளை அவர் குடும்பத்துடன் வரக்கூடுமென்றால் அவருக்கு இந்த ஆலயங்கள் வசதிப்படுமா? கடவுளுக்கு உறக்கம் உண்டென்றால் ஆலயத்தில் எங்கே படுத்துறங்குவார்? உணவு உண்பவராக இருப்பாரானால் கழிவறை வேண்டியிருக்குமே அதை எங்கே நிர்மாணிப்பது? அவருக்கு மதுவருந்தும் பழக்கம் இருந்தால் எத்தகைய மதுவை அவருக்கு பறிமாறுவது? கம்ப்யூட்டரை எவ்விதத்தில் பயன்படுத்திக் கொள்ளப்போகிறார்? இணையங்களில் 'கடவுள் டாட் காம்' ஒன்று தொடங்குவாரா?

பல காலமாக தன் மேய்ப்பனுக்காக காத்திருந்த கிறிஸ்துவர்களோ ஆச்சரியப்படத்தக்க வகையில் வரப்போவது இயேசுவாக இருக்கமுடியாதென்றார்கள். அப்படியே அவர்தான் வரப்போகிறார் என்று நம்பியவர்களுக்கும்கூட சில குழப்பங்கள் இருந்தன. மனிதர்களின் பாவங்களை தொடர்ந்து அவர் மன்னிப்பாரா? இயேசு இந்த நகரத்திற்கு வந்தால் போப் இங்கே வந்து இவரை சந்திப்பாரா, இல்லை இயேசுவே போய் அவரைப்பார்க்கவேண்டியிருக்குமா? பாவமன்னிப்பு வழங்கிய பின்பான ஓய்வு நேரங்களை அவர் எப்படி கழிப்பார்? கல்வாரி மலையில் உயரே இருந்து அவர் கவனித்துக்கொண்டிருந்த சூதாட்டம் அவருக்கு கைகொடுக்குமா?

முஸ்லீம்களோ பெரும் மௌனம் காத்தார்கள். அவர்களால் அல்லாவின் வருகையை நிச்சயிக்க முடியவில்லை. உருவமற்ற அல்லா உருவுடன் வருவதை அவர்களால் எப்படித்தான் நம்ப முடியும்?

பெரியார் சிலை சந்திப்பை ஒட்டி கடைகளின் முன்னால் நடமாடிக்கொண்டிருந்த ஒரு பிச்சைக்காரனும்,



படிப்பகம்

www.padippakam.com

தேவாலயத்தின் உச்சியில் சிலுவையின் மேல் உட்கார்ந்திருந்த கழுகும் இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தார்கள். ஆரம்பம் முதல் எல்லாவற்றையும் பிச்சைக்காரன் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த போஸ்டர்கள் ஒட்டப்பட்டது முதல் அவனுக்குத் தெரியும்.

மனிதர்களின் உரையாடல்களை அவன் கேட்கிறான். அவர்கள் அச்சம் கொள்வதையும், கேலி பேசுவதையும் அவன் கவனிக்கிறான். அவனைப் பொருத்தவரை எல்லா நிகழ்வுகளையும் போல இதுவும் ஒன்று. மனிதர்கள் இங்கும் அங்கும் போகிறார்கள், வருகிறார்கள், கூடிப் பேசுகிறார்கள், போண்டா, பஜ்ஜி சாப்பிடுகிறார்கள், டீ அருந்துகிறார்கள் பின்பு கலைந்து செல்கிறார்கள். அங்கே நிற்பவர்களின் முகங்களை சற்று கவனித்தபடி ஏதோ ஒரு விதத்தில் ஆட்களை தேர்ந்தெடுத்து "நமஸ்காரம் சார், ஒரு டீ வாங்கிக் கொடுங்க சார்" என்று இரண்டு கைகளையும் குவித்து அவர்களை வணங்குவான்.

என்னவென்று விளங்காமலேயே கடவுளின் வருகையை அவனும் எதிர்பார்த்திருந்தான்.

இந்த குழப்பத்தை முன்னிட்டு முதல்வரின் வருகை ரத்தானது. கேள்வியுற்ற தொண்டர்கள் மனமொடிந்து போனார்கள். இது திட்டமிட்டு செய்யப்பட்ட சதி என்பதில் எள்ளளவும் அவர்களுக்கு சந்தேகமில்லை. முடியுமென்றால் கடவுளின் வருகையைக்கூட ரத்துசெய்ய எண்ணம் கொண்டிருந்தார்கள். அவருடைய பிரதிநிதிகள் எங்கே இருக்கிறார்கள்? யார் மூலம் அதைசெய்வது? எதுவுமே அவர்களுக்கு விளங்கவில்லை.

இதனால் பெரும் கலவரம் ஏதாவது நிகழக்கூடுமென்று பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது. முதல்வருக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நடவடிக்கைகள் கடவுளின் வருகைக்கு என்றானது. இந்த சதியில் ஈடுபட்டவர்களை தேடும் பணி துரிதமாக நடந்துகொண்டிருந்தது. அரசாங்கத்தைப் பொறுத்தவரை இந்த விவகாரம் வீண் வதந்தியே தவிர வேறில்லை. நிச்சயம் அவர்களை கைது செய்துவிடுவோம் என்றார்கள். பெரியார் சிலை சந்திப்பில் எந்த கூட்டமும், ஆர்ப்பாட்டமும், நடத்தக்கூடாது என்று தடைவிதித்திருந்தது. அந்த ரகசிய போஸ்டர்கள் அகற்றப்பட்டன.

ஆரம்பத்தில் இது ஏதோ ஒரு புரளி போல தோன்றினாலும் இதை நம்பாமலும் இருக்க முடியவில்லை. இவ்வளவு நாள் வெறுமனே நம்பிக்கொண்டிருந்த ஒரு விஷயம் நிஜத்தில் நிகழப்போகிறது. கடவுள் பூமிக்கு வரப்போகிறார். எப்போதோ அல்ல, இன்று இரவு அது சம்பவிக்கப்போகிறது. அதை நினைத்தபோதே பெரும் பீதி ஒன்று அவர்களை கவ்வியது. சகலத்தையும் உருவாக்கியவர், எல்லாவற்றையும் இயக்குபவர், பூமிக்கு வரப்போகிறார்; மனிதர்களின் செயல்பாடுகளை நேரடியாக பார்வையிடப்போகிறார்; அவருக்கு மனிதர்களைப் பற்றிய எல்லா ரகசியங்களும் தெரியப்போகிறது. இதுதான் அவர்களை அச்சுறுத்தியது.

கடவுள் ஏற்கனவே நகரத்திற்கு வந்தவிட்டார் என்பது போன்ற புரளி ஊர் முழுவதும் பரவியது. ஏதோ ஒரு லாட்ஜில் ரூம் எடுத்து தங்கிகொண்டு தனது ஆட்கள்மூலம் திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறாராம்.

கோவில்களையும், மடாலயங்களையும், ஆஸ்ரமங்களையும் சார்ந்து வாழ்ந்தவர்களின் மனங்கள் தீயாய் பற்றி எரியத் தொடங்கின. இதுவரையிலான அவர்களுடைய நம்பிக்கைகளும், சடங்குகளும், ஸ்திரத்தன்மையும் கடவுளின் வருகையால் எங்கே சிதறுண்டு போகுமோவென்று அஞ்சினார்கள். எல்லாம் அம்பலத்திற்கு வரப்போகிறது. புராண இதிகாசப் புத்தகங்களை சுருட்டி அவர் சிகரெட் புகைக்கப் போகிறார்.

அவருடைய வருகையை எப்படி தடுத்து நிறுத்துவது என்பதுதான் ஒருவருக்கும் புரியவில்லை. சூன்யக்காரர்களோ இது பிசாசுகளின் வேலையாகத்தான் இருக்கும் என்றார்கள். கடவுள் மிக நல்லவர், ஒருநாளும் அவர் பூமிக்கு வந்து இப்படி மனிதர்களை கலவரத்திற்குள்ளாக்கமாட்டார் என்று நம்பினார்கள் சில பக்தர்கள்.

சமீபத்தில் பிரபலமாகியிருந்த பீடி புகைக்கும் ஒரு சாமியார் கலக்கத்துடன் காணபட்ட தன் சீடர்களுக்கு சொன்னார்:

"இதற்காக நீங்கள் அஞ்சதேவையில்லை பிரபஞ்சமே கடவுளின் சரீரமா இருக்கும்போது இது எப்படி நிகழ முடியும்? தனது உடலின் ஒரு பகுதிக்கு, முழு உடலும் எப்படி விஜயம் செய்யமுடியும்?"

ஒரு கவிஞன் எழுதினான்,

'மொழி வெளியில் இருப்பற்று அலைகிற ஒரு சொல்தான் கடவுள்' என்று.

"ஏன் இந்த மனிதர்கள் கடவுளோடு இப்படி விளையாடுகிறார்கள்?, எல்லாமே இவர்களுக்கு விளையாட்டுபோல அல்லவா ஆகிவிட்டது" நம்மையும் மீறிய சக்தி ஒன்று இருக்கிறது என்பதை நம்பும், மிதவாத மனிதர் ஒருவர் ஆதங்கப்பட்டார்,

ஆஸரமத்திற்கு பக்கத்திலிருக்கும் ஒரு உணவகத்தில் கேழ்வரகு ரொட்டியை மென்று கொண்டே ஒரு வெள்ளைக்காரன் சொன்னான்,

"சில்லி கேம்"

போலீஸ் உத்தரவின் பேரில் மூடிக்கடந்த ஒயின்ஷாப்பை பார்த்துவிட்டு ஒரு குடிகாரன் திட்டினான், "லவடிக்கேபால்" யாரைத் திட்டினான் என்பது தெரியவில்லை.

கடவுள் மறுப்பாளர்களோ, வரப்போகும் கடவுளுக்கு கறுப்பு கொடி காண்பிக்கப்போவதாகச் சொன்னார்கள்.

கோவில்களிலும், வீடுகளிலும் குடிகொண்டிருந்த உருவங்களில் கடவுள் தன்மை வடிந்து வெளியேறிவிட



படிப்பகம்

www.padippakam.com

மனிதமனங்களை பீதிகவ்வியது. எல்லா ஆலயங்களும் பூட்டப்பட்டுவிட்டன. அர்ச்சகர்களும், பக்த சிரோன்மணிகளும் தங்களுடைய வீடுகளுக்குள் அடைந்துகிடந்தார்கள். 'கடவுள் தீயவர்களையும், ஏமாற்றுக்காரர்களையும் தனது பலிபீடத்திற்கு அழைத்துச்செல்வார்; அங்கே வைத்து அவர்களை பலியிடுவார்' என்று எவனோ ஒருவன் சொன்னதை கேள்வியுற்று பெரியகோபுரத்தின் மேல்மாடத்திற்கு ஏறிச்சென்று ஒருவன் தற்கொலை செய்துகொண்டான். சிலர் விஷமருந்தி மாண்டுபோனார்கள். பலருக்கு நோய்கண்டது.

போக்குவரத்து வேறு பாதைக்கு திருப்பி விடப்பட்டிருந்தது. தேவாலயமோ ஒருவரையும் காணாமல் வெறிச்சோடிப்போனது. இரவு பத்து மணி வாக்கில் தேவாலயத்தின் மொத்தக் கதவுகளையும் அதன் காவலாளி மூடித்தாளிட்டான்.

தேவாலயத்தை ஒட்டிய வீடு ஒன்றில் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்த ஒரு நாய் ஏனோ ஓயாமல் குரைத்துக்கொண்டே இருந்தது.

நகரத்தை பெரும் பீதி சூழ்ந்த அந்த மாய இரவில் மனிதர்கள் தங்களுடைய இருப்பிடங்களில் பயத்துடன் பதுங்கிக்கொண்டிருக்க, நகரின் தெருக்களில் கட்சித் தோரணங்கள் மட்டும் வெறுமையாக அசைந்து கொண்டிருந்தன.

கட்டளை பிறப்பிக்கவும், மேற்பார்வை இடுவதற்காகவும் அவ்வப்போது வந்து போன அதிகாரிகளின் வருகை நின்று போயிருந்தது. இதற்குமேல் ஒரு கலவரமும் அங்கே நிகழாது என்பதில் தெளிவடைந்து காணப்பட்ட காவல் துறையினர் அவ்விடத்தைவிட்டு அகன்று போய்விட்டார்கள்.

பிச்சைக்காரனுக்குதான் இது ஆச்சர்யமாக இருந்தது. 'ஏன் கடவுளை காண ஒருவரும் வரவில்லை?'


எந்த அசம்பாவிதமும் நிகழாமல் அந்த இரவு கடந்து, மறுநாள் நகரமே பெருமூச்சுடன் விழித்தெழுந்தது. வழக்கம்போல காகங்கள் கரைந்தன, பால்காரர்கள் மணியடித்தார்கள், பெரியார் சிலைக்கு அருகிலிருந்த டீக்கடையில், 'அண்ணாநகர் ஆண்டாளு...' பாடல் ஒலித்துக்கொண்டிருந்தது. மனிதர்கள் நினைத்தது போல கடவுள்பூமியில் பெரும் வெடிப்பு தோன்றி மேலெழுந்தோ, அமைதியாக வானத்திலிருந்து இறங்கியோ, ஒரு தூணை பிளந்துகொண்டோ தேவாலாயத்திலிருக்கும் இயேசுவின் உருவத்திலோ, பெரியாரின் உருவத்திலோ இவர்கள் எதிர்பார்த்தது போல எதுவாகவும் அவர் வரவில்லை.

பேரமைதி கவ்விய அந்த நடுநிசி வேளையில் ஒரு சம்பவம் நடந்தது. மூடப்பட்ட கடைகளின் தடுப்புக்குபின்னால் உட்கார்ந்து கொண்டிருந்த பிச்சைக்காரன்தான் அதைப்பார்த்தான். தாலுக்கா அலுவலகத்தின் மதில்சுவரை ஒட்டி பராமரிப்பில்லாமல் விடப்பட்டிருந்த பொதுக்கழிவறை பக்கமிருந்து ஒரு மனிதர் வெளிப்பட்டு, சாலையை கடந்து தேவாலயத்தின் சுற்றுச்சுவரை ஒட்டிய சந்தில் நுழைந்து மறைந்தார். அந்த நாயின் குரைப்பு சத்தம் நின்றது. தேவாலயத்தின் சிலுவைமேல் உட்கார்ந்திருந்த கழுகு படபடத்து எழுந்து சென்று பக்கத்திலிருந்த நெட்டிலிங்க மரத்தில் உட்கார்ந்தது. அது 'அவர்தானோ' என்ற சந்தேகம் எழுந்தாலும் இதை யாரிடம்போய் அவனால் சொல்லமுடியும்? அப்படிச்சொன்னாலும் யார் நம்பப்போகிறார்கள்? ஒருவேளை அவரை நேரடியாக சந்திக்கும் வாய்ப்பு கிடைத்திருக்குமானால் ஒரு டீ வாங்கிக்கொடுக்கச் சொல்லி அவரிடம் அவன் கேட்டிருக்கக்கூடும். ●


# உப பாண்டவம்

எஸ். ராமகிருஷ்ணன்

(நாவல்)




வெளியீடு:

அட்சரம்

130/11, மதுரா கோட்ஸ் காலனி,

விருதுநகர்-626 001


விலை : 110

பக்கங்கள் : 320




படிப்பகம்

www.padippakam.com



கேன்டன்ஸ்கி

ஒரியச் சிறுகதை:

# நடு இரவில் மனோஜ் தாஸ்

ஆசிரியரின் ஆங்கில மூலத்திலிருந்து
தமிழில் : ராஜ்ஜா

மேகத்தைக் கிழித்துச் செல்லும் மின்னல் போல அந்தப் புகைவண்டி இருளைக் கிழித்துச் சென்றது. குளிர்காலத்தின் ஓர் இரவு அது. மொத்தமான கம்பளம் ஒன்றைத் தன் முகம் வரை இழுத்துப் போர்த்திக்கொண்டு தூங்கப்போகுமுன் கண்ணாடி ஜன்னல் வழியே வெளியே பார்த்தார் சுதன்சு.

கண்ணாடி மொத்தமாக இருந்ததால் வெளியே ஒன்றும் தெரியவில்லை. ஏதோ பிம்பம் பிம்பமா... தெளிவாக இல்லாமல். மலையின் பிம்பமோ? காட்டு மரங்களின் பிம்பமோ? இருக்கலாம். கிராமம் ஏதும் அவர் கண்களுக்குப் புலப்படவில்லை. அந்தப் பகுதியைக் கடக்கும் போது ஒரு சின்ன விளக்கு வெளிச்சம்கூடத் தென்படவில்லை.

அந்த நேரம் பார்த்துத்தானா ஏதோ செய்தித்தாளிலோ, புத்தகத்திலோ படித்தது அவருக்கு திடீரென்று ஞாபகத்திற்கு வரவேண்டும்! அந்த மாதிரியான இடங்களில் கொடூரமான கொள்ளைக்காரர்கள் அதிகமாமே. குகைகளிலும் அடர்ந்த புதர்களுக்குப் பின்னாலும் ஒளிந்திருக்கும் அவர்கள் எதிர்பாராத சமயத்தில் வந்து ஓடும் வண்டியை எப்படியாவது நிறுத்தி விடுவார்களாமே!

முதல் வகுப்புப் பெட்டியில் பிரயாணம். அதுவும் தன்னந்தனியாய். சுதன்சு எழுந்து உட்கார்ந்து கொண்டார். மேல்வகுப்பில் பிரயாணம் செய்வது எவ்வளவு முட்டாள்தனம்! அதுவும் ராத்திரி நேரத்தில்!

பெரிய விளக்கை நிறுத்திவிட்டு நீலவிளக்கைப் போட்டார். வெளி உலகம் சற்றுத் தெளிவாகத் தெரியலாம் என்ற நப்பாசையில்.

ஜன்னலின் மிக அருகில் சென்றவர் பின்னோக்கித் துள்ளிக்குதித்தார். வெளியே தெரிவது 'யார்? அவரது இதயத்தில் சுருக்கென்று ஒரு வலி.

அவர் பின்னோக்கி நகர்ந்ததும் அந்த உருவம் மறைந்து விட்டது. கண்ணாடியில் தெரிந்தது தன் உருவம்தான் என்று மனதைத் தேற்றிக்கொண்டார். இருந்தும் பயம் விட்டுப்போன பாடில்லை. சற்று அதிகமாகத்தான் ஆயிற்று. அவரால் தூங்க முடியவில்லை. பீதியில் அவர் மயக்கம் போட்டு விழுந்தால் கூட ஆச்சரியப்படுவதிற்கில்லை.

கீழ் வகுப்புப் பெட்டிக்குச் சென்றுவிடலாமா என்று கூட நினைத்தார். அதற்கும் முதலில் வண்டியை நிறுத்தியாக வேண்டுமே! சங்கிலியைப் பிடித்து இழுக்கலாமா என்று யோசித்தார். ஏதாவது அபராதம் கட்ட நேர்ந்தால் கூடக் கட்டிவிடலாம். பயந்து போன செய்தியை அதிகாரிகளிடம் தெரிவிக்கும்போது சற்றுச் சங்கடமாகத்தான் இருக்கும். இருந்தும் பயத்தால் மயங்கி விழுந்து கிடப்பதை விட, அவையெல்லாம் எவ்வளவோ மேல்.

அந்த இடத்தில் வண்டியை நிறுத்தினால் கொள்ளைக்காரர்களை அவரே தாம்பூலம் வைத்து அழைத்தது போல ஆகிவிடுமே! அய்யோ! என்ன மடத்தனமான காரியம் செய்ய இருந்தார்.!

இப்போது அவர் செய்ய வேண்டியதெல்லாம் அவ்வுடைய இடத்துக்குப்போய் கம்பளத்தை இழுத்துப் போர்த்திக்கொண்டு, எதைப்பற்றியும் கவலைப்படாமல் தூங்கிப்போவதுதான்.

அவர் அந்த முடிவை எடுக்கும்போது, நீலவிளக்கு சற்றே கண் சிமிட்டியது. பின்



படிப்பகம்

www.padippakam.com

நின்று போனது. சற்று நேரம் கழித்து நன்றாக எரிய ஆரம்பித்தது.

அவரைப் பயமுறுத்துபவர் யார்? எந்தச் சக்தி அது? அவர் தூங்கப்போகும்போது இந்த விளக்கு ஏன் முறைகேடாக நடந்து கொண்டது?

விளக்கு மீண்டும் ஒரு முறை அதே மாதிரி நடந்து கொண்டது.

அந்தக் கடுங்குளிரிலும் சுதன்சுக்கு வியர்த்துக்கொட்டியது. விளக்கோடு விளையாடுவது யார்? அடுத்த நிலையம் வர இன்னும் ஐந்து மணி நேரம் ஆகுமே. இந்த நீண்ட பொழுதில் எது வேண்டுமானாலும் நடக்கலாம்.

எது ஒன்று நடக்க வேண்டுமென்று இருக்கிறதோ அது ஐந்தே நிமிடங்களில் கூட நடக்கலாம். கடுங்குளிரடிக்கும் இரவு. ரயில் பெட்டியில் தனிமையாய் ஒருவர். ஆள் அரவமே இல்லாத மலைப்பகுதி. பேயுணர்வு ஒருவரை ஆட்கொள்ள இதைவிட வேறென்ன வேண்டும்?

அந்தச் சமயத்தில்தானா அவரது நண்பர் ஒருவர் எப்போதோ சொன்ன சின்ன பேய்க்கதை ஞாபகத்துக்கு வரவேண்டும்? ரயில் பெட்டி ஒன்றில் இரண்டே இரண்டு பேர் பிரயாணம் செய்தனர். ஒருவர் மற்றவரைப் பார்த்து "உங்களுக்குப் பேய் நம்பிக்கை உண்டா?" என்று கேட்க, இரண்டாமவர் "கொஞ்சம் கூடக் கிடையாது. உங்களுக்கு?" என்று சொல்ல, முதலாமவர் சிரித்துக்கொண்டே மறைந்து விட்டாராம்.

எரிகிற அடுப்பில் எண்ணெயை ஊற்றின மாதிரி இன்னுமொரு கதை அவர் ஞாபகத்திற்கு வந்தது. அவரது வெள்ளைக்காரப் பேராசிரியர் சொன்னது. லண்டனிலிருந்து எடின்பர்க் செல்லும் புகை வண்டியில் பேராசிரியரின் மாமாவோ சித்தப்பாவோ ஒருவர் பயணம் செய்து கொண்டிருந்தார். தனிமையில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்த அவர் திடீரென்று கண்விழித்துப் பார்க்க அவர் எதிரில் பெண் ஒருத்தி இவரைப் பார்த்து சிரித்தாள். வண்டி எங்கேயும் நிற்கவில்லையே! இவள் எப்படி உள்ளே வந்தாள் என்று அவர் யோசித்துக்கொண்டே தனது கைத்துப்பாக்கியை எடுக்க முயற்சி செய்தபோது, அந்தப் பெண் இவர்மீது சாய்ந்து முத்தமிட்டாள். அதுவே இவருக்கு மரண முத்தமாய்ப் போயிற்று. அடுத்த நிலையம் வந்தவுடன் நிலைய அதிகாரியிடம் நடந்ததைச் சொல்லும் அளவிற்குத்தான் அவர் உடம்பில் உயிர் ஒட்டிக்கொண்டிருந்தது. சொல்லி முடித்ததும் ரத்த வாந்தி எடுத்து மண்டையைப் போட்டுவிட்டாராம்.

சுதன்சு நடுங்கிக் கொண்டு இருந்தார். குளிரடிக்கும் இரவில் குளிருக்காக மட்டுமில்லாமல் வேறு காரணத்திற்காகவும் நடுங்குவது என்றால் சிரிப்புதான் வரும். பெரிய விளக்கைப் போட்டார்.

அவருக்கு ஏதோ சப்தம் கேட்ட மாதிரி இருந்தது. கலக்கமடைந்த மனிதக் குரல்களோ? வண்டி தனது வேகத்தை குறைக்கிறதோ? எதற்கு? கொள்ளைக்காரர்கள் ஏற்கனவே வண்டியில் ஏறிவிட்டார்களோ? அவர் கேள்விப்பட்டதைப் போல அந்த கொள்ளைக் கூட்டத்தின் கொடூரமான தலைவி முகமூடி அணிந்திருப்பாளோ?

உடனே விளக்குகளை அணைத்தார். பெரிய விளக்கும், நீல விளக்கும் நின்றன. இருளில் மூழ்கிக்கிடக்கும் பெட்டியில் யாருமே இருக்கமாட்டார்கள் என்று கொள்ளையர்கள் அதை கண்டு கொள்ளாமல் போய் விடுவர் என்ற எண்ணம் அவருக்கு.

யாரும் இல்லை என்று விட்டுவிட்டுப் போய்விட்டால் பரவாயில்லை. ஆனால் திட்டம் தீட்டச் சரியான இடம் ஆள் இல்லாத பெட்டிதான் என்று நினைத்து கொள்ளையர்கள் இதில் ஏறிவிட்டால்! விளக்கைப் போட்டு அவர் இருப்பதைக் கண்டு பிடித்துவிட்டால் அவர் கதி அதோகதிதான்.

அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. இருக்கையில் இருந்தபடியே தன்னைச் சமாளித்துக்கொண்டு பெட்டியின் விளக்குகளுக்குப் பாதுகாப்பாக இருந்த கண்ணாடி மூடிகளை டார்ச் விளக்கின் கைப்பிடியினால் உடைத்தெறிந்தார்.

அவர் வாழ்நாளில் இதுவரை ஒரு பல்பைக்கூட உடைத்தது கிடையாது. உடைத்தால் அது வெடிச்சத்தத்தோடு சிதறுமோ? எப்படியாயிருந்தாலும் அவற்றை உடைத்துதான் ஆகவேண்டும். இல்லையெனில் கண்ணாடி மூடிகளை உடைத்ததற்கு அர்த்தமே இல்லாமல் போய்விடுமே.

அவருக்கு மாற்று வழி ஒன்று தெரிந்தது.

பல்புகளைக் கழற்றித் தன் சூட்கேசினுள் போட்டுக்கொண்டார். உள்ளுக்குள் ஏதோ ஓர் இனம் புரியாத மகிழ்ச்சி.

இப்போது அவர் நிம்மதியாகத் தூங்கலாம்.

கம்பளத்துக்குள் தன்னைத் திணித்துக்கொண்டார். ஏதோ சஞ்சலம்... அவர் மனதைப்பிடித்து பேய் உலுக்கு உலுக்கியது. சற்றுமுன் அவர் மனதில் ஏற்பட்ட மகிழ்ச்சி... சில விநாடிகளே இருந்த மகிழ்ச்சி.... அது எந்த நிலையில் ஏற்பட்டது?

மெல்ல மெல்ல அக்கேள்விக்குப் பதில் கிடைத்தது. ஒரு வினாடி தானும் கொள்ளைக்காரக் கும்பலில் ஒருவன் என்பதை உணர்ந்தார். தன்னால் அந்த மாதிரியான காரியத்தைச் செய்யமுடியும் என்று அவர் கற்பனை செய்துகூடப் பார்த்தது கிடையாது. இருந்தும் அப்போது அவர் செய்த செயலுக்கு வேறு என்னவென்று சொல்வது?

அவரிடம் இருந்த கம்பளத்தைப் போல் நூறு மடங்கு மொத்தாக ஒன்று கிடைக்காதா என்று ஏங்கினார். தன்னை முழுமையாக மூடி மறைத்துக்கொள்ளத்தான்.

●



படிப்பகம்

www.padippakam.com

தமிழ் அமிழ்தம் இதழ் எண் 16ல் மொழிபெயர்ப்புக்கு நீங்கள் கொடுத்திருக்கிற இடமும் முக்கியத்துவமும் பாராட்டும்படியாக இருக்கிறது. இந்த இதழில் திரு. செண்பகநாதன் மற்றும் நைனமார்பஸ் ஆகியோரால் மொழி பெயர்க்கப்பட்டிருக்கும் போர்ஹேவின் சிறுகதை குறித்த என் அபிப்பிராயங்களைத் தமிழ் அமிழ்தம் வாசகர்களின் நலன் கருதி இங்கே முன் வைக்கிறேன்.

போர்ஹே கதையின் முகப்பு மேற்கோளாக வரும் பைபிளின் வரிகளிலேயே பிரச்சனை ஆரம்பித்து விடுகிறது. சாமுவேல் ஆகமத்திலிருந்து சில வரிகளை விடுத்து தொடர் முற்றுப் புள்ளிகளுடன் போர்ஹே மேற்காட்டியிருக்கும் வரிகள், பைபிளிலேயே மிக வெளிப்படையானதும் பிரபலமானதுமான ஒருபால் புணர்ச்சி குறித்தவையாகும். விடுபட்ட வரிகளையும் சேர்த்து மேற்காட்டுகிறேன்.

**"I am distressed by thee, my brother, Jonothan; very pleasant hast thou been unto me; thy love to me was wolderful, Passing the love of women"**

**-Samuvel : Book2; Verse 26**

# கடிதங்கள்



பெண்கள் தமது குழந்தைகள் மீது அன்பு செலுத்துவதைப் போல என்று இது மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இங்கே குழந்தைகள் எங்கே வந்தார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. **Passing** என்பது பெண்களின் காதலை மிஞ்சும்படியான **(surpassing)** என்ற அர்த்தத்தில்தான் பைபிளில் வருகிறது. பல வகைப்பட்ட பெண்களுடன் போர்ஹேவுக்கு நட்பு இருந்தாலும் அவர் ஒரு ஹோமோ செக்ஸுவலாக இருந்தார் என்பதற்கான நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன. மேலும் ஒரு பால் புணர்ச்சிக்காக விசாரிக்கப்பட்டு சிறைத் தண்டனையடைந்த ஐரிஷ் எழுத்தாளரான ஆஸ்கார் வைல்ட் பற்றியும் மற்றொரு ஒருபால் புணர்ச்சியாளரான அமெரிக்கக் கவி வால்ட் விட்மேன் ஆகியோரைப் பற்றியும் கட்டுரைகளை போர்ஹேவின் கட்டுரைத் தொகுதியான **Other inquisitions** இல் காணலாம்.

இது தவிர ஆங்காங்கே சில வெளிப்படையான கவனக்குறைவால் உண்டான பிழைகளை சுட்டிக்காட்ட வேண்டிய கடமை இருக்கிறது. மூலப்பிரதியில் **"It had radined"** என்றுதான் வாக்கியம் அமைந்திருக்கிறது. மொழிபெயர்ப்பாளர்களோ **"It was raining"** என்று மாற்றியிருக்கிறார்கள். ஜூலியானாவை இரண்டு சகோதரர்களும் விபச்சார விடுதி நடத்தும் ஒரு பெண்ணிடம்தான் விற்கிறார்கள். ஆணிடம் அல்ல. (மொழி பெயர்ப்பில் விடுதி நடத்துபவன் ஆண் என்று இருக்கிறது) இன்னும் ஒரு பத்திக்குப் பிறகு விபச்சார விடுதி உரிமையாளர்கள் என்று பன்மையில் சொல்லியிருக்கிறார்கள் மொழிபெயர்ப் பாளர்கள். விபச்சார விடுதியின் உரிமையாளர் ஒருவர்தாம் அவரும் பெண்தான்.

கலாச்சார ரீதியான குறியீடுகள் மொழிபெயர்ப்பில் இடம்பெறும் பகுதியிலும் கோட்டை விட்டிருக்கிறார்கள். மேற்கு நாடுகளில் குதிரை ஓட்டுபவன் குதிரையை துரிதப்படுத்த ஸ்பர் என்கிற, காலணியில் அணியக்கூடிய சிறிய முள் சக்கரம் போன்ற அமைப்பினை அணிகின்றான். ஆனால் நமது மொழி பெயர்ப்பாளர்களோ தமிழ்நாட்டில் மாடுகளைக் குத்தித் துரிதப்படுத்தும் தார்க்குச்சியை இந்த இடத்தில் போர்ஹே கதையில் நுழைத்து விடுகின்றனர். மேலும் கதையின் இறுதியில் கிறிஸ்டியன் பற்ற வைத்திருப்பது சுருட்டு என்று தெளிவாக இருக்கிறது. ஆனால் இது சிகரெட் என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக தமிழை மட்டுமே நம்பி உலக இலக்கியம் படிக்கத்திட்டமிருக்கும் வாசகனுக்குச் செய்யும் துரோகமாகிவிடுகிறது. இம்மாதிரிக் காரணங்களால்தான் மொழி பெயர்ப்பாளர்களை துரோகிகள் என்று ஓர் இலக்கிய ஆசிரியன் குறிப்பிட்டிருக்கவேண்டும்.

செக்மண்ட் பிராய்டின் கட்டுரையை அநேகமாக நீங்கள் [illegible] முதலில் வெளியிட்டிருக்கிறீர்கள். அதற்கு எனது பாராட்டுக்கள் நண்பர் பஞ்சாங்கத்திற்கும் நடீன் கார்டிமர் பேட்டியும் அவசியமானதே. மொழி பெயர்ப்புக் கவிதைகளையும் நீங்கள் வெளியிட்டு உதவலாம்.

பிரம்மராஜன்
தர்மபுரி

உங்களுடைய இலக்கிய ஆர்வமும், தரமான நல்ல இதழ் நடத்தவேண்டும் எனும் உந்துதலும், நன்கு புலனாகியுள்ளது - 'தமிழ் அமிழ்தம்' இதழின் உள்ளடக்கத்தில் நீங்கள் செய்து வந்திருக்கிற பரிசோதனைகள் மூலம்.

இந்தப் புதிய பரிணாமத்துக்கு முந்திய ஒன்றிரு இதழ்கள் 'முற்போக்கு பார்வை' கொண்டது போல் தோற்றம் கொண்டிருந்தன. பொன்னீலன், சி. மகேந்திரன் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் தந்தன. திடீரென்று இதழ் புதிய மலர்ச்சி கொண்டுவிட்டது. அளவும் பெரிதாகி, பக்கங்களும் அதிகமாகி, உள்ளடக்கம் ஒரே அடியாக 'அறிவு ஜீவி' த் தளத்துக்குப் போய்விட்டது. சந்தோஷப்படவேண்டியதுதான்.

கதைகள், கட்டுரைகள், எல்லாமே ஒரு சில 'இன்டெலக்சுவல் வாசகர்களால் மட்டுமே வரவேற்கக் கூடிய தன்மையில் இருக்கின்றன. தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள்தான். செக்மண்ட் பிராய்டின் சிந்தனைகளை அறிமுகம் செய்வது நல்லதுதான். நடீன் கார்டிமருடன் உரையாடல் எத்தனை பேரால் முழுக்க வாசிக்கப்படும் என்ற சந்தேகம் எழுகிறது. நடீன் கார்டிமரையோ, அவரது புத்தகங்களையோ அறிந்திராத - அறியக்கூடிய வாய்ப்பு பெற்றிராத -



படிப்பகம்

www.padippakam.com

வாசகர்களுக்கு (தமிழ் இலக்கிய வாசகர்களுக்கே) இது எவ்வளவுக்கு புரிந்து விடும்? இதைவிட நடீன் கார்டிமர் பற்றிய அறிமுகமும், அவர் நாவல்கள் அறிமுகமும் தந்தால் பயனுள்ளதாக இருக்கும். ஒரு நாவலின் சுருக்கம் வெளியிட்டால் மிக உபயோகமானதாக அமையும்.

இப்படி எவ்வளவோ செய்யலாம். ஆனால், தேவையற்ற விஷயங்களை மொழி பெயர்ப்பதிலும், ஆரம்பமும் இல்லாத முடிவும் தெரியாத எதையாவது (புத்தக) விஷயத்தை பக்கம் பக்கமாகத் தருவதிலுமே சிற்றிதழ்களின் அறிவு ஜீவித் தனமாக இருக்கிறது.

வல்லிக்கண்ணன்
சென்னை

இதழின் 'லே அவுட்' நன்றாக இருக்கிறது. ஜெயமோகனின் பழைய கடிதம் வழக்கம்போலவே எரிச்சலூட்டுகிறது.

வி. சுரேஷ்
மேட்டூர்

இதழ் (16) வடிவமும் உள்ளடக்கமும் மிகச் சிறப்பாக இருந்தன. மனுஷ்யபுத்திரனின் கவிதை இவ்விதழின் மிகச்சிறந்த படைப்பாக இருக்கிறது.

ரமேஷ்பிரேதன்
புதுச்சேரி

தமிழ் அமிழ்தம்' பழைய இதழ்களைவிட இந்தப் புதிய இதழ் பலவிதங்களிலும் மனதைக்கவரும் படைப்புகளைத் தாங்கி வந்திருக்கின்றன.

போர்ஹேமா, டினோ புஸாடி, பால் ஸக்காரியாவின் கதைகள் நல்ல அனுபவத்தைக் கொடுத்தன. ஐம்பதாண்டுகளைக் கடந்த நிலையில் கூட மௌனியின் கதை நல்ல வாசிப்புத் தன்மை கொண்டதாகவே உள்ளது. ஜெயமோகனின் கடிதம் தனித்த கட்டுரை போல விமரிசனம் பற்றிய கருத்துக்களை நம்முடன் பகிர்ந்து கொள்கிறது. க.நா.சு. போன்ற விமரிசகர் இல்லாதது இப்போது பெரும் குறையாகப்படுகிறது. வாசிப்பின் சுதந்திரம் என்கிற பெயரில் ஒரு படைப்பை ஒட்டித் தவறான கருத்துகள் முன் வைக்கும் போதெல்லாம், வருத்தமாக உள்ளது. சமீபத்தில் நான் கலந்து கொண்ட கூட்டமொன்றில், ஒரு நாவலில் ஒரு பாத்திரம் பேசும் வரியொன்றை அந்த நாவலாசிரியரின் கூற்றாக மாற்றிப் புனைந்து அரங்கத்தின் முன்வைத்துப் பேசியது, நாம் இருப்பது இலக்கிய அரங்கா, அரசியல் மேடையா என்று கேள்வி எழுந்தது. நல்ல அழகியல் விமரிசனம் செழுமையாக வேர்விட்டு வளராத நம் சூழலின் பெரும் குறை. இதழ் நிறைவாக உள்ளது.

பாவண்ணன்
பெங்களூர்


### தாமரைச் செல்வி பதிப்பகத்தின் விற்பனையில்...

1. மலைகளைத் தவிரவும் எமக்கு நண்பர்கள் இல்லை - குர்தீஸ் கவிதைகள் (மொ.பெ.) யமுனா ராஜேந்திரன் — ரூ. 50.
2. எனக்குள் பெய்யும் மழை -22 ஆசிய பெண் கவிகள் தொகுப்பு (மொ.பெ.) யமுனா ராஜேந்திரன் — ரூ. 75
3. எப்போதாவது ஒரு நாள் நட்சத்திரன் செவ்விந்தியன் — ரூ. 25
4. சீனக்கவிதைகள் - (மொ.பெ.) கல்பனா — ரூ. 30
5. சனங்களின் கதை - த. பழமலய் — ரூ. 30
6. தாராவிச் சித்திரங்கள் - ஆறாவயல் பெரியய்யா — ரூ. 25
7. பட்டாம்பூச்சி விற்பவன் - நா. முத்துக்குமார் — ரூ. 25
8. நியூட்டனின் மூன்றாம் விதி - நா. முத்துக்குமார் — ரூ. 25
9. வெட்கம் தொலைத்தது - ந. விச்வநாதன் — ரூ. 20
10. எப்படி இருக்கிறாய் - ராகப்பிரியை — ரூ. 30
11. சிலுவையில் தொங்கும் சாத்தான் கூகித் வாங்கோ (கென்ய நாவல்) தமிழாக்கம் : அமரந்தா — ரூ. 125
12. தொப்பாஸ் (பிரெஞ்சு மூலம்) தமிழில் : ஜெயராஜ் தனியேல் — ரூ. 50
13. நிழல்களுடன் உரையாடல் - மார்த்தா த்ராபா — ரூ. 50
14. ஜான் ஆபிரகாம் : கலகக்காரனின் திரைக்கதை - (தொகுப்பு) — ரூ. 80.
15. புகலிட சினிமா - (விவாதக் கட்டுரைகள்) யமுனா ராஜேந்திரன் — ரூ. 60
16. பைசைக்கிள் தீவ்ஸ் - விக்டோரியா டி சிகா (மொ.பெ.) அஜயன்பாலா — ரூ. 30
17. அரசியல் சினிமா - 16 இயக்குநர்கள் யமுனா ராஜேந்திரன் — ரூ. 75
18. ஆப்ரிக்க சினிமா - யமுனா ராஜேந்திரன்
19. மக்களுக்கான சினிமா - (தொகுப்பு) — ரூ. 30
20. நாகசுர சக்கரவர்த்தி திருவாடுதுறை ராஜரத்தினம் பிள்ளை வரலாறு — ரூ. 35
21. திராவிடர் கட்டடக்கலை - மூவோ துப்ருயல் (மொ.பெ.) முரளி அருபன் — ரூ. 30
22. சாயும் காலம் - ஜீ. முருகன் — ரூ. 45
23. தாவரங்களுடன் உரையாடல் -எஸ். ராமகிருஷ்ணன் — ரூ. 35
24. உயிர்த் தண்ணீர் - கண்மணி குனசேகரன் — ரூ. 35
25. பனைமுனி - அபிமானி — ரூ. 30
26. உதிர்இலைக்காலம்-நா. கண்ணன் — ரூ. 30
27. உப்புக்கத்தியில் மறையும் சிறுத்தை - கோணங்கி — ரூ. 60
28. ஜார்ஜ் லூயி போர்ஹே - எஸ். ராமகிருஷ்ணன் — ரூ. 30

தொடர்புக்கு:

**தாமரைச் செல்வி பதிப்பகம்**
31/48, இராணி அண்ணா நகர், சென்னை 600 078
தொலைபேசி : 4728326
இணையதளம் : **http ://users1.50megs.com/thamarai**
மின்னஞ்சல் : **pt_arasu@usa.net**




படிப்பகம்

www.padippakam.com

# நாடோடிக் கதைகள்

தமிழில் : மணிமேகலை

## 1. இரு சகோதரிகள்

சந்தால் என்பவனுக்கு இரு புதல்வியர் இருந்தனர். ஒருமுறை அவர்கள் பாறைமேல் நெல்லைக் காயப்போட்டுவிட்டு, மர நிழலில் அமர்ந்திருந்தனர். அலகில் கனியுடன் வந்த காகம் ஒன்று அம்மரக் கிளையில் அமர்ந்தது. அப்பெண்கள் கனியை ஆவலுடன் பார்த்துக்கொண்டே இருந்தனர். அப்போது காகம் கனியை நழுவ விட்டது. அதனை எடுத்துக்கொண்டனர். நல்ல வாசனை. கனியை உண்ட அவர்கள் இப்பழத்தை

ஒன்று அக்காவைத் தின்று தீர்த்து விட்டது. உயிர்பிரியும்போது அக்கா அரற்றியபடியே கூறியவை : "பிரியமான தங்கையே, எத்தகைய கேடு கெட்ட நேரத்தில் உன்னைத் தண்ணீர் எடுத்து வர அனுப்பினேன், இனி மீண்டும் என்னால் உன்னைப் பார்க்க இயலாது. விடைபெறுகிறேன். அடுத்த பிறவியில்தான் நாம் சந்திக்க இயலும்"

அவளது அரற்றலைக் காற்றேந்திச் செல்ல, நீருடன் திரும்பி வந்த தங்கை, தன் அக்காவின் உடலில் எஞ்சிய மண்டையோட்டையும் மயிர் கற்றையினையுமே கண்டாள். அருகிலிருந்த புதரில் உறுமுகின்ற புலியைப் பார்த்ததுமே, மரத்தின் உச்சிக்கு ஏறி, நீரும் உணவும் இல்லாது, ஏழு பகலையும், ஏழு இரவையும் அழுதபடியே கழித்தாள். அப்புறம் அவ்வழியே வந்த இரு இடையர்கள் வேண்டிக்கொண்ட பின்னரே மரத்திலிருந்து இறங்கினாள். அவர்களில் ஒருவன் அவளை மணமுடித்துக்கொண்டு குடும்பம் நடத்தினான்.

இதற்கிடையே பருவங்கள் மாறின. கோடை போய் மழைக்காலம் வந்தது. புலி விட்டு வைத்த மண்டையோட்டிலிருந்து புடல் கொடியும், மயிர்க்கற்றையிலிருந்து மூங்கிலும் முளைத்து வந்தன.



எங்கே பார்த்தாய்? மேலும் இம்மாதிரியான பழங்கள் கிடைக்குமா? என காகத்திடம் வினவினர். பதிலுக்குத் தன்னைத் தொடர்ந்து வருமாறு கூறிவிட்டு, பறந்தது காகம்.

மலைகளையும் காடுகளையும் தாண்டிப் பறந்து கொண்டிருந்த காகத்தை அவர்கள் பின் தொடர்ந்தனர். அவர்கள் அலுப்படைந்து ஓய்வெடுக்கும் போதெல்லாம் காகமும் மரமொன்றில் அமர்ந்து காத்திருந்தது. கடைசியில், பல நாட்களுக்குப் பிறகு, அடர்ந்த வனத்தின் நடுவே அற்புதமான பழங்கொண்ட மரத்தை வந்தடைந்தனர். சகோதரியர் இருவரும் ஆசை தீரும் மட்டும் பழங்களை உண்டனர். தாகமாயிருப்பதை உணர்ந்த அக்கா, அருகிலுள்ள ஓடையிலிருந்து நீரெடுத்து வருமாறு இளையவளிடம் கூறினாள். இலையில் குவளை ஒன்று செய்துகொண்டு தங்கை நீர்கொண்டு வரப்போனாள். இதற்கிடையே எங்கிருந்தோ வந்த புலி

நாளடைவில் புடல் தனிந்து மெல்ல உலர்ந்தது. மூங்கிலும் பல்கிப் பெருகி சிறு தோப்பாகியது.

இடையர் இருவர் தம் ஆடுமாடுகளை அவ்வழியே மேய்ச்சலுக்கு இட்டுச் செல்வர். ஒரு சமயம் அம்மூங்கிலிலிருந்து கணுவொன்றை வெட்டிப் புல்லாங்குழல்களும் உலர்ந்த புடலிலிருந்து ஒற்றைத் தந்தி கேந்திர கருவிகளும் செய்து கொண்டனர். கொல்வதற்குப் புலிவந்த சமயம் புல்லாங்குழலையும் கேந்திராவையும் இசைத்தபோது, மூத்தவள் பாடிய பாடலின் மெட்டு வெளிப்பட்டது அதிசயமாக. யாருக்கும் எதுவும் தெரியாது என்றாலும், தன் அக்காவின் ஆவி எங்கோ சுற்றுகிறது என்பதை மட்டும் தங்கை உணர்ந்து கொண்டாள். சாவுக்குப் பின்னரும் கூட தன் அக்காவால் தன்னிலிருந்து துண்டித்துக்கொண்டு போக இயலவில்லை என்பதை அறிந்துகொண்டாள். இரு இடையரில் மணமாகாதவன், தானில்லாதபோது யாரோ வந்து



படிப்பகம்

www.padippakam.com

வீட்டை ஒழுங்குப்படுத்திப் போகிறதைக் கண்டு ஆச்சரியப்பட்டான். அம்மர்மத்தை அவனால் விளங்கிக்கொள்ள இயலாது போயிற்று.

ஒருமுறை இவ்விஷயத்தை மணமான தன் நண்பனிடமும், அவன் மனைவியிடமும் தெரிவித்தான். அவர்கள் மேய்ச்சலுக்குச் சென்றபோது, வீட்டில் என்ன நடக்கிறது என்று கண்டறிவதற்காக மரத்தின் பின்னே ஒளிந்து கொண்டாள் தங்கை. வீட்டிலிருந்து எல்லாரும் போனவுடனே கேந்திராவிலிருந்து வெளிப்பட்ட பெண் வீட்டினைச் சீர்படுத்தத் தொடங்கிவிட்டாள். அது அவளது அக்காதான். அவளைத் ஆரத்தழுவிக்கொண்டு, "என்னைத் தனியே விட்டுவிட்டு நீ போகவே இல்லை..." என்று தழுதழுக்கக் கூறினாள். இடையர்கள் இருவரும் திரும்பி வந்தபோது இதனைக் கண்டு பெரிதும் சந்தோஷப்பட்டனர். மணமாகாதவன், அக்காவை மணந்து கொண்டான். இரு குடும்பங்களும் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் கொள்ளுப் பேரப்பிள்கைள் என்று பெற்றெடுத்து ஆனந்தமாக வாழ்ந்தனர்.

# தேப்காவின் கதை

மலை முகடு என்று சொல்லும்படியான இடத்திலே ஒரு கிராமமிருந்தது. அக்கிராமத்தைச் சுற்றிலும் பெருங்காடுகளும், தொடுவானைத் தொட்டுக் கொண்டிருக்கும் மலைத் தொடர் அடுக்குகளுமாயிருந்தன. எளிதில் எட்டமுடியாத அரணாக அவ்வூர் தோன்றியது. பரந்து விரிந்த ஆலமரத்தின் நிழலில் உள்ள குடிலில் ஒரு கிழவனும் கிழவியும் வசித்தனர். அவர்களுக்கு ஒரு பிரியமான மகள் இருந்தாள். வயதான காலத்தில் ஒரு திங்கள் கிழமையன்று பிறந்த அவளுக்கு சம்பாரி எனப் பெயரிட்டிருந்தனர்.

இப்போது மணமாகும் வயதை எட்டியிருந்த அவளுக்குத் தகுந்த வரனைத் தேடிக்கொண்டிருந்தனர். சம்பாரியிடம் பருவமாற்றங்களைக் கண்டு கொண்ட அவர்கள் விரைவில் மணமகன் ஒருவனைக் காணவேண்டும். ஆனால் இவ்வளவு அழகும் பொலிவும் கொண்ட பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடுவது எளிதான காரியமல்ல. அந்த ஊரிலிருந்தும் அருகாமையிலுள்ள ஊர்களிலிருந்தும் நிறைய பேர் மாப்பிள்ளைகளென வந்து போயினர். தகுந்த வரனைக் கொண்டுள்ள பெற்றோரும், ஏராளமான ஆடுமாடுகளையும் எருமைகளையும் சீதனமாய்த் தந்து மணமுடிப்பதாய்க் கூறினர். மாப்பிள்ளை இளைஞனாய் வல்லவனாய் இருக்கவேண்டும். பக்கத்து ஊரைச் சேர்ந்தவனாய்; சாகுபடியாகும் நிலம் கொஞ்சமாவது வைத்திருக்கவேண்டும் என்று சம்பாரியின் தாய் தீர்த்துச் சொல்லிவிட்டாள்.

பக்கத்து ஊரிலுள்ள ஹதியின் மகன் மங்குலிக்கு மணமுடிப்பதென முடிவாயிற்று, மங்குலிவலுவும் திறனும் வாய்ந்தவன். ஊரிலும் மலைச்சரிவிலும் சாகுபடி நிலம் கொண்டவன். ஒரு பிரச்சனை மட்டும் இருந்தது. அவனது ஊருக்கு சிக்கலான காட்டு வழி கடந்து போயாக வேண்டும். கிழவி அதற்கு விட்டுக்கொடுக்கத் தயாராயிருந்தாள்.

திருமணமான ஒருவாரம் கழித்துப் புதுச்சூழலில் தன் மகள் எப்படி இருக்கிறாள் என்று பார்த்துவர ஆவலாயிருந்தாள். அவ்வூருக்குப் போகும் பாதையை ஒட்டியுள்ள காட்டு ஓடைக்கு புலியொன்று வந்து போவதாக மக்கள் இப்போது பேசிக்கொண்டனர். தான் வாழும் உலகில் புலிக்கும் இடமுண்டு, தானும் நரை தட்டும் வரை வாழ்ந்தாயிற்று என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டாள். எல்லாம் சரியாக நடக்கும், பயப்படத் தேவையில்லை என்று சமாதானப் படுத்திக்கொண்டாள். அஸ்தமனத்திற்குள் திரும்பி விடலாம் என்ற நம்பிக்கையில் அதிகாலையிலேயே புறப்பட்டுவிட்டாள். நவதானியங்களையும் கோழிக்குஞ்சொன்றையும் உடன் எடுத்துக்கொண்டாள். வெளியே போவதென்றால் மூங்கில் படலைச் சாத்திவிட்டுப் போகவேண்டும். இல்லாது போனால், பன்றிகள் நுழைந்துவிடும் என்று கிழவனுக்கு எச்சரித்தாள். தான் சமைத்துவைத்திருக்கும் சாமைக் கஞ்சியைச் சாப்பிட்டுக்கொள்ளுமாறு கூறவும் செய்தாள்.

நடந்து போகையில் உற்சாகமாகிவிட்டாள். இருந்தாலும், உள்ளுக்குள் பயம். திடீரென்று புதர்களிலிருந்து புலி பாய்ந்தால் என்னாவது! அவள் இடுப்பில் கொடுவாள் ஒன்று இருக்கவே செய்தது. தன் எண்ணங்களில் ஆழ்ந்தவளாய் நடந்துகொண்டிருந்தாள். சட்டென்று எங்கிருந்தோ புலி ஒன்று பாய்ந்து வந்து பாதையில் நின்றபடி அவளை ஏறிட்டது. கிழவி கலவரமடைந்தாள். ஒருவழியாய்த் தைரியப்படுத்திக்கொண்டு, "நீதானா, வேறு எதுவோ என்று நினைத்துவிட்டேன்" என்றாள். தன்னைக் கண்டதும் பீதியில் செத்து விழுந்திருக்கவேண்டும் என்று கருதியிருக்க, அவளோ கேள்விகள் தொடுப்பதைக் கண்டு புலி திகைத்தது! "நீ என்னைக் கண்டு பயப்படவில்லையா? வேறு யாரைக்கண்டு பயப்படுவாய்? என்றது. "என் வாழ்நாளெல்லாம் கண்டிருந்த ஒரு ஜீவனைக் கண்டு நான் ஏன் பயப்படவேண்டும்? நான் பயப்படுவது தேப்காவைக் கண்டுதான்'' என்று கிழவி பதிலளித்தாள். புலி சந்தேகப்பட்டது. ''தேப்கா? இந்தக்காட்டிலே அப்படியொரு மிருகத்தைக் கேள்விப்பட்டதே இல்லையே! சரி, நீ எனக்கு தேப்காவைக் காட்டவேண்டும், இல்லாது போனால் உன்னைத் தின்று விடுவேன்"

அருகிலிருக்கும் மன்னரின் லாயத்துக்கு மாலையில் தன்னுடன் வந்தால், தேப்காவைக் காணலாம் என்று கூறினாள் கிழவி.

சொன்னமாதிரி இரவில் புலி வந்து சேர்ந்தது. அன்றைக்குக் காவல் இருந்தவன் போதையில் தூங்கிவிட்டான். இதைப் பயன்படுத்திக்கொண்டு நல்லதொரு குதிரையை திருடிப்போக திருடன் ஒருவன் லாயத்தில் நுழைந்தான். அவனிடம் வில் அம்பு, கத்தி, குத்துவாளெல்லாம் இருந்தன. லாயத்தில் ஒவ்வொரு குதிரையாக நோட்டமிடுகையில் சுவர்மீது குத்துவாளை வீசிப் புதிரான சப்தமெழுப்பிக்கொண்டிருந்தான். பீதி கொண்ட புலி, வரிசையாய்க் கட்டப்பெற்றுள்ள குதிரைகளிடையே பதுங்கிக்கொண்டது. அதன் அருகே வந்த திருடன், அதன் தோலைத் தொட்டுப் பார்த்தபோது மிருதுவாகவும், ரோமங்கள் மண்டியும் இருப்பதைக் கண்டான். சந்தோஷத்துடன் அதனைச் சங்கிலியில் பிணைத்து இழுத்து வந்தான். காலையில், குதிரைக்குப் பதிலாய் புலியை இழுத்து வந்திருப்பதைக்கண்டு, திகைத்தான். இதுவரையிலும் புலியால் தின்னப்படாதிருப்பதற்காகத் தன் அதிருஷ்டத்திற்கு நன்றி



படிப்பகம்

www.padippakam.com

பாராட்டினான். புலியை மரத்தில் கட்டிவிட்டு, "நாலு கால் பிராணியே, தயவு செய்து இங்கே காத்திரு. பத்துக் கால்களையுடைய தேப்காவை கூட்டி வரப்போகிறேன்" என்றான். இன்னும் சில ஆட்களுடன் வருவேன் என்பதைத்தான் அப்படிக்கூறினான். தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடத் தொடங்கியவன், எங்கே புலி அறுத்துக்கொண்டு வந்து விடுமோ என்று பயந்து மரத்தில் ஏறி உச்சியில் அமர்ந்து விட்டான்.

இதற்கிடையே எங்கே பத்துக்கால் மிருகம் வந்து விடுமோ என்று புலி நடுங்கிக்கொண்டிருந்தது. ஒரு வழியாய்க் கயிறை அறுத்து விடுபட்டது. தப்பி ஓடுகையில் துணைக்குச் சில புலிகளையும் சேர்த்துக்கொண்டது. அவ்வாறு போகும் போது திருடன் அமர்ந்திருந்த மரத்தை வந்து சேர நேர்ந்தது. பல புலிகள் சேர்ந்திருப்பதைக்கண்டு பயத்தில் கழிந்துவிட்டான். மலத்தில் சிறிது அவன் திருடிய புலி மீது விழுந்தது. இன்னும் பீதியிலிருந்து விடுபடாத புலி அது தேப்காவிடமிருந்து வந்திருக்கவேண்டும் என்று கருதி ஏறிட்டபோது, அவனைக் கண்ணுற்றது. பயங்கரமான அம்மிருகத்துடன் அவன் வருகின்றான் என்று நிச்சயங்கொண்ட புலி "தேப்கா, தேப்கா" என்று அலற, எல்லாப்புலிகளும் தப்பியோடின.

**Village Folk-Tales of ceylm/collected & translated by H.Parker/Tisara Praksakaya, srillanka, 1973 reprint : (first edition 1910)-Vol III**


கம்ப்யூட்டர் அச்சுக்கான
100 க்கும் மேற்பட்ட
தமிழ் எழுத்துவகைகள்
குறைந்த விலையில்
கிடைக்கும்.



ஜீவா கம்ப்யூட்டர்ஸ்
பாபாஜான் பில்டிங்,
40/பி. பழைய போலீஸ் லைன் தெரு,
செங்கம் - 606 701




## சங்கருக்கு கதவற்ற வீடு

லஷ்மி மணிவண்ணன்

வெளியீடு:
ஜுபிடர்
4, குஞ்சன்விளை
மணிக்கட்டிப்பொட்டல்
நாகர்கோயில் 629 501

விலை : 20

பக்கம் 46

கவிதைகள் நவீன தமிழிலக்கிய சூழலில் கடும் நிராகரிப்புக்குள்ளாகியுள்ள நிலை குறித்து மனுஷ்ய புத்திரன் தனது 'இடமும் இருப்பும்' கவிதைத் தொகுதியில் கூறியது நினைவிற்கு வருகிறது. தமிழ்ப் பண்பாட்டின் அல்லது அன்றாட நிகழ்வின் ஏதேனுமொரு கணத்தின் மீது தன் குறுக்கீட்டை நிகழ்த்தாதபடியே இன்றைய கவிமொழி அந்நிய மடைந்துள்ளது. உரை நடைக்கும் கவிதைக்குமான வேறுபாட்டை வாசகனே தனித்துப் பார்க்க மறுக்கும் மனநிலையை இங்கு செயற்கையாக உருவாக்கிக் கொண்டதே இதற்கு காரணம். எந்தக் கலையும் அதன் நேர்மையான இயக்கத்தில் தனது ஒழுங்கமைவை / கட்டமைப்பை உருவாக்கிக் கொண்டாலும் கவிதையின் பாதை ஒற்றையடிப்பாதையாக இலக்கும், முடிவுமற்ற புதிரான பாதையாக நீண்டு போகிறது. அறிவார்ந்த உலகின் கலைப்பார்வை கவிதையெனும்போது வேறுபடுத்தி உணர இந்த இடைவெளி காரணமாயிருக்கலாம். அனுபவமிக்க ஒரு முதியவருக்கும், திறந்த புத்தகமாயுள்ள ஒரு மழலைக்குமான உரையாடலில் யாரின் வாதம் அர்த்தமுள்ளது.

இந்தச் சிக்கலான சூழலில் நண்பன் என்.டி.ராஜ்குமார் மூலம் 'சங்கருக்கு கதவற்ற வீடு' எனும் லஷ்மி மணிவண்ணனின் கவிதைத் தொகுதி வாசிக்க கிடைத்தது. தமிழில் குறிப்பிடத்தக்க இளைஞர்களின் வருகையில் இவரின் இடம் சொல்லும் படியாக இருக்குமெனும் நம்பிக்கை சற்று கேள்வியாகவே உள்ளது.

சமூகம் வகுத்துள்ள நேர்க்கோட்டை மீறுகிற, அப்பிராணியான மொழி இவருடையதென்றாலும், சில வரிகள் செயற்கையாக சமூக கட்டமைப்பிலிருந்து விலக முயல்கின்றன. தொகுப்பை ஒரே கவிதையாக பார்க்கிறபோது அந்த வார்த்தைக் கூட்டத்துக்குள் சில மின்னல்கள் வெட்டித் தெறிக்கின்றன.

தேர்ந்த கவிமொழி இவர் கைவந்தும், குழைக்கப்படாத வண்ணமாய் ஒரு மாயஉலகு சித்தரிக்கப்படாமலேயே பரிசோதனைக்குட்படுத்தி மட்டுமே மொழியை கையாண்டிருக்கிறார். தொகுப்பின் வடிவம் மிக எளிய அழகோடு வசீகரிக்கிறது. பின்னட்டையில் உள்ள வாசகம் படிக்கிற ஆவலைத் தூண்டுகிறது. முன்னுரை நம்முடலில் பூச்சிகளாய் ஊர்ந்தோடுகின்றன.

கவிதைகளில் வெளிப்படும் மணிவண்ணன், தன்னுடைய முன்னுரையிலும், பின்னுரையிலும் ஏனோ மறைந்து கொள்கிறார்.

பெ. அன்பு



படிப்பகம்

www.padippakam.com

# ரோஜா மலர்

**சி.மகேந்திரன்**

நேற்று இரவுதான் மழை பெய்திருக்கவேண்டும். நிலத்தின் வேட்கை தணிந்திருந்தது. நிலம் பசியிலிருந்து விடுபட்டு மகிழ்வுடன் இருக்கிறது என்பது செடி கொடிகளின் மலர்ந்த முகங்களில் தெரிகிறது. ஆங்காங்கே செம்மண் கலந்த நீர், மண்ணும் நீரும் கலந்து உருவாக்கிய நீர்க்கலவை. பாலுவின் மனம் செம்மண் சகதியிலும், செந்நிற நீரிலும் லயித்து நிற்கிறது. இதிலிருந்து மனதை அவனால் விடுவித்துக்கொள்ள இயலவில்லை.

ஓடி ஓடிக் களைத்துப் போன நகர வாழ்க்கையில், அவனிடமிருந்த நேசம், பாசம் அன்பு எல்லாம் உதிர்ந்து போயின. பூக்களை எல்லாம், இழந்து வாழை நார்களை மட்டும் மிச்சமாக வைத்திருக்கும் பூமாலையைப் போல பரிதாபமாக பாலு தன்னை உணர்ந்து கொண்டான்.

அதிகாலை ஆறுமணிக்கெல்லாம் அவன் ‘ஓட்டம்’ தொடங்கிவிடும். அவசர அவசரமாக 6.10 பஸ்ஸை பிடிக்கவேண்டும். பஸ் நிற்பதற்குள், இவனது கால்கள் படிக்கட்டு களிலிருந்து குதிக்கத் தொடங்கி விடுகிறன. மீண்டும் ஓட்டம். அடுத்து மின்சார ரயிலில் கால்களை நிறுத்திக்கொள்ள கொஞ்ச இடத்திற்கான போராட்டம். மின்சார ரயிலிலிருந்து, தொழிற்சாலையில் புகுந்து விடவேண்டும்.

தொழிற்சாலையின் எந்திரங்கள் பிரமாண்டமாய் மனத்திற்குள் விரிகின்றன. அதிபயங்கர மிருகத்தைப்போல கூரிய பற்களைக்கொண்ட ராட்சச சக்கரங்களும் கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாமலும் அமைக்கப்பட்டிருக்கும் எந்திரங்களின் மற்றைய பாகங்களும் ஒவ்வொன்றாக ஞாபகத்திற்கு வருகின்றன.

ஆலை ஓடத் தொடங்கி, பல்வேறு பிரிவுகளும் ஒன்றோடு ஒன்று இணக்கமாக இயங்கத் தொடங்கினால், மிகவும் அச்சுறுத்தப்பட்ட மனநிலையில் சிக்கிக்கொள்ளவேண்டியதுதான்.

பணியில் சேர்ந்த காலங்களில் பாலுவுக்கு, ஆலையின் இயக்கம் மரண பயத்தைத் தந்தது. முழு இரவிலும், இந்த எந்திரங்கள் வந்து பயம் காட்டிக்கொண்டேயிருந்தன. சில நேரங்களில் எந்திரங்களின் உறுப்புக்கள் ஒவ்வொன்றும் பல்வேறு வேடங்களைப் புனைந்து கனவில் வந்து மிரட்டும். திகில் நிறைந்த மனதுடன் கண் விழித்துக்கொள்வான். உடலைத் தொட்டு பார்த்தால் உடல் நடுங்கிக்கொண்டிருப்பதை பாலு உணர்ந்து கொள்வான்.

பத்து நாட்களுக்கு முன்புதான் காது, மூக்கு, தொண்டை - மருத்துவரைச் சந்தித்தான். யார் இவனை அழைத்தாலும் கிணற்றிலிருந்து கூப்பிடுவதைப்போல இவனுக்குக் கேட்கும். நெருங்கிய நண்பர்களிடம் ஆலோசனை நடத்தியதில் டாக்டரிடம் செல்வது அவசியம் என்பதை தெரிந்து கொண்டான். டாக்டர் ‘காதின் கேட்கும் திறன் படிப்படியாகக் குறைந்து வருகிறது’ என்றார். பாலுவுக்கு இயந்திரங்களின் பேரிரைச்சல் செவிப்பறையைக் கிழிப்பதைப்போலகேட்கத் தொடங்கியது. காதின் மடல்களைப் பரிதாபமாகத் தடவிப் பார்த்துக்கொண்டான்.

ஊரில் வாழ்ந்த இளமைக்காலங்களில் பாலுவின் காதுகளுக்குப் பாம்பு காது என்று பெயர். அக்காதான் இந்தப் பெயரை வைத்து முதலில் அழைத்தது. எதையும் மிகவும் துல்லியமாகத் தன் காதுகளின் மூலம் கேட்டுத் தெரிந்துகொண்டுவிடுவான். கூர்மையாக கேட்கும் திறனால், எந்த ஒரு கடினமான செய்தியையும் மிகவும் சுலபமாகப் புரிந்து கொள்ளமுடிந்தது. பள்ளிப்படிப்பில் புத்திசாலி மாணவன் என்று பெயரெடுத்தான். அது அவனுக்குள் ஒருவிதப் பெருமையை வளர்த்திருந்தது. அந்தப் பெருமையோடு இன்று செயல் இழந்து வரும் காதுகளை ஒப்பிட்டுப்பார்க்கிறான். எதையோ பறிகொடுத்ததைப் போன்ற உணர்வு ஏற்படுகிறது.

நகர வாழ்க்கை ஓர் அனாதை வாழ்க்கை. இதில் யாரிடம் யார் சுமையை இறக்கி வைக்கமுடியும்? புன்சிரிப்பை எல்லோரும் உதட்டில் தவழ விடுகிறார்கள். நெருங்கிப்போனால் இவர்களது சிரிப்பைப் போலவே, உறவும் நுனி உதடுகளோடு நின்றுவிடுகிறது. மனம் அன்பின் ஆழத்தை தெரிந்து கொள்வதில்லை. இதற்காக பாலு பலகாலம் கலங்கிப்போயிருக்கிறான். இவர்களெல்லாம் ஏன் இப்படி என்று... யோசித்து யோசித்துத் தலைவலியால் வேதனையடைந்த நேரங்களும் உண்டு. ஆனாலும் காலம் இவனுக்குரிய சமாதானத்தை வழங்கியது. நகர வாழ்க்கையின் அடிப்படைகளைப் புரிந்துகொண்டான். ஓட்டப்பந்தயத்தில் ஓடிவந்தவனுக்கு மூச்சு உள்வாங்கி வெளிவிடுவதற்குத்தான் நேரமிருக்கும். இந்த நேரத்தில் வேறு எதை அவனால் செய்யமுடியும். சிந்திக்க முடியும். பந்தயக் குதிரைகளில் ஒன்றாகிப்போன தனது வாழ்க்கையை தானே ஒதுங்கி நின்று கொஞ்ச நேரம் வேடிக்கை பார்த்துக்கொள்வான். இது ஒருவிதத்தில் கொஞ்சம் ஆறுதலாக இருக்கும்.

ஆழ்ந்த சிந்தனையிலிருந்து, விடுபட்டு மீண்டும் கால்பதிந்த செம்மண் நிலத்திற்கே பாலு திரும்பினான். காலணிகளைக் கடந்து செம்மண் பாதங்களின் வெண்பரப்பில் படிந்திருந்தது. முழுக்கால்ச் சட்டையின் ஓரங்களில் செம்மண்நீர், பல புள்ளிகளை வரைந்திருக்கிறது. பாலு வலது காலை லேசாகத் தூக்கிச் சாலைக்குழியில் தேங்கியிருந்த நீரில் அலையெழுப்பி விளையாடிப்பார்க்கிறான். அங்கேயே, அப்படியே அமர்ந்து அந்த நீரில் விளையாட வேண்டும் என்று ஆசை. அந்த நினைவே அவனுக்கு ஒருவிதக் குதூகலத்தைத் தருகிறது. இந்த மண் அவனுக்குள் வளர்த்து வைத்திருக்கும் நேசத்தை நினைத்து ஒரு கணம் சிலிர்த்துப் போகிறான்.

பாலு ஊரைவிட்டுப் பிரிந்து ஐந்தரை ஆண்டுகளாகிறன. எப்படியும்



படிப்பகம்

www.padippakam.com

வருடத்திற்கு இரண்டு முறை ஊருக்கு வந்துவிடுவான். ஆனால் வந்து இரண்டு அல்லது மூன்று நாட்களில் திரும்பிச் செல்லுதல் அவனுக்கு மிகவும் சங்கடமாக இருக்கும். சாப்பிட்டுக்கொண்டிருக்கும் பழத்தைப் பாதியிலேயே தட்டிவிடும்போது, ஏற்படும் பள்ளிப்பருவ எரிச்சல், இந்தச் சந்தர்ப்பங்களில் இவனுக்கு வருவதுண்டு; சில நேரங்களில் ஊருக்கு வராமல் நகரிலேயே தங்கினால் என்ன என்றும் யோசித்துப் பார்த்திருக்கிறான். ஆனால் அவனைப் பெற்று வளர்த்த, அந்த கிராம வாழ்க்கையிலிருந்து, அவனால் விடுபட்டு வாழ இயலவில்லை.

கடந்த ஒரு வருடமாக ஊருக்கு வரமுடியவில்லை. எவ்வளவோ முயற்சி செய்தும், இயலாமல் போயிற்று. லீவு கிடைக்கும் நேரங்களில் கையில் பணமிருப்பதில்லை. பணமிருக்கிற நேரத்திலோ லீவு கிடைப்பதில்லை. இன்று நாளை என்று ஒரு வருடம் கழிந்து விட்டது.

இடையில் அம்மாவிடமிருந்து மாதம் தவறாமல் கடிதம் வந்துவிடும். அதைப் போலவே தவறாமல், ஏன் ஊருக்கு வரவில்லை என்ற கேள்வியும் இருக்கும். இந்தக் கேள்விக்குள்ளிருந்த கேள்வி பாலுவுக்கு மிக நன்றாகவே புரிந்தது. அம்மாவின் சொற்கள் மிகுந்த ஆழத்தைக்கொண்டிருக்கும். பகிரங்கமாக பேச முடியாதவற்றைக்கூட நுட்பமாக குறிப்பால் உணர்த்தும் இயல்பு பாலுவுக்கு பல சமயங்களில் பிரமிப்பைத் தந்திருக்கிறது. அம்மாவின் கடிதத்தின் கடைசியில் குறிப்பிட்ட பாலுவுக்கு இன்னமும் திருமணம் செய்யவில்லையா? என்று மற்றவர்கள் கேட்கிறார்கள் என்ற வரிகள் அம்மாவின் மனநிலையை நன்றாக தெரிவித்தது. அம்மாவின் பூடகத் தன்மை குறித்து யோசிக்கிறான். பாலுவுக்கு சிரிப்பு வந்தது.

அம்மா கடிதம் தவறாமல் குறிப்பிட்டு எழுதும் மற்றொரு விஷயம், அக்கா மகளைப் பற்றியது. ரோஜாமலர் அவளுடைய பெயர். பிள்ளை ரோஜாப் பூப்போல பிறந்திருக்கு என்று மற்றவர்கள் கூறியதால் ரோஜா மலர் என்று என்ற காரணப் பெயர் வைக்கப்பட்டது.

ரோஜாவுக்கு, இப்பொழுது பத்து வயதிருக்கும். ரோஜா கைக்குழந்தையாயிருந்து நடை வண்டியைப் பிடித்து நடக்கத் தொடங்கிய காலத்திலிருந்து ஒவ்வொன்றாக நினைவுக்கு வருகிறது. கருவண்டு போலப் பளபளக்கும் கண்களை சுழற்றி 'மம்மா' என்று முதன் முதலில் அழைத்தபோது பாலு அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. 'மம்மா' என்ற மழலையை உதிர்த்து விட்டு உமிழ்நீர் வழிய, கன்னத்தில் குழிவிழக் கையை ஆட்டிச் சிரித்ததை நினைத்துப் பார்க்கிறான். அந்த முகத்தையும் மழலைச் சிதறலையும் கவனமாக எடுத்து மனத்தின் ஒரு மூலையில் பூட்டி வைத்தான். இப்பொழுதுள்ள பாலைவன வாழ்க்கையில் தேவைப்படும் போதெல்லாம் எடுத்துத் திறந்து பார்த்து ஆறுதல் பட்டுக்கொள்கிறான்.

வேலை கிடைத்து ஊரை விட்டுச் சென்றவுடன் முதலில் வந்த கடிதத்தில் அம்மா எழுதியிருந்தார்கள். 'நீ சென்றதிலிருந்து ரோஜாவுக்குக் கடுமையான ஜுரம்' என்று. ரோஜாவின் நினைவுகளிலிருந்து விடுபட முடியாத பாலுவுக்கு, இந்தச் செய்தி துடிதுடிக்கச் செய்தது. அவனையறியாமல் கண்களில் நீர் துளிர்த்து நின்றது.

ஒவ்வொரு முறையும் ஊர் செல்லும் போதும் ரோஜாவின் வளர்ச்சி, பாலுவுக்குத் திகைப்பைத் தந்தது. உடல் வளர்ச்சி மட்டுமல்ல. மன வளர்ச்சியும் கூட. அவள் பேச்சில் அப்படியொரு வெடிப்பு. அதே சமயம் ஒரு வித நளினம். அம்மாவின் சாயல் பேச்சில் அப்படியே இருப்பதைக் கவனித்து மகிழ்ச்சியடைந்திருக்கிறான். அவன் ஊர் சென்று திரும்பி வரும்வரை, அவனைவிட்டு ரோஜா பிரிவதில்லை.

கடந்த ஓராண்டில் ரோஜா எப்படி வளர்ந்திருப்பாள்? அவள் பேச்சில் எப்படிப்பட்ட சாதுரியங்கள் கனிந்திருக்கும்? நன்றாக படிப்பதாகக் கடிதத்தில் எழுதியிருந்தார்கள். படிப்பில் சுட்டியாகத்தான் இருக்கவேண்டும். பாலுவின் சிந்தனை விரிந்து கொண்டே செல்கிறது.

ஊரில் ஒவ்வொருவராகத் தென்படுகிறார்கள். எல்லோரும் நலம் விசாரிக்கிறார்கள். கள்ளங்கபடமற்ற அன்பால், வாரி அணைத்துக்கொள்கிறார்கள். மீண்டும் அவன்



அலினாஸ்

உலகத்திற்கே வந்துவிட்ட நிம்மதி. மனம் முழுவதுமாக மத்தாப்பூ கொளுத்தி விளையாடிக்கொண்டிருக்கிறது.

கிராமமே, ஒரு தோட்டத்து மலர்களைப்போல், எவ்வளவு ஒற்றுமையுடன் தெரிகிறது! மோதலும், பூசலும், இங்கும் இல்லாமல் இல்லை. பாலுவின் குறைந்த அனுபவத்தில் எத்தனை சண்டைகளைப் பார்த்திருக்கிறான். மேல் பாதி, கீழ் பாதி என்று கிராமமே இரண்டாகப் பிரிந்து கொண்டு மோதிக்கொண்ட சண்டைகள்... அண்ணன், தம்பிகள் நிலத்தைப் பாகப்பிரிவினை செய்து கொள்வதில் உருவான சண்டைகள்... கணவன் - மனைவி சண்டைகள்... என்று எத்தனையோ! இவையெல்லாம் ஒரு பகலில் அல்லது ஒரு இரவில் தீர்ந்து போய்விடும்.



படிப்பகம்

www.padippakam.com

சில நேரங்களில் சில மனிதர்கள், தனித்தீவுகளாகத் தம்மையும் தன் குடும்பத்தையும் குறுக்கிக்கொண்டு விடுவார்கள். ஊர் பஞ்சாயத்துக்களின் ஆலோசனைகளையும் சமாதானங்களைக்கூட மிகவும் சுலபமாக நிராகரித்து விடுவார்கள். ஆனாலும் கிராம வாழ்க்கை வகுத்த, எல்லைக் கோடுகளை சுலபத்தில் தாண்டுவது இவர்களுக்கும் எளிதானது அன்று. மரணம், திருமணம், ஊர் திருவிழா - இவர்களை மற்றவர்களோடு அமரவைத்து, ஒற்றுமையை உருவாக்கிவிடும். இதிலிருந்து யாரும் தப்பித்துக்கொள்ள இயலாது. எந்த ஒரு மகிழ்ச்சியையும், துன்பத்தையும், தனித்து இவர்களால் எதிர்கொள்ள முடிவதில்லை. கூட்டமாகப் பகிர்ந்து கொள்ள முடிகிறது. இது ஆதி மனித இனக்குழு வாழ்வின் தொடர்ச்சிதானோ என்று யோசித்துப்பார்க்கிறான்.

மாட்டுக்கொட்டிலின் பின்னணியில் அண்ணன் ராமு தெரிகிறார். இளமைக் காலத்தின் நட்பு. பாலுவுக்கும் ராமுவுக்கும் வயது வித்தியாசம் இரண்டு இருக்கலாம். பாலுவின் பெரியப்பா மகன்தான் ராமு. வீட்டிற்குத் தெரியாமல் இரண்டு பேரும் சேர்ந்து ஐந்து மைல்கள் நடந்தே சென்று பார்த்து திரும்பிய முதல், சினிமா மனத்தில் வேரூன்றி தனி அடையாளத்தை உருவாக்கி வைத்திருக்கிறது. ராமண்ணனிடம், ஓரிரண்டு வார்த்தைகள் பேசிவிட்டு, திரும்புகிறான்.

வீட்டை அடைந்தான் பாலு. பூவரசு மரத்தின் மஞ்சள் பூக்கள் மலர்ந்து சிரிக்கின்றன. ஒரு மாதக் குட்டியாக அவன் தூக்கி வந்து, பால் ஊட்டிய 'கருப்பன்' வாலையாட்டிக் கொஞ்சுகிறான். செவலப்பசுவின் கன்று குட்டி தாயுடன் விளையாடிக்கொண்டிருக்கிறது.

பாலுவைக்ககண்ட உடன் அவன் அம்மாவின் முகத்தில் தாய்மையின் மலர்ச்சி. வார்த்தைகளை வெளியிட முடியாத உணர்ச்சிப் பெருக்கு மௌனமாய்க் கொஞ்ச நேரம் கரைகிறது.

"மாமா வந்திருக்கு ரோஜா" என்று ஓங்கிக் குரல் எழுப்பி அம்மா அழைக்கிறார். பாலுவின் கண்கள் ரோஜாவைத் தேடுகின்றன.

ரோஜா வருகிறாள். துள்ளிக்குதித்து ஓடிவரும் ஓட்டம் இல்லை. கண்களில் ஒருவிதத் தயக்கம். ஏதோ ஒன்றிலிருந்து விடுபட முடியாமல் திணறும் குழப்பம். தன் பக்கத்தில் ரோஜாவை இருத்திக்கொள்கிறான். எப்போதுமே முச்சிவிடாமல் பேசும் இந்தக்குட்டிப்பெண் இப்போது வெறுமையாய் அமர்ந்த பாலுவுக்கு ஒன்றும் புரியவில்லை.

பாலு அமர்ந்து படிக்கும் மேஜை. அதனருகில் எப்பொழுதும் இணைபிரியாமல் கிடக்கும் நாற்காலியைக் காணவில்லை. மேஜையின் மீது துணி விரிக்கப்பட்டு, ரொம்பவும், கௌரவமாக ஒரு புது டி.வி. வைக்கப்பட்டிருந்தது. ரோஜாவை கவனிக்கிறான். டி.வி. காட்சிகளில் ரோஜாவின் கவனம் முழுவதும் குவிந்திருக்கிறது.

தனக்கு மிகவும் பிடித்தமான பொருள், சொந்த வீட்டிலே களவாடப்பட்டதைப் போன்ற உணர்வு பாலுவுக்கு ஏற்பட்டது.

●



'கிரமேத் சிகரத்தின் மேல் ஏறுவது என்றால் கழுகு பறக்கும் உயரத்துக்கு ஏறுவது என்று அர்த்தம்'' என்று வருணித்துக்கொண்டிருந்தார் ஷரீபுல்லாமாமா. "இரவு நேரங்களில் நட்சத்திரங்கள் இந்தச் சிகரத்தின் மேல் விளையாடும். நெருப்பைச் சுற்றும் விட்டில்கள் மாதிரி மேலே எழும்புவதும் துள்ளுவதுமாக அவை கும்மாளம் அடிக்கும். கையை நீட்டிப் பிடித்து விடும்படி அவ்வளவு தாழ இறங்கும்! எல்லாவற்றிலும் குறும்பு உள்ள சில நட்சத்திரங்கள் தற்செயலாகப் பாறைகளில் மோதிச் சுக்கல்களாகச் சிதறும். விண்மீன்கள் விழுவது என்று இதைத்தான் சொல்லுகிறோம். 'அற்புதமானது கிரமேத்! ஆனால் அதற்குப் பெரிய துன்பம் ஏற்பட்டிருக்கிறது. சிகரத்தின் மேலே உள்ள சின்ன ஏரியில் பொன் மீன்களும் வெள்ளி மீன்களும் முன் காலத்தில் கணக்கில்லாமல் நிறைந்திருந்தன. நட்சத்திரங்கள் மலைச் சிகரத்தில் இறங்கியது இந்த மீன்களோடு விளையாடுவதற்காகத் தான் போலிருக்கிறது. ஆனால் இந்த மீன்கள் வெகு காலத்துக்கு முன்பே போய் விட்டன. அவற்றில் ஒன்றுகூட ஏரியில் இல்லை. நட்சத்திரங்களால் தான் பழைய வழக்கத்தை விடமுடியவில்லை.... ஒரு கொடியவன் இந்த மீன்களை ஒழித்து விட்டான். ஒரே ஒரு பைக் மீனை அவன் ஏரியில் போட்டான். ஏழு பகல்கள், ஏழு இரவுகளில் இந்த மீன் எல்லாப் பொன், வெள்ளி மீன்களையும் விழுங்கி விட்டது. இதனால் கிரமேத் மிகுநத துயரம் அடைந்தது. வருத்தம் காரணமாக ஏரியும் வறண்டு போகத் தொடங்கிற்று. ஏரி அடி வரை வறண்டு போய்விட்டால் கிரமேத் ஒரே குருடு ஆகிவிடும். தனக்கு மேலே மிதக்கும் மேகங்களை அதனால் பார்க்க முடியாது. வெயில் ஒளியும் மலை உச்சியில் இரவு வேளைகளில் கும்மாளம் அடிக்கும் நட்சத்திரங்களும் அதற்குத் தெரியமாட்டா... பெருந்தீனிக்காரப் பைக் மீனும் கடைசியில் செத்துத் தொலைந்தது. ஆனால் ஏரியில் இருந்த எல்லா உயிர்களையும் கொன்று தீர்த்த பிறகுதான் அது உயிரை விட்டது. யாராவது ஜிகித்துக்கள் - அதாவது வீரர்கள் - துணிவோடு வந்து முன்பு இருந்த மாதிரியான பொன், வெள்ளி மீன்களை ஏரியில் விடவில்லையானால் அது உண்மையாகவே வறண்டு போகும், துயரத்தினால் கிரமேத் இடிந்து தகர்ந்து விடும். வெள்ளை வெளேரென்று பளிச்சிடும் இந்த உயரமான மலையின் இடத்தில் வெறும் இடிபாடுகள் மட்டும் ஒரு நாள் மிஞ்சினால் மிக மிக வருத்தமாயக் இருக்கும்... இல்லையா தம்பிமாரே? ... என்று கேட்டார் ஷரீபுல்லா மாமா.

ஆனால் "தம்பிமார்" பதில் ஒன்றும் சொல்லவில்லை...

முஸ்தாய் கரிமின் 'தங்கமான எங்கள் ஊர்' சிறுவர்களுக்கான குறுநாவலிலிருந்து.



படிப்பகம்

www.padippakam.com

# எழுத்து நவீனத்துவம் நாகரீகம்

தொகுப்பும் தமிழாக்கமும் : எ.எம். சாலன்

## 1

'நவீன கால இலக்கியங்கள் என்றால் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை பெண்களின் மாதவிலக்கு, காதல் தோல்வி, போன்ற விஷயங்களாக இருக்கலாம்! சில இலக்கியவாதிகள் இம்மாதிரியான விஷயங்களை மட்டுமே எடுத்து வைத்து விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களது தைரியத்தை நான் வாழ்த்துகிறேன்.

அவற்றை நெருங்கவோ அம்மாதிரியான விஷயங்களை எடுத்துக் கையாளவோ எனக்குத் தைரியம் கிடையாது. அந்த வகையறாக்களைக் காண்பது கூட எனக்கு விருப்பம் இல்லை.

லட்சோப லட்சம் வருடங்களுக்கு முன்னால் பூமியில் தோன்றிய முதல் பெண்மணியான ஏவாளினுடைய மாதவிலக்கை உலகத்தின் முதல் ஆணான ஆதாம் எடுத்து உபயோகித்ததாகச் சான்றுகள் இல்லை. அதன் பிறகு யுகயுகங்களாகக் கோடானு கோடி பெண்கள் இப்பூமியில் தோன்றினார்கள். இப்போதும் தோன்றிக்கொண்டுதான் இருக்கிறார்கள். இவர்களுக்கும் மாதவிலக்கு ஏற்பட்டுக்கொண்டு தானிருக்கின்றன. இவர்களுக்கு ஏற்படும் மாதவிலக்கைப் பற்றி நம்மில் சில இலக்கியவாதிகள் மட்டுமே எழுதிக்கொண்டிருக்கிறார்கள். இதற்காக நாம் அவர்களை பாராட்டிக்கொள்வோம்.

'சில இலக்கியவாதிகள்' எனக் குறிப்பிடும் போது பின் நவீனத்துவ இலக்கியவாதிகள் என எடுத்துக்கொள்ளுங்கள். மாதவிடாய் விவகாரம் அவர்களுடைய இலக்கியத்தின் அணுகுண்டு அல்லவா! அதை வெற்றி கொள்ளகூடிய ஓர் ஹைட்ரஜன் வெடிகுண்டை நான் கண்டு பிடித்து நான் எழுதும் கதைகளுக்குள் பொருத்தவேண்டும் என நினைத்தேன். இரவும் பகலும் இதைப்பற்றியே தான் சிந்தித்துக் கொண்டிருந்தேன். அம்மாதிரியான வெல்லும் சக்தி இலக்கியத்தில். வேறு எதற்கு இருக்கிறது? அது, ஏவாள் தொடங்கி எல்லாப் பெண்களிடமும் காணப்படக்கூடியதாகவும் இருக்கவேண்டும். ராப்பகலாக நான் சிந்தித்து சிந்தித்து நான் ஒரு ஹைட்ரஜன் வெடிகுண்டைக் கண்டுபிடித்து என்னுடைய ஒரு கதைக்குள் பொருத்திவிட்டேன்! அந்தக் கதையினுடைய பெயர்தான் 'புர்ர்ர்ர்!'

ஏமாற்றத்தை அல்லது காதல் தோல்வியை அடிப்படையாக வைத்து ஒரு சிறு காவியம் படைத்தேன். அது வெளிவந்ததும் தற்கால இலக்கியவாதிகளில் சிலர் என்னை இலக்கிய ஆசான் எனக்கூப்பிட ஆரம்பித்துவிட்டார்கள். மாத்திரமில்லை! அதோடு அவர்களுக்கு நடுவே உட்காருவதற்காக வேண்டி எனக்கு ஒரு 'சீட்' கூடப் போட்டுத் தர ஆரம்பித்துவிட்டார்கள்.

எனக்கு கள், சாராயம், கஞ்சா - முதலிய மதுவகைகளுடைய வாடை அறவே பிடிப்பதில்லை.

நீங்கள் இம்மண்ணில் வந்து பிறப்பதற்கு முன்பே இவற்றுடன் தொடர்புடையவன் நான். சரஸ், கஞ்சா, பாங்க், அபின், மது வகைகள் என இவற்றுக்கெல்லாம் நான் சேவை செய்திருக்கிறேன்.

இவற்றை உபயோகப்படுத்தியதன் மூலம் எனக்குப் புதிய அறிவோ, வெளிச்சமோ கிடைத்ததாகச் சரித்திரம் இல்லை. மயக்க மருந்துகளையும் மதுபானங்களையும் மக்கள் ஒதுக்கித்தள்ள வேண்டும். இல்லையெனில் நம் உடல் நலம் கெட்டு மரணத்தின் வாய்க்குள் போய் விழ வேண்டியதாகவிடும். இவற்றையும் மீறி எவராவது இவற்றை உபயோகிக்கிறார்கள் என்றால், உபயோகித்துக்கொள்ளட்டும். ஜனத்தொகையைக் குறைக்க ஒரு வேளை உதவலாம்.

செத்தால் இவைகளையெல்லாம் அதோடு முடிந்து விடும். எனவே உயிருடன் இருக்கும்போதே இவற்றையெல்லாம் அனுபவித்துக்கொள்ளுங்கள். குறிப்பாக, மதுபானங்களையும் மயக்க மருந்துகளையும்! இந்த விஷயங்களெல்லாம் கதைகளுக்குள்ளும் கவிதைகளுக்குள்ளும் நுழைக்கப்படத்தான் செய்கின்றன. வேண்டுமானால் அது நுழைக்கப்படட்டும்? பரவாயில்லை. மேலே கண்டவற்றுக்கு எதிரான லட்சியங்களும் இருக்கின்றன. பூமியில் தோன்றிய ஜீவராசிகளில் எல்லாம் முதலிடம் மனிதனுக்குத்தான். காரணம் அவனுக்கு ஆத்மா உண்டு. மரணத்திற்குப் பிறகும் வாழும் தன்மை பெற்றவன், அவன். கடவுளும் இருக்கிறார். ஆனால் சிலர் அவரை இல்லையென்று சொல்லுகிறார்கள். இதை அடிப்படையாகக்கொண்டு இலக்கியப் படைப்புகள் வெளிவந்து கொண்டுதானிருக்கின்றன.

இவையெல்லாம் காலங்காலமாக நம் பூமியில் உள்ளவைகள்தாம். இதில் எதுவும் புதிதாக ஒருவராலும் கண்டுபிடிக்கப்பட்டவையல்ல! இது இந்தியாவுக்குள்ளும் இருந்தது; ஐரோப்பாவிலிருந்தும் கதைகள் வழியாக இக்கருத்துக்கள் ஏராளமாக வந்திறங்கின.

உதாரணத்திற்கு நாம் வைத்திருக்கும் கிருதாவை எடுத்துக்கொள்ளுங்களேன். இது எங்கும் பின்பற்றப்பட்டு வருவதைப் பார்க்க முடியும். இதை வைத்துக்கொண்டு திரிவதனால் என்ன லாபம்? அழகு அதிகரிக்குமா? பெரிய கிருதா வைத்திருக்கக்கூடிய ஒரு பிரபலமான திரைப்பட இயக்குநரைக்கண்டு நான்



படிப்பகம்

www.padippakam.com

# வைக்கம் முகமது பஷீர்

கேட்டேன் : "எதுக்கு இதுமாதிரி கிருதா வைத்திருக்கிறீர்கள்?" என

அதற்கு அவர் சொன்ன மறுபடி : "இதுதான் நாகரீக மனிதனுக்குரிய அடையாளம்" என்று.

## 2

"சியாமுதீன் அகமது ஒரு அரபு பண்டிதர். அரேபியாவில் - மதினா பல்கலைக்கழகத்திலிருந்து அரேபிய மொழியில் படித்துப் பெரிய பட்டம் வாங்கியவர். அவர் எனது நாவலான 'இளம் பருவத்துத் தோழி' யை அரபு மொழியில் மொழிபெயர்த்து மெக்காவிலிருந்து வெளிவந்துகொண்டிருக்கும் ஒரு பத்திரிக்கைக்கு அனுப்பப்போகிறார்.

'உங்களுடைய சம்மதம் கிடைத்தால் போதும்' என்றார், என்னிடம்.

அவர் சொல்கிறார்: "பள்ளிக் கூடத்தில் படிக்கும் குழந்தைகள் பெஞ்சுகளையும் நாற்காலிகளையும் அடித்துப்போட்டுவிட்டு ஊர்வலம் போகிறார்கள். அருகிலுள்ள கடைகளைக் கல்லால் அடிக்கிறார்கள். இங்கேயுள்ள குழந்தைகள் எவரைக் கண்டும் பயப்படுவதில்லை. இவர்களைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கும் அரசியல்வாதிகளும் இங்கே இருக்கிறார்கள். எண்ணிப்பார்க்கும் போது நம்முடைய எதிர்காலம் எவ்வளவு பயங்கரமாக இருக்கிறது. அரேபியாவில் பள்ளிக்கூடங்களும் காலேஜிகளும் இல்லாமல் இல்லை. ஆனால் அங்கே போராட்டங்கள் இல்லை. பொது வேலை நிறுத்தங்கள் நடைபெறுவதில்லை. அங்கேயுள்ள சனங்கள் அமைதியாக வாழ்ந்து வருகிறார்கள். லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் இருக்கும் கடைகளில் சிலவேளை சிப்பந்திகள் கூட இருப்பது கிடையாது. ஆனால் தருணம் பார்த்து அதனுட் புகுந்து ஒருவரும் திருட முயல்வதில்லை. காரணம், திருடுபவனுடைய கைகள் அங்கே வெட்டப்படும். ஒரு மனிதனைக் கொலை செய்தால், கொன்றவனுடைய கழுத்தை அறுத்து அகற்றிவிடுவார்கள். அங்கே 'இங்குலாப்'பும் இல்லை.

கம்யூனிஸ்டு ரஷ்யாவிலும் சீனாவிலும் மாணவர் போராட்டமும், வேலை நிறுத்தமும் உண்டா, என்னவோ!

'இல்லையென்று நினைக்கிறேன்!'

-சியயமுதீன் அகமதுவிற்கு ஒரு 'சாயா' வழங்கி விட்டு நானும் ஒன்று குடித்துக் கொண்டேன். பிறகு சம்மதப் பத்திரம் எழுதிக் கையெழுத்துப் போட்டுக்கொடுத்தேன். அவர் அதைப் பெற்றுக்கொண்டு எழுந்து சென்றார்.

வேண்டுமானால் நவீனத்துவம், பின்னை நவீனத்துவம் - இந்த இரண்டையும் 'இன்று' எடுத்துக்கொள்ளலாம். அனேகம் கோடி நவீனத்துவம் - பின்னை நவீனத்துவமுமான 'இன்றுகள்' எவ்வளவோ கடந்து போய்விட்டன. அவற்றுள் ஒவ்வொரு 'இன்னம்' பின் நவீனத்துவமாகின்றன. ஆயிரம் வருடங்கள் கழிந்த பிறகு 'பின்னை நவீனத்துவ இன்றுகள்' மேலும் வரும். ஆயிரம் வருடங்கள் கடந்த பிறகு மனிதனுடைய நிலை எவ்வாறு இருக்கும்? அன்று நாம் ஒருவரும் இப்பூமியில் இருக்கமாட்டோம். நம்முடைய பெயரும் - பின்னை நவீனத்துவம் - இலக்கியமும் மாய்ந்துபோய்விடும்.

அதெல்லாம் போகட்டும். மனித சமூகம் இந்த பூமியில் தோன்றி லட்சோப லட்ச ஆண்டுகள் ஆகிவிட்டன. இங்கு என்னவெல்லாமோ நிகழ்ந்து முடிந்துவிட்டன. பல மதங்கள் தோன்றின. அநேகம் மாற்றங்கள் ஏற்பட்டன. அதில் பல இன்று சுலபமாகக் கிடைப்பது ரோமங்கள் மட்டும்தான். அது இருந்தால் இன்று என்னவேண்டுமானாலும் நிகழ்த்திக் காட்டி விடலாம்.

-இப்படிச் செய்வதை 'மாடர்ன்' என்றோ, 'லேட்டஸ்ட் மாடர்ன்' என்றோ நாம் சொல்லிக்கொண்டு திரியலாம்.

இன்று முடியை நீளமாக வளர்த்து, எண்ணெய் தேய்த்து வாரப்படாத சகிரி போன்ற முடியை - பேன் உடையை நாற்றம் பிடித்த இளைஞர்கள் - நாகரீகம் எனச் சொல்லிக்கொண்டு அலைகிறார்களே... இவர்களுடைய எதிர்காலத்தைப்பற்றி எண்ணும்போது எனக்குச் சிரிப்புதான் வருகிறது. பல வருடங்களுக்கு முன்பு நானும் 'மாடர்னாக' நடந்தவன்தான்!

அக்காலத்தில் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த ஆண்கள் அனைவரும் தலையை மொட்டையடித்து - சில்லறைத் தாடியைச் சுமந்துகொண்டு நடப்பது வழக்கம். அதுதான் அன்றைய முஸ்லீம்களின் தோற்றம். முடி வளர்ப்பது செய்யக் கூடாத காரியம். இம்மாதிரியான விதிவிலக்கு எங்கிருந்து வந்தது? 'இஸ்லாம்' குடிகொண்டிருப்பது முடியிலா? ஆண்கள். முடிவளர்க்கக்கூடாது எனில், தெய்வம் எதற்கு ஆண்களுக்கு முடியைத் தந்தருள வேண்டும்? பெண்களில் முகத்தில் முடிவளர அனுமதிக்காத அல்லா, ஆண்களின் முகத்தில் ஏன் முடியை வளரச் செய்யவேண்டும்?

இஸ்லாம் மதத்தின்படி முடியை வளர்த்திக் கொள்ளலாம். ஆனால் அழகாகவும் சுத்தமாகவும் வைத்துக்கொள்ள வேண்டும். நான் முடியை வளர்த்தியெடுத்து 'கிராப்' கட்டிங் செய்துகொண்டேன். வானம் இடிந்து வீழ்ந்தது எனச் சொன்னதும் எனது குடும்பக்காரர்களும் ஊர்ப்பிரமுகர்களும் குதித்துக்கொண்டு ஓடிவந்தார்கள். ஆனால் எனது



படிப்பகம்

www.padippakam.com

'வாப்பா' மட்டும் என்னை ஒன்றும் சொல்லவில்லை.

மதப்பிரமுகர்களெல்லாம் என்னைப் பார்த்து உறுமினார்கள்.

'உன்னை இஸ்லாம் மதத்திலிருந்து விலக்கி விடுவோம்' என்று என்னைப் பயமுறுத்தினார்கள்.

வேண்டுமானால் விலக்கிக்கொள்.

'இஸ்லாம் மதம் அழிந்து போக நாங்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். பலவந்தமாகப் பிடித்து நிறுத்தி முடியை வடித்தெடுப்போம்.

நியாயந்தான்! அன்று என் கையில் ஒரு ஒம்பது இஞ்ச் நீளத்தில் பளபளக்கும் கூர்மையான ஒரு கத்தி இருந்தது. அந்தக் கத்தியை யெடுத்து ஓங்கியவாறு நான் சொன்னேன்: 'சாகணும்னு எவனுக்காவது ஆசையிருந்தா - எம்முன்னால் வந்து முடியை வெட்டி மாற்ற வரலாம்! உஷார்!"

அன்று யாராவது ஒருவர் கற்றை முடிக்காக வேண்டி என்னிடம் வந்திருப்பார்களேயானால் நான் அவர்களைக்கொன்றிருப்பேன், இல்லையா? செய்திருக்கமாட்டேன் எனத் திட்டவட்டமாகச் சொல்லமுடியாது. முடியைக் கத்தரித்துக்கொண்டு நவீன மனிதனாக நான் அன்று சுற்றியலைந்து கொண்டிருந்தேன். தலையில் எண்ணெய் தேய்க்கமாட்டேன். 'சகிரி' மாதிரி இன்றைய இளந்தலைமுறையினரைப் போல அலைந்துகொண்டிருந்தேன். ஆனால் நான் அக்காலத்தில் தினமும் தவறாமல் குளித்து விடுவேன். அதனால் என் சரீரம் நாற்றமடிப்பதில்லை. ஆனால் தாராளமாக என் தலையில் பேன் கிடந்தது. தலையில் பயங்கரமாகச் சொறியெடுக்கும். சொறிந்து சொறிந்து நான் காலத்தைக் கடத்திக்கொண்டிருந்தேன். பறட்டைத் தலை! பராமரிப்பு ஒன்றும் கிடையாது. பிறகு கொஞ்சம் கொஞ்சமாகத் தலையிலுள்ள முடியுதிர ஆரம்பித்தது. ஆக, இறுதியில் முழு வழுக்கைத் தலையானானேன்.

இலக்கியத்தில் ஒரு தலைமுறைக்கும் இன்னொரு தலைமுறைக்கும் இடையே ஒரு பாகு இடைவெளி ஏற்படும். மொழி வளர்ந்து கொண்டேயிருக்கிறது. அதன்மூலம் நாம் புதுப்புது அறிவைப்பெற்று வருகிறோம். அதன் மூலம் மனிதன் புதிய சாதனைகளைப் படைக்கிறான். சட்டங்கள் உருவாகின்றன. வசதிகள் பெருகுகின்றன. அவ்வேளையில் அதில் சில பழையதாகிறது. சில அழிந்து போகிறது. இந்த வேளையில்தான் தலைமுறைக்குத் தலைமுறை சின்னவெளி ஏற்படும்.

எதற்காக எழுதுகிறோம்? அதைப்பற்றி நான் கிஞ்சிற்றும் சிந்தித்ததே கிடையாது. ஆனால் விடாமல் தொடர்ந்து எழுத ஆரம்பித்துவிட்டேன்.

என் மனதில் தோன்றியவற்றைப்பற்றியெல்லாம், எழுதினேன். 'இப்படித்தான் எழுதவேண்டும்' என்று எனக்கு ஒருவரும் உபதேசம் செய்தது கிடையாது.

நானாகவே பிறகு என் அனுபவங்களைக் கதைகளாக்க முயன்றேன். அளவுக்கு அதிகமாகக் கஷ்டங்கள் அனுபவித்தவன் நான். எராளமான நாட்கள் பட்டினியும் கிடந்திருக்கிறேன். சொல்லமுடியாத அளவு துன்பங்களையும் அனுபவித்திருக்கிறேன்.

ஓர் இலக்கியவாதியானதில் திருப்திதானா? (பஷீரே தன்னை நோக்கிக் கேட்டுக்கொள்கிறார்.)

வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க பெரிய பெரிய கனவுகள் ஒன்றும் இல்லாததினால் திருப்தி என்று சொல்லிக்கொள்ளலாம். மலையாள மொழியானது ரொம்ப சின்னமொழி. அது ஒரு சிறுவட்டம் மாத்திரமே! அக்காலத்தில் எழுதுவதன் மூலம் கிடைக்கும் வருமானம் மிகவும் குறைவு. என்றாலும் அதன் மூலம் பட்டினி கிடக்காமல் காலத்தை ஓட்டினேன். அவ்வளவுதான். எழுதுவதைத் தவிர எனக்கு வேறு ஒரு வேலையும் தெரியாது. கதைகள் எழுதுவதிலிருந்து வரும் வருமானத்தை யொழித்தால் எனக்கு வேறு வருமானமும் கிடையாது.

மனித குலத்திற்குச் சொல்வதற்கு என்ன இருக்கிறது? இதுநாள் வரையில் நான் குறிப்பிடத்தக்க முறையில் ஒன்றையும் சொல்லிவிடவில்லை. குறைவான அறிவு. குறைவான அனுபவங்கள். சிறு 'பாவனை' - இவற்றை மட்டுமே கைப்பொருளாகக் கொண்டு பலகதைகள் வழியே சிறு விஷயங்களைப் பற்றி நான் சொல்ல முயன்றிருக்கிறேன்.

## 3

'ஒரு முக்கிய இலக்கியவாதிக்கு மனித குலத்திற்குச் செய்யவேண்டிய கடமைகள் உண்டா? நம்முடைய இலக்கியவாதிகளில் சிலர் இல்லையென மறுக்கிறார்கள். ஆனால் ஒன்று மட்டும் உறுதி ஓர் இலக்கியவாதியினால் மனிதர்களை மோசமானவர்களாக்க முடியும். வாழ்வின்மேல் வெறுப்பையூட்ட முடியும். இம்மாதிரியான படைப்புகளும் நம்மிடையே உலவுகின்றன.

ஒரு இலக்கியவாதியினுடைய படைப்புகள் அனைத்தும் அவன் இப்பூமியை விட்டு மறைந்து ஐம்பது வருடங்கள் ஆகும்போது அது பொதுசொத்தாகிவிடும். இது சட்டம். யார் வேண்டுமானாலும் அச்சடித்து விற்பனை செய்து கொள்ளலாம். நாம் எல்லோரும் நன்மையின் மீது நம்பிக்கை வைக்கவேண்டும்.

கண்டபடியெல்லாம் எழுத வருங்காலத் தலைமுறையினரை மோசமானவர்களாக்க வேண்டுமா? இன்றைய மனிதர்களையும் மோசமாக்க வேண்டிய அவசியமில்லை. வேண்டுமானால் எழுதுவதை நிறுத்திக்கொள்ளலாம்! பிழைப்பதற்கு நம்முடைய நாட்டில் எவ்வளவோ தொழில்களெல்லாம் இருக்கின்றன!

நான், நன்மையின் மேல் நம்பிக்கையுள்ளவன். பௌதீக விஷயத்தில் நம்பிக்கை கொண்டவன். மனித குலத்திற்கு இதை விட ஓர் ஒளிமயமான காலம் அமையப்போகிறது என எண்ணுபவன். மனிதனுக்கு



படிப்பகம்

www.padippakam.com

ஒருபோதும் மரணமில்லை என்ற கருத்தில் உறுதியான நம்பிக்கையுள்ளவன். அண்ட சராசரங்களையும் சிருஷ்டித்த தெய்வத்தின் மீதும் நம்பிக்கை கொண்டவன். அந்த தெய்வத்திற்கு உருவம் கிடையாது என்பதில் நம்பிக்கையுடையவன். தெய்வம் கருணையுள்ளவன் என்றும் நம்புபவன்.

இங்கே நன்மையும் தீமையும் இருக்கின்றன. நல்ல பழங்களும் அழுகிய பழங்களும் உண்டு. நாம் நல்ல பழங்களையே சாப்பிடவேண்டும்; நல்லதையே செய்யவேண்டும். ஆரோக்கியமான வாழ்க்கை வாழ, வழிகாட்டவேண்டும். மேலே நாம் கண்ட சிந்தனைகளை நீங்கள் எனது கதைகளிலும் காணமுடியும். அந்தச் சிந்தனைகளில் பல என்னையும் ஆகர்ஷித்திருக்கிறது. நான் எழுதிய கதைகளில் சிலவற்றை நான் கிழித்தெறிந்திருக்கிறேன். என் மனதில் தோன்றிய விஷயங்களில் பலவற்றை நான் எழுதாமலும் விட்டிருக்கிறேன். எழுத எழுதப் புதிய உள்ளடக்கங்கள் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன. நம்முடைய சொந்த அனுபவங்களாக இருந்தால், நம்மால் அவற்றை நம்பிக்கையோடு சொல்லிச் செல்லமுடியும்! (படைப்பாக்க முடியும்). என்னுடைய படைப்புகள் பெரும்பாலும் எனது சொந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்டவைகளே! விஞ்ஞானமும் என்னைக் கவர்ந்திருக்கிறது.

சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், பயங்கரமான இருள், கடல், மலைகள், பாலைவனங்கள், நதிகள், பிரபஞ்சம் - இவை அனைத்தும் எப்போதும் என்னை ஆச்சரியப்படுத்திக் கொண்டேதானிருந்தன.

நான் காதலாக இருந்திருக்கிறேன். அரசியல்வாதியாக வாழ்ந்திருக்கிறேன். எனக்கு எப்போதும் சுதந்திரனாக இருக்க இஷ்டம்! அடிமைத்தனத்திற்கு எதிராக நான் போராடியிருக்கிறேன். போலீஸ்காரர்களிடமிருந்து அடி - இடி - உதை போன்றவற்றை வாங்கிக் கட்டியிருக்கிறேன். அவர்கள் வாயிலிருந்து வரும் கெட்ட வார்த்தைகளையெல்லாம் கேட்டிருக்கிறேன். போலீஸ் 'லாக்கப்'புகளில் அடைக்கப்பட்டிருக்கிறேன். பல நாட்கள் ஜெயில் தண்டனைகளை அனுபவித்திருக்கிறேன். இவையெல்லாவற்றையும் வைத்துக் கதைகளும் எழுதியிருக்கிறேன்.

எதற்காக எழுதினேன்? வாசகர்கள் படித்து ரசிப்பதற்காக வேண்டி; நல்ல சிந்தனைகளை உணர்த்துவதற்காக வேண்டி.

## 4

"நவீன இலக்கியம் என ஒன்று இருக்கிறதா? என்று கேட்டால், நவீனமான 'இன்று' இருப்பதுபோல், இலக்கியத்திலும் காணக்கிடக்கிறது. நான் முன்னர்க் குறிப்பிட்டது போன்று 'இன்று' நேற்றாக மாறும். நூறு நூறாயிரங்கள் வருகின்றன. அவை அனைத்துமே 'நேற்று'டன் போய்ச் சேர்ந்துவிடும். இப்படி தினசரி அனைத்துமே போய்க்கலந்து கொண்டேதானிருக்கும். மனிதனுடையதாக - மேகங்கள், உடலுறவு, உறக்கம், இவையனைத்திலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. லட்சோப லட்சம் வருடங்களுக்கு முன்பு இருந்தது போலவேதான் அவைகளையெல்லாம் இன்றும் தொடர்ந்து இருந்து வருகின்றன. யுத்தங்களும் நோய்களும் வறுமையும் அன்றும் இன்றும் போலத்தான் இருந்து கொண்டிருக்கின்றன. நவீன 'மனிதன்' இன்றுகளில் நின்று கொண்டு பல சாதனைகளையும் புரிந்திருக்கிறான். இதற்காக வேண்டித்தான் கடவுள் மனிதனுக்குப் புத்தியைக் கொடுத்திருக்கிறான். இலக்கியவாதியும் ஓர் மனித ஜீவியே! சக்தி ஒருபோதும் ஒரே நிலையில் இருந்துகொண்டிருப்பதில்லை. அப்படி இருக்கவும் முடியாது. நம் சிந்தனையிலும் நம்பிக்கையிலும் மாறுதல் ஏற்படும்.

தயவு செய்து ஒருமுறை எழுதிய கதைகளை மாதிரி மீண்டும் மீண்டும் எழுதாதீர்கள். சொன்னதையே திரும்பத் திரும்ப சொல்லாதீர்கள். நான் கதைகள் எழுதும் போது இம்மாதிரி நிகழாமல் இருக்க, கவனமாக இருப்பேன். அப்படி இல்லையென்றால் நான் எழுதிய 'என்னுடைய உப்பாவுக்கு ஒரு யானை இருந்தது' என்ற நாவல், எனது 'இளம் பருவத்துத் தோழி' என்ற நாவலைப் போன்று அல்லவா அமைந்திருக்கவேண்டும்.

என்னுடைய 'உப்பாவுக்கு ஒரு யானை இருந்தது' என்ற படைப்பிலே பயங்கரமான சோகத்தை ஹாஸ்யமான முறையில் வெளிப்படுத்திவிட்டேன்.

எழுதியது மாதிரி, திரும்பத் திரும்ப எழுதுவதற்கு அதிக சிரமம் ஒன்றுமில்லை. ஆனால் அப்படி எழுதக்கூடாது என்பதால்தான், நான் அந்தமாதிரி எழுதவில்லை. நாம் எழுதுவது (படைப்பது) ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாதிரியானதாக இருக்கவேண்டும். நான் ஏற்கனவே சொன்னது போன்று மனதில் தோன்றிய பலவற்றையும் எழுதாமலும் விட்டிருக்கிறேன். வாசகர்களுக்கு இதனால் என்ன லாபம்?

நான் படைப்புத் தொழிலில் ஈடுபடும் பொழுதெல்லாம் இந்தக் கேள்வியை என் கண்முன்னால் நிறுத்தி வைத்துக்கொள்வேன். வாசகர்களை அழவைத்து நாம் அவர்களது மனதைச் சுத்தப்படுத்தவேண்டும்,. அல்லது சிந்திக்க வைக்கவேண்டும். இவைகளையெல்லாம் எந்த அளவுக்கு இலக்கியத்தில் உட்படுத்தப்பட்டிருக்கிறது என வாசகர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. எழுதுவதற்கு இப்போதும் எனது கையில் ஏராளமான விஷயங்கள் இருக்கின்றன. எனக்கு நேரந்தான் இல்லை. (பஷீர் இங்கே தனது முதுமையைச் சுட்டுகிறார்) இறைவனடி சேர்ந்த பிறகுதான் இனி எனக்கு எழுத நேரம் கிடைக்கும்!

மரணம் எப்போது எனத் தெரியவில்லை என்றாலும் நான் எழுதிக்கொண்டேயிருக்கிறேன் எழுதிக்கொண்டிருப்பதை எழுதித் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. •



படிப்பகம்

www.padippakam.com

## இடாலோ கால்வினாவின் கதை - 1

# மனசாட்சி

மொழி பெயர்ப்பு : பிரம்மராஜன்

ஒரு போர் வந்தது, லூய்கி என்ற மனிதன், தான் ஒரு தன்னார்வலனாகச் செல்ல முடியுமா என்று கேட்டான்.

எல்லோரும் அவனைப் பாராட்டினார்கள். லூய்கி ரைஃபிள் துப்பாக்கிகளை விநியோகித்துக் கொண்டிருந்த இடத்திற்குச் சென்று ஒன்றை எடுத்துக் கொண்டு சொன்னான்: "இப்போது நான் போகப்போகிறேன். போய் அந்த ஆல்பர்ட்டோ என்ற ஆளைக் கொல்லப் போகிறேன்."

ஆல்பர்ட்டோ யார் என்று அவர்கள் கேட்டார்கள்.

"ஒரு எதிரி" அவன் பதில் அளித்தான், "என்னுடைய எதிரி"

அவர்கள் அவன் ஒரு குறிப்பிட்ட வகை எதிரிகளைத்தான் கொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள் என்றும், அவன் விரும்பிய எவரை வேண்டுமானாலும் அல்ல என்பதையும் விளக்கிச் சொன்னார்கள்.

"அப்படியானால், நான் புரிந்து கொள்கிற சக்தி இல்லாதவன் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? இந்த ஆல்பர்ட்டோதான் மிகச் சரியாக அந்த வகை ஆள், அவர்களில் ஒருவன். அந்த மாதிரி ஆட்களுக்கு எதிராக நீங்கள் போருக்குச் செல்கிறீர்கள் என்று நான் கேள்விப்பட்டவுடன், நான் நினைத்தேன். நானும் போவேன். அந்த வகையில் நான் ஆல்பர்ட்டோவைக் கொல்வேன். அதனால்தான் நான் வந்தேன். எனக்குத் தெரியும் அந்த ஆல்பர்ட்டோவை. அவன் நேர்மையற்றவன். அவன் என்னைக் காட்டிக் கொடுத்தான், காரணமே இல்லாமல் ஒரு பெண்ணிடம் என்னை முட்டாளாக்கினான். அது ஒரு பழைய கதை என்னை நம்பவில்லை என்றால், நான் முழு விஷயத்தையும் உங்களுக்குச் சொல்கிறேன்."

அவர்கள் சொன்னார்கள் நல்லது, பரவாயில்லை என்று.



"அப்படியானால் சரி" என்றான் லூய்கி, "ஆல்பர்ட்டோ எங்கே இருக்கிறான் என்று சொல்லுங்கள், நான் அங்கே சென்று சண்டையிடுகிறேன்."

அவர்கள் சொன்னார்கள் அவர்களுக்குத் தெரியாது என்று. " பரவாயில்லை." லூய்கி சொன்னான். "எனக்குச் சொல்லக்கூடியவர்களை நான் கண்டுபிடிப்பேன். விரைவிலோ அல்லது கொஞ்ச நாள் கழித்தோ நான் அவனைப் பிடித்துவிடுவேன்"

அவன் அதைச் செய்யமுடியாது என்றார்கள். அவன் போய் அவர்கள் எங்கே அவனை அனுப்புகிறார்களோ அங்கேதான் சண்டையிட வேண்டும் என்றும் மேலும் அங்கே இருக்கும் எவர் ஒருவரையும் கொல்லலாம் என்றும் சொன்னார்கள். அவர்களுக்கு இந்த ஆல்பர்ட்டோவைப் பற்றி எதுவும் தெரிந்திருக்கவில்லை.

"நீங்கள் கவனிக்கவேண்டும்", லூய்கி பிடிவாதமாகச் சொன்னான், "நான் நிஜமாகவே உங்களுக்குக் கதையைச் சொல்லித்தான் ஆகவேண்டும். ஏன் என்றால், அந்த ஆள் நிஜமாக நேர்மையற்றவன். அவனை எதிர்த்துப் போரிடும் போது நீங்கள் சரியான செயலைச் செய்கிறீர்கள்.

ஆனால் மற்றவர்கள் தெரிந்துகொள்ள விரும்பவில்லை.

லூய்கிக்கு எந்த காரணமும் பிடிபடவில்லை: "மன்னிக்கவேண்டும் அது எல்லாமே உங்களுக்கு ஒன்றாக இருக்கலாம். நான் ஏதோ ஒரு எதிரியைக் கொன்றால்



படிப்பகம்

www.padippakam.com

கூட. ஆனால் ஆல்பர்ட்டோவுக்கு எந்தச் சம்மதமும் இல்லாத ஒருவரை நான் கொன்றால் என் மனம் சஞ்சலம் அடையும்"

மற்றவர்கள் பொறுமை இழந்தனர். அவர்களில் ஒருவன் லூய்கியிடம் நன்றாகப் பேசி, போர் என்பது எதைப்பற்றி என்பதையெல்லாம் விளக்கி, எப்படி நீங்கள் போய், நீங்கள் விரும்பிய ஒரு குறிப்பிட்ட வகை எதிரியைக் கொல்லமுடியாது என்றும் கூறினான்.

லூய்கி தோள்களைக் குலுக்கினான். "அப்படித்தான் அது இருக்கவேண்டுமானால்" அவன் கூறினான் "என்னை கழித்து விடுங்கள்"

"நீ உள்ளே இருக்கிறாய், தொடர்ந்து இருக்கப் போகிறாய்" என்று அவர்கள் சத்தமிட்டனர்.

"முன்னேறிச் செல்லுங்கள், ஒன் டு ஒன் டு" அவர்கள் அவனைப் போருக்கு அனுப்பி வைத்தனர்.

லூய்கி சந்தோஷமாக இருக்கவில்லை. அவனால் மனிதர்களைக் கொல்லமுடியும் சர்வசாதாரணமாக, ஆல்பர்ட்டோவை, அல்லது அவனுடைய குடும்பத்தினர் ஒருவரை அடைய முடியுமா என்பதைப் பார்ப்பதற்கு. அவன் கொன்ற ஒவ்வொரு எதிரிக்கும் அவர்கள் அவனுக்கு ஒரு பதக்கம் கொடுத்தனர். ஆனால் அவன் சந்தோஷமாக இல்லை. அவன் நினைத்தான் நான் ஆல்பர்ட்டோவைக் கொல்ல வில்லை என்றால் ஒரு காரணமும் இன்றி ஏகப்பட்ட மனிதர்களைக் கொன்றவனாவேன். இது பற்றி வருத்தமுற்றான்.

இதற்கிடையில் அவனுக்கு ஒரு பதக்கம் அடுத்து இன்னொரு பதக்கமாகக் கொடுத்துக்கொண்டிருந்தனர். வெள்ளியில், தங்கத்தில் எல்லாவற்றிலுமாக.

லூய்கி நினைத்தான். கொஞ்சம் பேரை இன்று கொல், நாளை கொஞ்சம் பேரைக்கொல், அவர்களின் எண்ணிக்கை குறைந்து விடும், அந்த நேர்மையற்றவனின் முறை வந்துதான் ஆகவேண்டும்.

ஆனால் ஆல்பர்ட்டோவை லூய்கி கண்டுபிடிக்கும் முன்னால் எதிரி சரணடைந்து விட்டான். ஒரு காரணமும் இல்லாமல் அவ்வளவு மனிதர்களைக் கொன்றதற்காக அவன் வருத்தப்பட்டான். இப்பொழுது அவர்கள் சமாதான காலத்தில் இருந்ததால் அவன் எல்லாப் பதக்கங்களையும் ஒரு பையில் போட்டுக்கொண்டு எதிரி நாட்டைச் சுற்றி வந்து கொண்டிருந்தான். இறந்து போனவர்களின் மனைவிகளுக்கும் குழந்தைகளுக்கும் விநியோகித்தபடி.

இப்படிப் போய் வந்து கொண்டிருக்கையில் ஆல்பர்ட்டோ தட்டுப்பட்டான்.

"நல்லது" என்றான். "செய்யாமலே போவதை விடத் தாமதமாகச் செய்வது நல்லது" பிறகு அவனைக் கொன்றான்.

அப்பொழுதுதான் அவனை அவர்கள் கைது செய்தார்கள். கொலைக் குற்றத்திற்காக விசாரணை செய்து தூக்கில் போட்டார்கள். விசாரணையின் போது அவன் செய்தது அவனது மனசாட்சியை திருப்திப் படுத்துவதற்காகவே என்று திரும்பத் திரும்ப சொன்னான். ஆனால் எவரும் அவன் சொன்னதைக் கேட்கவில்லை.

●



கேன்டன்ஸ்கி

நேற்றுவரை
கவிதையென்றறிந்த
என் மொழியழித்து
மழை
குளிர்வித்தது பூமியை

காலை வெறுமையின்
நெஞ்சுக் கூட்டுடைத்து
கிளர்வூட்டும் அதன் பொழிவு

அதீதக் கலவியின் ஓய்வென
தேங்கிய நீரில் பிம்பமாய்
எனக்கான முகமசைவைக்காண
சட்டையற்ற மேனியோடு
போய்க் கொண்டிருக்கிறேன்

குளிரில் நடுங்கிய
குட்டி நாயெனக் கூடவே வரும்
வால் சுருங்கிய
என் கோணல் புத்தி...

பெ. அன்பு



படிப்பகம்

www.padippakam.com

# நகுலனின் நாவல்கள்

நகுலனின் எழுத்துக்களில் ஈடுபட்டது தீவிரமான ஆன்மீக யாத்திரையாய் போய்க்கொண்டிருந்தது. சுசீலாவையும் பூட்ரிஸையும் நவோமியையும் தேடுகையில், புல்லிதழ்களில் ஒளிரும் வெண்பனிப்புள்ளிகளும் பிரண்டைப் பூக்களின் மணிப்புள்ளிகளும் காணக்கிடைத்தது பாக்கியமே. நகுலனிலிருந்து பயணம் தொடங்கும் கோணங்கிக்காக...

சா. தேவதாஸ்

## நகுலன் :
## முடிவுறாத தேடலும், சிறகடிப்பும்

"....சிருஷ்டி நியதியில் எனக்கு நான் யார் என்பது தெரியாது என்பதனால், என் உருவம் எனக்குப்புலப்பட, என் உலகம் எது என்று கண்டுபிடிக்க, எழுத்தை நாடுகிறேன்."
(-நகுலன்/'வேளை வந்துற்றபோது' கட்டுரையில்)

நாற்பதாண்டுகால எழுத்துலக இயக்கத்தில் நகுலனிடமிருந்து விதவிதமான பிரதிகள் கிடைத்துள்ளன. ஒரு பக்கம் வார்த்தை விளையாட்டுகளாய், இன்னொரு பக்கம் தீவிரமான விசாரமாய், வேறொரு பக்கம் ஆவேசமான உணர்வுத் தெறிப்பாய்ப் பாய்ச்சல் கொள்பவை அப்பிரதிகள். பைத்தியங்களின் உறைவாய்த் தோற்றம் தரும் அதே வேளையில், பைத்தியங்களின் பீதி நிறைந்த சொரூபத்தைக் காட்டிவிடும் வல்லமையினையும் பெற்றிருக்கும்; ப்ருகளின், வான்காவின் தீவிரத்தீட்டுதல்களை ஒத்திருக்கும்.

இந்திய ஆன்மீக தத்துவ இழைகளை அடிக்கடி தொற்றியபடி விசாரம் செய்யும் நகுலன், அதனை அப்படியே ஏற்றுக்கொள்கின்றாரா?

வேதாந்த உண்மைகளை எடுத்துரைக்கத்தான் அவரது இலக்கியப் பிரதிகள் உருவாக்கப்பட்டனவா? 'நேதி', 'நேதி' என எதிர்மறையாய் முடிவுறும் தத்துவமரபிலிருந்து நகுலனின் திசைவழி எங்கே போகிறது?

தீவிர ஆன்மிகப் பிடிப்பு இருந்தபோதிலும் தெய்வத்தைப்பற்றி அவர் கவலைப்படவில்லை. இதன் காரணமாகவே பிரம்மத்துடன் சங்கமிப்பது பற்றிய தேடலே எழுத்தில் அவரை ஈடுபடவைக்கிறது. இத்தேடலில் தன்னை அறிந்திட முடிந்ததா?

தமிழில் கதையைத் தவிர்த்துவிட்டுக் கதை எழுதியவர் என்று நகுலனைத்தான் கூற வேண்டும். அதிலும் யதார்த்தவாதத்தில் பாத்திரவார்ப்பு, சம்பவக் கோவை, பிரச்சினைகளின் விரிப்பு, கதைப்பின்னல் என்றவாறு நவீனத்தமிழ் எழுத்துலகம் போய்க்கொண்டிருந்த காலகட்டத்தில் புதிய வடிவத்தில் புதிய சொல்லாடல்களை நிகழ்த்தியவர். சமூகத்தைப் பாதிக்கின்ற/ சமூகம் சார்ந்த சிக்கல்களை நேரடியாகத் தொடாமல் சில நபர்களின் அக உலகங்களுக்குள் யாத்திரை செய்வதாக அமைந்தது நகுலன் எழுத்து. அதற்காக யதார்த்த பாணியிலான நாவல்களின் வரும் உளவியல் சித்தரிப்பில் இறங்குவதில்லை அவர்.

சாரதி என்பவனின் கதையைப் படித்துவிட்டு நவீனன் தன் அபிப்பிராயமாக "நிழல்களி"ல் இப்படி பதிவு செய்கிறான் :

'வாழ்க்கையின் வியர்வை நாற்றம் சொட்டி லேசான அழுகல் நாற்றம் வீசும் பிரஜைகளின் நடுவில் சிக்கி வதங்கினாலும் அவர்களிடமிருந்து வெளியே வந்து அவர்களையே பார்த்துக்கொண்டு நிற்கும் நிலை"

பெரும்பாலும் பேச்சு நடையிலேயே எழுதுவது நகுலனின் தனிச்சிறப்பான பண்பு. இதனால் நகுலனின் தீவிரமான எண்ண ஓட்டங்கள்கூட தனக்குள்தானே நிகழ்த்திக்கொள்ளும் உரையாடல்களாகி விடுகின்றன. நகுலன் எழுத்து எப்பொழுதும் முடிவுகளை, தீர்வுகளை விளக்கங்களை முன்வைப்பதில்லை. அவரது உரையாடல்கள் புதிர்களைப் போடுகின்றன, குழப்பங்களை முன் வைக்கின்றன. புதிர்களும் சிக்கல்களும் மர்மங்களும் கொண்டுள்ளதான வாழ்க்கையின் கதியைக் 'கள்ளங்கபடமற்றதான குழந்தையின் கனிவுடன் கண்டு நகைக்கின்றது; புதிர்களை விடுவித்துப் புதிய புதிர்களைப் போடுகின்றது; மர்மங்களை அவிழ்த்து வேறு விசித்திரங்களைச் சேர்க்கிறது.

"சாமி ஐயங்கார், சகோதரி சாரதா, ஸ்டாலின் பக்தர் பராங்குச நாயுடு, ஆரோக்கியசாமி, ஏன் கேசவமாதவன் கூட - இவர்கள் பிரதிரூப பிம்பங்கள் ஒன்றும் என் மனதில் யாதொரு கவனத்தையும் விளைவிக்கவில்லை. இந்த ராமசாமி ஐயங்கார் என்ற சாமி ஐயங்கார் என்பவர் மாத்திரம் என் உயிரை வதைக்கிறார்.

"நவீனா! நான் பிராம்மணன்; ஐயங்கார் பையன். இதெல்லாம் அப்பொழுது என் ஞாபகத்திற்கு வந்தது. 20 வது நூற்றாண்டில் சரித்திர யுகத்தில் பிராம்மணன் சபிக்கப்பட்டவன் ஆகிவிட்டான். தன் சுயரூபத்தை மறந்துவிட்டு, கர்மபந்தத்தில் சிக்கித்தன் சைதன்யத்தை மறந்துவிட்டான். அன்றிலிருந்து அவனுக்குத் தவிர்க்க முடியாத வீழ்ச்சி ஆரம்பித்துவிட்டது"

தன் கதையை நவீனனிடம் சொல்லிக்கொண்டிருக்கும் சாரதியின் பேச்சில் இது இடம்பெறுகிறது.

தன் சார்புகளையெல்லாம் சூழல்களையெல்லாம் திறந்த புத்தகமாக்கியிருப்பது நகுலனிடம் உள்ள இன்னொரு வலுவான அம்சம். தமிழில் எழுதும் பெரும்பாலான எழுத்தாளர்களைப் பொருத்தவரை இரண்டு முகங்கள் இருக்கும். எழுத்தில் தெரியும் முகம்வேறு, தனிப்பட்ட வாழ்வுக்குரிய முகம் வேறு. சிலரைப் பொருத்தவரை, திட்டமிட்டு இரகசியமாகக் காப்பாற்றப்படும் அந்தரங்கமுகம். சிலரைப் பொருத்தவரை, உயர்ந்த விஷயங்களை விட்டுவிடவேண்டும் என்ற நடைமுறை. நகுலனுக்கு இந்தப் பேதங்கள் இல்லை. மனதின் மூலை முடுக்கில் ஒளிந்திருக்கும் சபலம், குயுக்தி, வேட்கைகளிலிருந்து சதா ஓடியவாறு இருக்கும் எண்ணப் பிரவாகமெனும் சிந்தனைச் சுழிப்பு வரை அனைத்தும் எழுத்தில் முகம் காட்டும். முதலில், ஒளிவுமறைவின்றி முற்றமுழுதாகத் தன்னைப் பிரதியில் காட்டுவது.

அடுத்து, இது ஒருவகையான ஒப்புவித்தல் - மனதில் உள்ளதையெல்லாம் கொட்டித்தீர்த்து விச்ராந்தியாதல். அப்போது தன்னைச் சரியாக அடையாளங்கண்டு கொள்ளகூடும். 'வார்த்தைகள் வந்தன. கதவுகள் திறந்தன' என்பது மாதிரி அகத்தரிசனங்களுக்கு உபாயம்.



படிப்பகம்

www.padippakam.com


இந்த அம்சத்தைப் ப. கிருஷ்ணசாமி அழகுபடத் தொட்டுக்காட்டுகிறார்:

''தனது வேர்களை மறக்காமல் (பிராமணீயவேர்) அவற்றைத் தனது எழுத்துக்கிடையே போகும் அதிதீவிர விமரிசனக் கண்ணோட்டத்தோடு பார்ப்பதும் இவர் எழுத்துக்களில் நிகழ்கின்றன. திருக்குறளின் பாதிப்பிலிருந்து விடுபட முடியாமலிப்பதும், சித்தர்களை முழுவதுமாக ஏற்றுக்கொள்ள முடியாமலிருப்பதும், சுசீலா ஒரே சமயத்தில் காம ரூபமாகவும் சக்தி வடிவமாகவும் இருப்பதும் இதன் பரிமாணங்கள்"

''நான் அனுபவத்தைக் கண்டு அதனுள் நுழையும் பொழுது நான் ஏதோ ஒன்றின் பிரதிபலிப்பு என்பதை உணர்கின்றேன். ஆனால் எனக்கு ஒரு ஸ்வரூபம் இருப்பதாகவும் உள்ள ஒரு பிரக்ஞை என்னிடமிருந்து எப்பொழுதும் விலகுவதில்லை"

சாரதி சொன்னதாக நவீனன் தன் டைரியில் எழுதியுள்ள குறிப்பு இது.

"ஏதோ ஒன்றின் பிரதிபலிப்பு' என்ற உணர்வு அடிப்படையான தத்துவ உண்மை. அதற்கு எதிர்நிலையில் இருப்பது 'ஒரு ஸ்வரூபம் இருப்பதாக' உணர்வது இந்தச் சிக்கலும் மோதலும் உராய்வும் நகுலனின் சொல்லாடலின் தொடக்கங்கள், பிரதிபலிப்பு என்ற நிலையில் ஒரு ஜீவிக்கு முயன்று அடையவேண்டியது ஏதுமில்லை. தனிச் சொரூபம் உண்டு என்று கொள்ளும்போது உருவாதல் நிகழும்/ பரிணமித்தல் நிகழும் இந்தியாவில் தத்துவப் போக்குகளுக்குள்ளும் இந்தப் பிரிவினைகளும் வேறுவேறான போக்குகளும் நிலவினாலும், ஏகத்துவமாக்கும் சங்கரரின் அத்வைதம் சட்டாம்பிள்ளையாகிவிடும். மற்றவற்றை தலையில் குட்டி அமர்த்திவிடும்.



சந்ரு

மேலோங்கி நிற்கும் அத்வைதம் வேதாந்த உண்மையினை நேதி, நேதி என்று விலக்கிக்கொண்டே போயிருக்கும். அது, இதுதான் பிரும்மம் என்று சுட்டிக்காட்டுவதில்லை. பிரம்மம் என்று அடையாளங்காட்டுவதில்லை. மாறாக, இது இல்லை, இது இல்லை என்று எதிர்மறையாக விளக்கிக்கொண்டே போகும்.

நகுலனின் இகர முதல்வியும் இதனைச் செய்கின்றாள். வேதாந்தத்தின் போக்கையும் இகரமுதல்வியின் போக்கையும் ஓரிடத்தில் இணைத்துவிடுவது நகுலன் செய்யும் ரசமான விளையாட்டு

'இன்மை பகரும்

இகர முதல்விக்கு

இந்"நிழல்கள்"

உண்மை பகரும்'

என்று சமர்ப்பனத்தில் அதனைக் கோடி காட்டுவார்.

"வாக்குமூல" த்தில் மஞ்சள்-வெள்ளைப் பூனை-கடுவன் பூனை குறித்த சொல்லாடலிலும் இது தெறிக்கும்.

"அந்தப் பூனையை அதன் சுபாவம் அறிந்து அதை அதாக அறிந்து கொண்டபிறகுதான் இந்தப் புரியுந்தன்மை ஏற்பட்டது.

"...இது மென்மை என்றால் அது கடினம் - இது மிருது என்றால் அது முரடு. இவற்றுக்கிடையில் இருக்கும் உறவு.

"... இந்தப் பூனைகளுக்கு உள்ளதுபோல ஒருவிதப் பயமின்மை, ஒரு அவசிய பாவம் எல்லாம் வேண்டும். எழுத்தாளனுக்குப்பாலும் புலாலும் அவசியம் என்று வைத்துக்கொள்.

இந்தச் சிக்கலை/பார்வையை காப்ஃகாவை வாசிக்கும்போது நகுலன் முன் வைக்கின்றார்:

"...காப்ஃகா கவர்ச்சிகரமாக இருந்தாலும் மனிதன் எப்பொழுதுமே ஒரு குற்றவுணர்ச்சியுடன் இருக்கிறான் என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஒருவகையில் காப்ஃகாவும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்றே நினைக்கிறேன். அரண்மனையில் இடம் கிடைக்கவில்லை, விசாரணையில் கொல்லப்படுகிறான்; அமெரிக்கா ஆதர்ச உலகமில்லை; மாறுதலில் மனிதன் பூச்சியாகிறான், பிறகு இந்தப் பால் உறவு விஷயம். ஆனால் அவன் தேடல் முடியவில்லை. காப்ஃகா வாழவில்லை என்று எப்படிச் சொல்லமுடியும்?"

அனுபவங்கள் கூடக்கூட சிக்கல்கள் அதிகரிப்பதாக உணர்தல். அதன் காரணமாய் அனுபவங்களைத் தவிர்க்க யத்தனிப்பு.

இது இந்திய தத்துவத்தில் அடிப்படையாய் வற்புறுத்தப்படுவது. நகுலனின் மன உலகிலும் இந்த விசாரமே ஆக்கிரமித்துக்கிடக்கிறது. இந்த வெளிவரிச்சட்டத்திலிருந்து வெளியேறிதாண்டுதலாக அவ்வப்போது வாசகங்களும் தெறிப்புகளும்



படிப்பகம்

www.padippakam.com

இடம்பெறும். இப்படியாக

"கவர்களை எழுப்பிக் கொண்டு என்னால் சொந்தமாக வாழமுடியுமென்று எனக்குத் தோன்றவில்லை. என்னையே நான் தேட முயற்சி செய்து கொண்டிருக்கிறேன்"

தேடுதல் நிற்கும்போது வாக்கியம் முற்றுப்புள்ளி பெற்றுவிடும், வார்த்தைகள் நின்றுவிடும், பிரதி உருவாகாது.

தட்டுமுட்டுச் சாமான்கள் அடுக்கப்படும் மேஜையாகவும் சவிட்டு மெத்தையாகிவிட்டதாகவும் பிரமைகள் கொள்கின்ற இராஜசேகரன் மனநோயாளி இல்லை என்பதற்கான ஆட்சேபத்தை சாஸ்திரிகள் தெரிவிப்பார்:

"...மொழி - அளவில் இவை சில மன நிலைகளைச் சித்தரிக்கின்றன. ஏனென்றால் எந்த மனிதனும் எப்படி ஒரு மேஜையாக ஒரு சாக்ஷாத் சவிட்டு மெத்தையாக மாறமுடியும்... இதனால்தான் எனக்கு இவன் பைத்தியம் இல்லை என்று தோன்றுகிறது. இவன் ஒரு கட்டத்தில் அல்லது இன்னொரு கட்டத்தில் தன்னை ஒரு கலைஞனாகவே ஸ்தாபித்துக்கொண்டு விடுவான்"

தத்துவத்தின் பிரச்சனையை கலைஞனின் பிரச்சனையாக மாற்றிக்கொண்டதுதான் நகுலன் சாதித்த பெரிய சாதனை. இல்லாது போனால் இந்தச் சொல்லாடல்கள் பிறந்திருக்க சந்தர்ப்பம் வாய்த்திருக்காது.

பார்க்கப்படுவதும், பார்ப்பவனும் தீவிரப்படும்போது பார்ப்பவன் இல்லாது போய்ப் பார்த்தல் மட்டும் நிகழவேண்டும். பார்ப்பவன் இல்லாது போகும் போதுதான், கடந்தகாலக் கவலைகளும் / முன்னனுமானங்களும் எதிர்கால எதிர் பார்ப்புகளும் இல்லாது நிகழ் காலத்து அனுபவம் மட்டும் அதன் தீவிரகதியில் நிகழ வாய்ப்புண்டு. இந்தப் பார்வையும் அணுகுமுறையும் கலைஞனுக்கு இருந்தால் என்ன நிகழும் என்பதுதான் நகுலனிடம் நாம் காண்பது.

இப்பொழுதான் இக்கணத்திலான அனுபவத்தில் மட்டும் கவனத்தைக் குவிப்பது - மற்றவற்றையெல்லாம் விலக்கித்தள்ளிவிட்டு ஓடிக்கொண்டிருக்கும் நதியாக மனதை வைத்திருப்பது, அதில் நினைவுகள் என்ற பாசி படியாது காப்பது - இதுதான் ஜே. கிருஷ்ணமூர்த்தி முன்வைப்பது.

இக்கணத்தின் தீவிரத்தை/உக்கிரத்தை எதிர்கொள்ளத் தயங்குகையில் நினைவுகள் குமிழியிடுகின்றன, சற் ஆறுதல் தருகின்றன. இத்திசை விலகலில் நிகழின் ணம் இழக்கப்படுகிறது. இந்தப்போக்கில் ச ா தப்பித்தலையும் திசை விலகலையும் மனம் நாடத்தலைப்படுகிறது. மனதை அதன் போக்கில் விட்டால் என்ன கிடைக்கும், "நினைவுப் பாதை" கிடைக்கும்.

'தத்துவார்த்தப் பிரச்சினைகள் எழுவதே மொழி தறிகெட்டுப்போவதால்தான்' என்னும் ஜென்ஸ்டீனின் வாசகத்தை நகுலன் மேற்கோள் காட்டுவார். ஆனால், அதில் ஒரு லாபமும் உண்டு. தறிகெட்டுப்போகும் மொழியைப் பதிவு செய்தால் அற்புதமானதும் அதிர்ச்சி தருவதுமான பிரதியாயிருக்கும். அது நினைவுப்பாதை.

'வாழ்க்கையைப்பற்றி ஒரு பரஸ்பரமான சர்ச்சை' செய்திட நாட்குறிப்பு வடிவத்தைத் தெரிவு செய்துகொண்டு 28.03.69 லிருந்து 14.04.90 வரை மனநோய் விடுதியிலிருந்தபோது உண்டான மன அவசங்களை உரைநடையும் கவிதையுமாக நகுலன் தந்திருப்பது "நினைவுப்பாதை" நாட்குறிப்பு என்பதால் அது உணர்வு பாவங்கள் நீங்கிய அறிவார்த்தப் பதிவுகளாக நின்றுபோகவில்லை. நவீனன் நகுலனுடன் கொள்ளும் உரையாடலாக இருக்கிறது. வாசகனுடன் பேசுவதாக அமைகிறது. பேச்சு மொழியில் போகிறது. கட்டற்ற நகையுணர்வில் தீவிரமான விசாரங்கள் நிகழ்த்தப்படுவது அலாதியான தன்மை பெற்று விடுகின்றன. மொழியில் இறுக்கத்தை தவிர்க்கமுடிந்ததும், உரையாடல் நிகழ்த்த முடிந்ததும், நகை உணர்வுடன் பேச முடிந்ததும் தான், நகுலனால் புதுப்பிராந்தியங்களில் பயணிப்பதை சாத்தியமாக்கி இருக்கிறது. இந்திய தத்துவ விசாரத்தின் நிழலை மாத்திரம் பதிவு செய்திடாமல், சுயரூபம் கொண்ட சொல்லாடலைச் செய்ய முடிந்திருக்கிறது. அத்தீவிரத்தில் உரைநடையை விட்டுவிட்டு, கவிதையைக் கைக்கொள்ள நேர்கிறது. அப்போது கடவுளை நோக்கியதாய்ப் பயணமும் சஞ்சாரமும் இருந்திருப்பின் மானுடத்தி திளைப்பில் பக்தி மரபினரின் கவிதைகள் கிடைத்திருக்கும். இங்கே கடவுளை நோக்கியதாயில்லாததால், அனுபூதிகவிதைகளின் இடத்திலே நாவல் பிரதிகள் உருக்கொள்கின்றன.

"... ராமநாதன் போன்றவர்கள் அன்பு என்றால் என்ன என்பதை எனக்குச் சொல்லிக்கொண்டிருந்தனர். என்னிடமிருந்து வாங்கிக்கொள்ள நிறைய இருக்கிறது, எடுத்துக்கொள் என்று சொல்லாமல் சொன்னார். நானும் தாராளமாகவே வாங்கிக்கொண்டேன். சின்னச் சின்ன எறும்பே நீ என்னை இந்தப் பரவசத்தில் ஆழ்த்திவிட்டு எங்கே செல்கிறாய்? வேலை செய்ய சாகவாசமில்லாமல் நின்னுடன் பேசிக் காலந்தாழ்த்தமாட்டேன், ஆலிலைமேல் லீலைபுரியும் கண்ணன் போல், சர்க்கரைக் கடலில் கரைந்த சர்க்கரைப் பதுமைபோல் எழுத்தில் நான் கரைந்து விட்டேன். என் சிந்தனையால் நான் சாகமாட்டேன்..."

இந்தக் கரைதல், ஆழ்தல் என்பது புறஉலகை மறந்துவிடவா?

இந்த கரைதலும், ஆழ்தலும் உண்டாக்கும் ரசவாதம் ஒன்றுண்டு. நிகழ்ச்சிப் போக்கு ஒன்று நிகழ்கிறது.

"... நான் யார் யாரைச் சந்திக்கின்றேனோ நான் அவர் அவர் ஆகின்றேன்;-ராமநாதன், சச்சிதானந்தம் பிள்ளை, சாரதி, தேசமாதவன், சுசீலா இன்னும் இப்படியாக இப்படியாக. அதனால்தான் இக்கணம் பச்சைப் புழு மறுகணம் சிறகடிக்கிற வண்ணத்திப்பூச்சி."

"நினைவுப் பாதை"யில் இடம்பெறும் இன்னொரு சொல்லாடல் சுசீலா தொடர்பானது.

காதலிக்கப்பட்டவள் இன்னொருவனுக்கு மனைவியாகி விடுகிறாள். இது சம்பவம். பின்னர் அவளின் நினைவு, பிரிவின் வேதனையாகத் தொடங்கி, அவனுக்கு உத்வேகம் அளிக்கும் உணர்வாக, அவனை மீட்டெடுக்கும் சக்தியாக, விடுதலை தந்து காக்கும் தேவதையாக அவளை மாற்றியமைத்துக்கொண்டே இருக்கிறது. இதில் உருமாறுவது நகுலன் மட்டுமா? சுசீலாவும்தான். ஒரு முகங்கொண்ட சுசீலாவை பன்முகங்கொண்ட வியாபியாக மாற்றிக்காண்பது நகுலன் தானே! இந்த அர்த்தம் தொனிக்க எழுதியதுதானே 'சுசீலாவிடம் இல்லை சுசீலாவின் சிறப்பு' என்னும் வாசகம்.

"... ஒரு கணத்தில் கண்டது முதல் இந்தக் கட்டை கீழே விழும்வரை என்னில் இருக்கும் சுசீலா என்ற என் சாபத்தை - இவர்களையெல்லாம் இலைகளையெல்லாம் விட

'நீ தான் எனக்கு

வேண்டியிருக்கிறது.

நீ வரவும் மாட்டாய்



படிப்பகம்

www.padippakam.com

போகவும் மாட்டாய்
நீ இருக்கிறாயோ
இல்லையோ
என்பதுகூட
எனக்கு நிச்சயமாகத்
தெரியாது' "

சுசீலாவை சாபமாகக் குறிப்பிட்டாலும் அவருக்கு வரமாகவே திகழ்ந்திருக்கிறாள் என்பதை நம்மால் காணவே திணறுகிறது. நகுலனின் கதைகளும்



கவிதைகளும் நாவல்களும் சுசீலாவை காரணமாகப் பிறந்தவைதானே! மௌனி கதைகளில் முகங்காட்டிய சுசீலா நகுலனிடம் ஊற்றுப்பிரவாகமாகிவிடுகிறாள்.

'காணும் பெண்களிடம் எல்லாம் சுசீலாவின் ஒரு அம்சம் தோன்றி மறைந்ததாக' போதங்கொள்ளும் நவீனன் நினைவில் படர்வது:

"அகிலலோகநாயகி, வராபயங்கரி, அன்னலெவியா, ப்ளூராபெல், ஐராவதி, காவேரி, கோதாவரி, கங்கா, யமுனா, நீளமாக ஓடும் நைல்நதி, இந்த நதியைப் பார்த்தால் பயமாக இருக்கிறது, சமுத்திரம்போல் பொங்குகிறது."

"எப்பொழுதுமே மனிதன் பெண்ணை விரும்பும் அதே சமயம் அவளைக் கண்டு பயப்பட்டிருக்கிறான்....

"அவளோ அடிப்படையில் தாய்ப்பாம்பு. ஆடு பாம்பே ஆடு நாதன் முடிமேல் இருக்கும் நல்ல பாம்பு. குண்டலினி. சுசீலா நீ கம்பனைப் படித்திருக்கிறாயா? பிரிந்தவர் கூடினால் பேசமுடியுமா? நீ எப்பொழுது என்னைவிட்டுப் பிரிந்தாய்? ஏன் இப்படி உன்னைப் பற்றிப் பேசும்பொழுதும், எழுதும்பொழுதும்-இந்தப் பரவசம்? இந்த அனுபவம் என்னை ஆழ்ந்த வியாகுலத்திலும் ஒருவகை செய்ய முடியாத ஆனந்தத்திலும் ஆழ்த்துகிறது. இந்த ஜென்மத்தில் நீ எனக்கு அன்பின், பக்தியின் புனிதத்தன்மையைக் கற்றுக்கொடுத்திருக்கிறாயள். இந்தத் தீ என்னைப் புனிதமாக்குகிறது; என்னைக் குளிர்விக்கிறது. இந்த நினைவில் நான் வாழ்வையே கடந்து விடுவேன்...."

இளமைக் காலத்தைப் பாரிஸில் கழித்துவிட்டால் பின்னர் அது எப்போதும் எங்கும் ஒருவரை விட்டு அகலாத விருந்தாக இருந்துகொண்டே இருக்கும் என்னும் பொருளில் ஹெமிங்வே குறிப்பிட்ட **'For Paris is a movable feast'-** ஆக நகுலனுக்கு சுசீலாவின் நினைவு.

"நீ இருக்கும் இடம் பார்க்காமல் உன்னைப் பற்றிக்கூட நினைக்காமல், கண் சலிக்க, வாய் குவிய, மனம் வியக்க, நீ இருக்கும் அதே இடத்தில் நானும் இருக்கிறேன் என்ற ஒரு உபபோதமே என்னை உன்மத்தமாக எவ்வளவு நிமிஷங்கள் யுகாந்திர காலமாகக் கற்பூரம் கரைவதைப்போல நான் இருந்திருக்கிறேன். ஆனால் காலந்தான் கற்பாந்தத் தத்துவத்தையும் சிறைப்படுத்தி விடுகிறது"

இந்நினைவில் இன்னொன்று தட்டுப்படுகிறது. ஆண் தான் இழந்து போன/மறந்து போன இன்னொரு பாதியான பெண் அம்சத்தை தேடிக்கொள்ளவேண்டும் என்று.

**"Some Yogis can make both the penis and the testes disappear in the pubic arch, so that the body has the appearance of that of a woman"**

என்னும் அவலானின் வரிகள் நகுலனை வெருட்டுகின்றன.

'இராமகிருஷ்ணர்கூட ஒரு காலகட்டத்தில் தன்னைப் பெண்ணாகப் பாவித்துப் பெண்போல ஆடை அணிந்து கொண்டு நடை உடை பாவனையில் கூடப் பெண் போல் பழகினார் என்று சொல்கிறார்கள்'

என்பது இதைப்படுத்துகிறது.

கலைஞன் என்ற நிலையில் இந்த உணர்வும் தேடலும் அவனை எங்கோ கொண்டுபோய் சேர்க்கும்?

"... கலைஞனும் சிருஷ்டி விஷயத்தில் ஈடுபடுகையில் பால் வேற்றுமையிலிருந்து அகன்று நிற்கிறான். அப்பொழுது அவன் ஆணானாலும் சரி, பெண்ணானாலும் சரி அர்த்த நாரீசுவர வடிவைப் பெறுகிறான். கலைக்குப் பொருந்துவதுதான் வாழ்க்கைக்கு பொருந்தும். தான் இழந்த பாதியைத்தான் இங்குப் பிறந்த துவேஷத்தால் நாம்தேடிக்கொண்டிருக்கிறோம்"

'நாம் எது ஆவோம் என்றிருக்கிறதோ அது நம்மைப் பின் தொடர்கிறது. அதன்பின் நாம் செல்கிறோம்; நகுலனைப் பின் தொடர்வது யார்? சுசீலா. சுசீலாவை நகுலன் பின் தொடர்வது எதற்கு? சுசீலாவாக.

ஒரு கட்டத்தில் சுசீலா, கொல்லிப்பாவையாகி ஆட்டிவைப்பதுமுண்டு. வனப்புக் காட்டி வசீகரித்து மயக்கி உருவழித்து விடுபவள்தானே கொல்லிப் பாவை. அழித்து விடுபவள் கொல்லிப்பாவையா? தன்னில் கரைத்து விடுபவள் கொல்லிப் பாவையா? அழித்தல்வேறு, கரைத்தல் வேறா?

"... மறுகணம்
காலங்கண்டு
நகைக்கும்
நிகழும் நிமிஷம் போல்
உயிர் வெளவி
உயிர் காக்கும்



படிப்பகம்

www.padippakam.com

யாதுமறியாப் பேதைபோல்
யான் போற்றும்
கொல்லிப்பாவையாள்
தன்மை பொலியத் தன்னுருவாய்
நீ நிற்பாய்;
அது கண்ட நெஞ்சம்
பறை கொட்ட
நின்முன் மீண்டும் மீண்டும்
வந்தேன்; வகை செய்யப்பட்டேன்"

இது மட்டுமில்லை. பால்பேதமற்று அவஸ்தை கொண்டு மன்றாடுதல் நிகழ்தலும் நடக்கின்றது:

"...நாக்கடித்து
வாய்ப்பறை கொட்டி
வேதாந்தக் கயிறு திரித்துக்
குறிதான் ஏதுமின்றி
ஆண்மை தோற்று
பேடியெனப் பால்திரிந்து
அவள் உருக் கண்டு
உள்ளங் குலைந்து
உரம் வேண்டி
வந்து போகும் அர்ச்சுனன் நான்"

இன்னும் சொல்லிவிட்ட நிறைவு உண்டாகவில்லை. யூங்கின் வாசகம் பொறிதட்டுகிறது.

"அவள் கட்டுக்கடங்காத ஜீவப் பிரளயம்;
மோகினிப் பிசாசு; வாழ்விக்க வந்த பிராட்டி;
தவிர மனிதனைக் காதல் - சாதல் என்ற இரு உச்சங்களுடனே இழுத்துச் செல்லும் வேகம்; கியா சக்தி; பிளயத்தின் ரூப சத்தியம்"

நினைவுப் பாதையின் 5வது அத்தியாயம் முழுவதும் நனவு மனத்தின் பங்கில்லாது முற்றிலும் நனவிலி மனத்தின் விகசிப்பாய் இருப்பது; 10.04.70 விருந்து 14.04.70 வரையிலுமான இறுதி 5 நாட்களிலான குறிப்புகளைக்கொண்டது.


கடுமையான கேலி கிண்டலாயிருக்கும். கன்னாபின்னாவென்று போகும். எதையும் ஒன்றுமில்லாததாக்கிவிடும். உற்றார் - உறவினர், வேண்டியவர்-வேண்டாதவர், பெரியவர்-சிறியவர் நண்பர்-விரோதி எவரும் விலக்கப்படவில்லை. எல்லாருமே இப்பேனாவரைதலுக்கு ஆளாகி ஒன்றுமில்லாது போகின்றனர். இது, தன்னை ஒன்றுமில்லாதாக்கிக்கொள்ளும் நடவடிக்கையா...! அகத்தின் சுவடுகூட இல்லாது போவதற்கான சாதகமா?

எந்தத் தர்க்க விதிகளுக்கும் கட்டுப்படாது எந்த நியதிகளுக்கும் அடங்காது எல்லா வரம்புகளையும் மீறிப்பாயும் மனத்தில் பாய்ச்சல் இங்கே நிகழ்கிறது.

பயங்கரமாயும் பீதி நிறைந்ததாயும் சவால் மிக்கதாயும் உள்ள சித்தப் பேதலிப்பை இப்படி நையாண்டிக்குரிய விஷயமாக்குவது அவ்வளவு சாதாரணமான காரியமல்ல.

கோயாவும் ப்ரூகலும் வான்கோவும் ரிம்பாவும் தீவிர மனநிலைகளில் சஞ்சாரம் செய்ததைத் தீட்டியுள்ளனர், கவிதையாக்கியுள்ளனர். தைரியத்தை வரவழைத்துக் கொண்டு காணவேண்டிய திகைப்புகளும் பிரமிப்புகளும் அவர்களிடம் காணவே கிடைக்கின்றன.

ஆனால் அத்தீவிர, உக்கிர கணங்களைத்தாண்டிய



அடுத்தகட்டமாகிய எள்ளலும் பரிகசிப்பும் துவம்சமாக்குதலும் நகுலனிடம் இருப்பது தனிச்சிறப்பான ஒன்று. நகுலனிடம் உள்ளதுபோல எம். வெங்கட்ராமின் 'காதுகளில்' இடம்பெற்றுள்ளது.

பால்யத்திலேயே பெற்றோரை இழந்து அனாதைகள் இல்லத்தில் வளர்ந்ததன் காரணமாக அடையாளச் சிக்கலில் உழன்று மனநோய்க் காப்பகத்தில் சிகிச்சை பெற்று வந்து கவிதைகள் எழுதத் தொடங்கிய பில்நாட் என்னும் அமெரிக்க கவியை இங்கே நினைவு படுத்தலாம். ஃபிரெஞ்சு ஆபாச நாவலின் கதாநாயகனின் பெயரான 'புனித ஜெராட்' பில்நாட், தன்னைத் தனித்தொதுங்கித் தூரத்திலிருக்கும் குளிர்ந்த மீனாகக் கருதுவார்.

வாழ்விலும், கவிதையிலும் ஆளுமை இழந்திருப்பதானது, முடிந்த அளவுக்கு மக்களது உணர்வுப் போக்கையும் எண்ணப் போக்கையும் தன்னகத்தே கொண்டு வரும் வகையில், கற்பனை விரிவுக்கும் ஆளுமை விரிவுக்கும் வழிகோலும் என்று உணர்வார்.

நவோமி என்னும் கற்பிதமான பெண் மீதான காதலில் மொழிக்குச் சாத்தியமான கற்பிதங்களையும் கனவுகளையும் உருவாக்கிவிடுவார்.

"சிறுமி ஒருத்தியின் கல்லறை மீதான
ஒரே எதிர்வினை
அதன் முன்கிடப்பதும் இறந்துவிட்டதுபோல
வேடிக்கை காட்டுவதுமே" என்பார்

"ஒவ்வொரு மாலைப்போதும் கடல், நட்சத்திர மீனைக் கடற்கரையில் வீசிச் சிதறடிக்கின்றது. சூரியனில் இருண்ட வறுமைகளைப் படியவிட்டு, விடியலில் அவை மாண்டு போகின்றன. அக்கோடையில் நாங்கள் அங்கே துயின்றோம். அவற்றின் பிரகாசமான பரிமாணங்களில் எமது உடல்களால் புணர்ந்தோம். மூச்சிறைக்கும் நட்சத்திர மீன்களால் வளைக்கப்பட்ட நாங்கள் எங்களை உருவாக்க இணைந்தோம். எம் அவயவங்களிலிருந்து சொட்டிய வியர்வைத் துளிகளை இராவெல்லாம் உறிஞ்சி, அவை உயிர்த்திருந்தன. அடிக்கடி அவள் கூச்சலிட்டாள். உனது கரம்! - எனது அக்னியுடன் அவளைத் தழுவுகின்ற ஒரு நட்சத்திர மீன் அது" என்பார்

மனதை, புலன்களை முற்றிலும் ஒழுங்கு பிசகச் செய்தால்தான் கவிதை சாத்தியம் என்று இயங்கிய ஃபிரெஞ்சுக்கவி ரிம்பாவை நகுலனுக்கு அருகே கொண்டுவரமுடியும்.

சிறுவயதிலிருந்து தனித்து வளர்ந்து அனுபூதியாளர்களின் நம்பிக்கைகளுக்கு நெருக்கமான எண்ணங்களைக் கொண்டிருந்த ரிம்பா இடைக்காலத்து ரசவாதிகளை வீரர்களாகக் கருதியிருந்தார். "நான் என்பது இன்னொரு நபர்" என்று அவரது 15வது வயதில் குறிப்பிட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

கவிதை உருவாக்கத்தை ஆன்மீக வளர்ச்சியாகக் கொண்டிருந்தவர். மதத்தை இழிவு படுத்தினார். வீட்டிலிருந்து ஓடிச்சென்று தன்பால் புணர்ச்சியாளர்களுக்கு இரையானார். பால் வேர்லைன் என்பவர் மட்டுமே அவருக்கு நெருக்கமாயிருந்தார். இருபால் புணர்ச்சியாளரான வேர்லைன்தான், ரிம்பாவின் நெருக்கடியான காலகட்டங்களில் ஆறுதலாய் இருந்திருக்கிறார், வழி நடத்திச் சென்றிருக்கிறார். ஒரு கட்டத்தில் ரிம்பாவை நீங்கிச் சென்றிருக்கிறார். ஒரு கட்டத்தில் ரிம்பாவைச் சுட்டுக்காயப்படுத்திவிடுகிறார். அதிலிருந்து தன் வீட்டில் தனி அறையில் உணவினைக்கூட மறுதலித்து, கூச்சலிட்டும் குழம்பியும் எழுதியும் தீவிர கணங்களில் வாசம் செய்கிறார். மறுபடியும் வீட்டிலிருந்து ஓடிச்செல்கிறார். அபிசீனியாவில் வர்த்தகராயிருக்கிறார். 37 வயதில் இறந்து போகும் ரிம்பா, 19 வயதுவரைதான் கவிதை எழுதினார் என்பது இன்னொரு புதிர்மிகு விஷயம்..

"சூசிப்பெண்ணே
ரோசாப் பூவே
ராத்திரி வெயிலடிக்கும்
பகலிலே பைத்தியம் பிடிக்கும்..."

"வாவா ஜகஜண்டி மாடே
மரத்துக்கு மரம் ஏறும் சம்மந்திக் குரங்கே
ஆனை புகுந்ததாம் தோப்பில்
அழுகப் பழுத்ததாம் மாம்பழம்
குதிரை புகுந்ததாம் தோப்பில்
குலுங்கப் பழுத்ததாம் மாம்பழம்
சித்தானைக் குட்டிக்குக் கொம்பு முளைச்சுதாம்
பட்டணமெல்லாம் சுத்தி சுத்தி வந்ததாம்
கையில் வெண்ணெய் சிந்திற்றோ
கமல முகம் வாடித்தோ
துயில் பட்ட தங்கமே
சங்கூதி ஜலம் தெளித்து..."

என்றபடி, கவிதையில் விசித்திரமான சொல்லாடல்களும் விபரீதமான படிமங்களும் அநாயசமான நினைவு கூர்தல்களும் ஒன்றாய் அமைகின்றன. மிகையதார்த்தப்பாணியில், ஆண்ட்ரே பிரெட்டன் குறிப்பிட்டது போல பேனா தானாக எழுதிச் செல்லும் முறை என்று சொல்லலாமா?

இன்னொரு பத்தியில் தன்னைப் பாடையில் கிடத்தும் காட்சியை விவரிக்கிறார். அப்போது கூட அவரது பேனா வரைந்து செல்வது பாரதி வரியை, புதுமைப்பித்தன் பாத்திரத்தை...

"... என்னைப் பாடையில் வைத்துக்கட்டிட வாயில் துணி அடைத்து, பாடையருகில் போட்டுவிட்டு; நல்ல தாம்புக் கயிறு வாங்கக் குடல் தெறிக்க ஓடினான்; ஐயோ பிழைத்தேன் என்று நானும் சிட்டுக்குருவியாய் விட்டு விடுதலையாய்ப் பறக்கிறேன். சாத்தா, எனக்குப் பைலார்க்கஸ் பைத்தியம் நன்றாகப் பிடித்துவிட்டது; எனக்கு உன் தத்துவச் சாம்பில் கொஞ்சம் தா...

பிரக்ஞையின் தீவிரகதியில் இயங்கி அதனைப் பிரதியாக்க முற்படும் கவிக்கு வார்த்தைகள் கூட தடையாகின்றன. மேலும் நாம் வாசிக்கும்போது வார்த்தைகளையா படிக்கிறோம்? என்ற கேள்வி வேறு எழுகின்றது. 'வார்த்தைகள் புத்தகத்தைக் கறைப்படுத்துகின்றன' என்ற மேற்கோள் நினைவுக்கு வருகிறது.

"படிக்கப் படிக்க வார்த்தைகள் அழிகின்றன. பிரக்ஞையின் நிதானமான போக்கும்"

உக்கிரம் கொண்ட பிரக்ஞையை வெள்ளைத்தாள்கள் எப்படிச் சகித்துக்கொள்ளும் என்பதான கவலைவேறு மூளும்; "பேப்பருக்குத்தான் எவ்வளவு சகிப்புத்தன்மை"

போலி செய்தலும் திரும்பச் சொல்வதும் எழுத்தாகா.

".. நானே எழுதின மாதிரி என் பேனா எழுத ஆரம்பிக்கிறபொழுதே, உருவங்கள் நிழல்கள் ஆகி விடுகின்றன"

தர்க்க நியதிகளை உடைத்துப்போட்டு எழுத்து உடைப்பெடுக்கும்போது தர்க்கரீதியாக ஒரு வாக்கியத்தைப் புனைந்து பார்க்கத் தோன்றுகிறது நகுலனுக்கு:

**"எங்கே புத்திசாலித்தனமாக இருப்பது அபாயகரமோ அங்கே முட்டாள்தனமாக இருப்பது புத்திசாலித்தனம்"**

நவீனன் தான் எழுதிய 500 பக்கங்கள் கொண்ட நாட்குறிப்புகள் ஐந்தினை நகுலனிடம் தந்து விட்டுப்போகிறான். நவீனனைப் பற்றிய நினைவுகளையும் நாட்குறிப்புப் பகுதிகளையும் கொண்டதாக அமைந்தது "நவீனன் டைரி"

"நவீனன் டைரி" முழுவதுமே நனவிலி மனதின் விளையாட்டுத்தான்.

டயரி என்றால் என்ன? மனச்சிதறல்கள் என்பதாக இந்நாவலில் ஓர் உரையாடல் வரும், ஒருவகையில் மனச்சிதறல்கள் என்ற வரையறை இந்நாவலைப் பொருத்துக் கச்சிதமானதாகவே இருக்கிறது.

எழுத்தாளன், வாசகன், எழுத்துப் பற்றிய சொல்லாடல்கள் அங்கங்கே இடம் பெறுகின்றன. உரையாடல்களாகப் பதிவுகளாக அவை அமைகின்றன. வாசிப்புக் குறித்து பின் நவீனத்துவம் கூறுவதை நினைவூட்டுகின்றன.

"... ஒரு எழுத்தாளர் தரமானவன் என்று ஏற்றுக்கொள்ளப்படுகிறான் என்பதே அவன் ஒவ்வொரு வாசகனுக்கும் அவன் வகையில் ஏதோ ஒன்றைக் கொடுக்கிறான் என்பதுதான் போலும்... எழுத்தாளன் அங்கிருந்து வந்து கொண்டிருக்கையில் இவன் இங்கிருந்து போகிறான் என்பதனால்தான் போல் இருவருக்கும் இருவர் முகங்கள் புலப்படுகின்றன போல"

எழுதுபவன் - வாசகன் உறவு நிலை இப்படி என்றால், எழுதுபவன் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கான ஒரு விவரணை"

**"ஒரு கலைஞனின் கெட்டிக்காரத்தனம் அவன் முட்டாளாக இருப்பதில்தான் இருக்கிறது"** 'நானே ஒரு புத்தகம்' என்று கூறிக்கொள்ளும் நவீனன்,

'சூன்யத்தை அறியவேண்டுமானால் நான் சூன்யனாக வேண்டும்' என்பான்.

இந்த எழுத்தின் உச்சமாக ஒரு கவிதை உண்டாகிறது:

"அறையில் நாற்காலி
சுவரில் எட்டுக்காலி
தெருவில் விட்டவழி
அறையுள்
தட்டுமுட்டுச் சாமான்கள்
பயணத்தின் முடிவில் ஒருவன்
பயண வழி நெடுக
ஒருவன்



படிப்பகம்

www.padippakam.com

கடலின் இக்கரையில்
மணல் வெளி
அக்கரையில்
அலைகளின்
அடங்காத வெளி
கரையிரண்டும்
மணலென்று
கண்டால்
எல்லாம் வெட்ட வெளி"

**"எழுத எழுத எழுத்து அழிகிறது, வாசிக்க வாசிக்க வாசகன் தொலைகிறான்"**

தத்துவார்த்தச் சொல்லாடலே எழுத்தாக்கச் சொல்லாடலாயும் விரிவு கொள்கிறது. இல்லாது போதலும் அழிதலும் சூன்யமாதலும் எழுத்திலும் வாசிப்பிலும் காணக்கூடியதாக உள்ளது.

தத்துவார்த்த உலகின் அக்கறைகளையெல்லாம் கலை உலகின் பிரச்சனைப்பாடுகளாக மாற்றிக்கொளவதும் கலைஞனாக நின்று தத்துவார்த்த சிக்கல்களை அணுகுவதும் அப்போது சித்தாந்தங்கள் விடைபெற்றுப் பிரிந்து கொள்ள, சித்தர் மொழியில் திருமூலர் மொழியில் சிவவாக்கியர் மொழியில் தாயுமானவர் மொழியில் அனுபூதிக் கவிதைகளும், மிகை யதார்த்தப் படிமங்களும் நனவிலி மனத்தின் சிதறல்களும் பிரக்ஞையோட்டத்தின் தெறிப்புகளும் பிரதிகளாக வந்துகொண்டிருக்கின்றன.

"... எனக்குக் கோவிலில் ஒருவருமில்லாத சமயத்தில் புகுந்து திரிகையில் என் வயது கற்பாந்த காலம் சென்ற பிரமை - என் அம்மையின் ஸ்தனங்களின் ரூபமும் ஆண்டவன் குறியும் என்னுள் ஒரு பவித்திர உணர்ச்சியை விளைவிக்கின்றன?" என்பதுபோன்ற அபூர்வமானதும் அதிர்ச்சியூட்டுவதுமான தொன்மக்கவி வரைதல் அப்போது சாத்தியமாகிறது.

நுட்பமான கவித்தெறிப்பும் உக்கிரமான பிரக்ஞைப்போக்குமுள்ள ஒருவன், மரபை எதிர் கொள்ளும்போது சூக்கும நிலையிலான அனுபூதிக்குப் பதிலாக புலனின்பம் சார்ந்த ஒருவித திளைப்பை பவித்திரத்துடன் அனுபவித்தல் நிகழ்கிறது. விக்ரமாதித்யன் கவிதைகளில் அங்கங்கே இத் தெறிப்பு பளிச்சிடும்.

"நாய்கள்" நாவலில் ஓர் இடம் :

"... தானாகவும், பாத்திரமாகவும், எழுத்தாகவும், கண்டதையும் காணாததையும், பார்த்த மனிதர்களையும் பார்க்காத தெய்வங்களையும், கிடைத்த அனுபவங்களையும் தனியாக வந்து சேர்ந்த ஞானங்களையும் அதையும் இதையும் எதை எழுதுகின்றோம் என்று தெரியாமலேயே எதை எதையெல்லாமாமோ எழுதிக்கொண்டிருந்தான்..."

எழுத்தின் தீவிரமான ஒரு முகத்தை அடையாளம் காட்டுவதுபோல ஒரு குறிப்பு அதே நாவலில் இடம் பெறும் :

"... அவனுக்கு எழுதுவது என்பதே எதை எழுதாமல்விட்டோம் என்பதைக் காண்பிப்பதற்கோ"

அறிந்ததன் மூலம் அறியாததை அறிவது மாதிரி. நகுலனுக்கு எழுத்து என்பதே ஒருவித தத்துவார்த்த தளத்திலான போதமாகிவிடுகிறது.

"எழுத எழுத ஏன் எழுத்துக்கரையமாட்டேன் என்கிறது" என்னும் கவலைபிறக்கிறது.

மொழி இல்லாததான ஒரு நிலையை தாயுமானவர் பாடல்களில் காணக்கூடும் என்று தமிழவன் குறிப்பிடுவார். இறையுணர்வில் கரையும் தாயுமானவரால் மொழியைக் கரைந்து போகச் செய்ய முடிந்திருக்கிறது.

உன் முகயாத்திரை செய்து செய்து நகுலன் தான் உண்டது என்ன என்பதை விவரிக்கிறார்:

"மனம் என்பதே ஒரு ஆழம் காணமுடியாத குப்பைக்கூடைதானே? கொட்டிக் கவிழ்க்கக் கவிழ்க்க குப்பை கூடிக்கொண்டுதானே இருக்கிறது? இந்தக் குப்பையிலே சில உயர்வகையானவையென்றாலும் அவையும் குப்பைதான்"

எழுத்துப்பற்றி ஹெர்மன் ஹெஸ் சொன்னதை நினைவு கூர்ந்து கொள்கிறார்:

**"நம்மை எழுத வைப்பதெல்லாம் நம்விட்டை பற்றிய ஞாபகம்தான்"**

இழந்து போனதும் மறந்து போனதுமான ஒன்றை நினைவில் மீட்டிப் பார்க்கும் காரியமே எழுத்தாகிறது. அப்படி மீட்டிப் பார்க்கும்போது அவ்வளவையும் அப்படியே எழுதி விடலாகாது என்னும் எச்சரிக்கை குறிப்பையும் முன் வைக்கிறார் நகுலன்.

"எழுத்து விஷயத்தில் அர்த்தம் பூஜ்யமாவதில் தான் அர்த்தம் உருவாகிறது என்று : இது எழுத்தின் ஒவ்வொரு அம்சத்திற்கும் பொருந்தும் - வார்த்தை, வார்த்தைச் சேர்க்கை, அந்தச் -சேர்க்கைகளின் முழுருபம் - ஒன்றிலும் நாம் கண்டு-பழகி-களைத்துப்போன உருவங்களைப் பார்க்க கூடாது. நிறைய - நிறைய எழுதி, எழுதி, எழுதவேண்டுவதை எழுதாமல் விட்டுவிடவேண்டும்"

தென்படுவதை வைத்து தோற்றதைக் கண்டு மனப்பதிவுகளின் அடிப்படையில் எழுதுகிறோம், பேசுகிறோம்.

வார்த்தைக் கூட்டங்கள் என்னும் குறிகள் மூலம் அர்த்தத்தை தொடர்பு படுத்த விழைகிறோம்.

கேட்பவன்/வாசகன் தன் பார்வைக்கேற்ப ஒன்றை பெற்றுக்கொள்கிறான்.

இந்நிகழ்வில் தோற்றம் ஒன்றாயும் அதன் பின்னுள்ள நிஜம் வேறொன்றாயும் இருக்கலாம். தோற்றத்தை வைத்து உண்டான மனப்பதிவுகள் ஒன்றாகவும், அவற்றை வார்த்தைகளில் இறக்கும்போது இன்னொன்றாகவும் மாறிடலாம். சொல்வதும் எழுதுவதும் ஒன்றாயிருக்க புரிந்து கொள்வதும் வாசிப்பதும் வேறானதாகலாம்.

"தெரிஞ்சவனைப்பத்தி தெரியாதவற்றை, தெரியதவர்களைப்பற்றி தெரிஞ்சதைப்பற்றி, ஆள் இல்லாமல் பேர் இல்லாமல் தன்மைகளை மாத்திரம், தகவல்கள் இல்லாமல், தகவல்களைக் கொடுத்து தன்மைகளைக் காட்டாமல், எப்படியும் எப்படியாவது சுற்றி வளைத்துச் சொல்ல வந்ததைச் சொல்லித்தான் ஆகவேண்டும் என்று ஒரு உத்வேகம்"

தன்னிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளவே எழுத்து சாதனமாகிறது என்று உணர்ந்து கொள்ளும் நகுலன், எழுத்தின் சாத்தியப்பாடுகளாக அறிவது:

"எழுத்து எங்கெல்லாம் நம்மை அழைத்துச் செல்கிறது. தட்டின கதவுகளெல்லாம் திறக்கும் போலும். ஊசி வழி நூல் செல்லும் என்பதுபோல மனம் வழி எழுத்துச் செல்லும் போலும். மனம் ஆசை வழி செல்லும் போலும். ஆசையால் அறையலுற்றேன் என்றான் கம்பன். சொன்னால்தான் சத்தியம் வெளிப்படும்; சாத்யங்கள் சிவசத்யங்கள் ஆகும். அன்றிருப்பதை இன்றும்



படிப்பகம்

www.padippakam.com

காண்கையில் காலமே காலாதீதமாகி விடுகிறது"

"இவர்கள்" நாவலில் கதை சொல்லி தன்னுடன் தானே பேசுவதாக, உரையாடிக்கொள்வதாக பின்னொரு கட்டத்தின் தனி மொழியுரைப்பதாக அமைகின்றது.

முன்னிறுத்திப் பேச நவீனனும், இகர முதல்வியும் பேனாவும் இருக்கவே செய்கின்றனர்.

எழுத்துக்கும் பேச்சுக்கும் இடைவெளி இருக்கலாகாது என்ற அக்கறையுடன் தொடங்குகிறது இந்நாவல். இந்த அக்கறை எழுத்துடனான உரையாடலாகவும் போய்விசிறது. ஒருபுறம் பேனா எழுதிக்கொண்டே போகிறது. பிரக்ஞை நிலையிலுள்ள மனம், அதனைத் தாண்டிய அடிமனம் என மனம் பேதப்படுவதற்கு முன்னிருந்த ஆதிமனத்திலிருந்தே நகுலனின் பேச்சு/ எழுத்து தொடங்கிவிடுகிறது. பெக்கெட்டைப் போல, ஜாய்ஸைப் போல. அப்போது மொழியில் நூதனங்கள் கிடைக்கின்றன. அரட்டை, வெளிப்படு என்னும் ரூபங்களில் எழுத்து நுங்கும் நுரையுமாகப் பாய்ச்சல் கொள்கிறது.

கதை சொல்லிக்கு உகப்பான ராமனாதனையும் (கநாசு) நல்ல சிவன் பிள்ளையையும் (மௌனி) சுற்றிச் சுற்றி வருகிறது பேச்சு. அங்கங்கே பசுவய்யா தலையிலும் தருமு தலையிலும் குட்டிவிட்டுப் போகிறது.

படித்தவர்களை வேறு பெயர்களில் இடம்பெறச் செய்யும் நகுலன், பிடிக்காதவர்களை அவர்தம் புனைப்பெயர்களிலே தந்து விடுவது சுவராஸ்யமானது.

"... இந்த ஒத்தரை ஒருத்தர் காக்கற விஷயம், இந்த ஒத்தர் ஒத்தரோட பேசற விஷயம் - இதில் எல்லாமே அடிலெ ஓடறது என்னன்னா நமக்கு நம்மோடேயே பேச முடியாதங்கறதுதான் - என் உள்ளே இருக்கிறது வெளிலே வர்றதுக்கும் உன் உள்ளே இருக்கிறது வெளிலே வர்றதுக்கும் நாம்ப ஒத்தரை ஒத்தர் பாக்கர மாதிரியும், பேசறமாதிரியும், உள்ள பாவனையிலெ இறங்கவேண்டியிருக்கே..."

பேசுவதுபோலவே எழுதினால்தான் சிந்தனைப் போக்கை அப்படியே தருவதாக அமையும் என்று எண்ணுகின்ற நகுலன் தான் எழுத்தின் பெரும்பகுதியை அப்படியே எழுதிப்பார்த்திருக்கிறார். இதுதான் எழுத்தில் அவரது விசுவாசத்தையும் தீவிரத்தையும் அறிந்துகொள்ள உதவுவது. இந்தப் பேச்சு தனிமொழியில் உச்சத்தை அடையும்போது அடிமனத்தின் எழுத்தாகி விடும். அதனைத்தாண்டிய பயணம் கவிதை உலகிற்குள் கொண்டு சேர்க்கும். அங்கே தாயுமானவர், பத்திரகிரியார், திருமூலர் வழிவந்த தமிழ் வளங்காட்டும் தன்னை அந்நியனாக, அநாமதேயமாக, பறையனாக உணர்ந்து கொள்ளும். சுசீலாவைத் தேடும், பரவசத்தைப்பாடும். மலர்களோடும் நட்சத்திரங்களோடும் குழந்தைகளோடும் விருட்சங்களோடும் கிளிகளோடும் உரையாடும், ஒன்றிப்போகும்.

எல்லாவற்றினின்றும் விலகி வேறுபட்டு சோதியில் ஒன்றிவிடப்புறப்பட்ட பயணம் திசைமாறி அலைந்து திரிந்து புறப்பட்ட புள்ளிக்கு வந்து சேரும். இப்போது அந்த ஜீவி அந்நியமானதல்ல, அநாமதேயமல்ல. அது இந்தப் பிரகிருதியுடன் இணக்கம் காண்பது. இந்த உறவில் களிப்படைவது. ஏனெனில் அது உருமாற்றமடைந்துவிட்டது. அது ஒளியால் குதூகலத்தால் பாடலால் ஆன ஜீவியாகும்.

தத்துவ ஞானியும், கலைஞனும் எப்படி வேறுபடுகின்றனர்? என்பதை "ரோகிகள்" நாவலில் ஓரிடத்தில் விவாதிக்கிறார்:

'தத்துவஞானி தன் அடிப்படை ஸ்தானத்திலிருந்து நகராமல் எல்லாவற்றையும் பாகுபாடு செய்கிறான்; கலைஞன் ஸ்தானத்தை மாற்றி விதவிதமாகப்பாகுபாடு செய்கிறான்'

'யாத்திரை' குறுநாவலில் அச்சுதன் என்னும் நாய்க்கும், நவீனனுக்குமிடையேயான உறவு அசாதாரணமாக இருக்கிறது.

நாய்களும் பூனைகளும் பறவைகளுமான உலகில் நகுலனின் கதை சொல்லிகளால் இயல்பாக இருக்கமாகமுடிகிறது; இணக்கம் கொள்ள முடிகிறது.

குழந்தைகள் அருகில் இருக்கையில் குதூகலப்படமுடிகிறது; கொண்டாடமுடிகிறது. ராமகிருஷ்ணர் மாதிரியான ஞானியரின் இருப்பு தரிசனம் தருவதாய் அமைகிறது: பல விஷயங்களைச் சொல்லாமல் சொல்லிவிடுகிறது.

"என் கவிதைகளை அப்பாவும் வாசித்தார். அவருக்குப் புரியாமலிருக்க வசமில்லை. ஆனால் அவர் இயற்கைக்கேற்ப அதை அவர் அசட்டை செய்தார். அம்மாவுடைய வியாதியே மருந்தாகும் என்று பேசாமலிருந்து விட்டாள்"

நவீனனுக்கும், தாய் - தந்தைக்குமிடையேயான உறவின் போக்கை இப்படிச் சுட்டிக்காட்டுவார். எழுத்தில் நிறை வேற்றவேண்டியது எது என்ற பிரச்சனையை அவர் அலசுவார்.

"... என்னையும் உன்னையும்தாண்டி நிற்கும் அவனையும் - ஏனென்றால் நாம் காணும் இவ்வுலகம் நான்-நீ-அவன் என்ற தொடரில்தானே இயங்குகிறது. வெற்றிகரமாக உருவங்கண்டு உருவாக்குவதில் ஒரு கலைஞன் தன் மகத்தான வெற்றியைக்காண்கிறான். இதனால்தான் இன்று தமிழில் எழுதிப் பிரசித்த பெற்ற சில ஆசிரியர்களின் உலககூட வீட்டுச் சுவர்களில் அடைபட்டு வாழும் பிரகிருதி பூதாகிருத ஆகிருதிகளாக ஒரு தவிர்க்க முடியாத சக்தியாக வளர்ந்து விட்ட தோற்றமாகக் காட்சி அளிக்கிறது"

நவீனனுக்கும் அவனது தந்தைக்குமான உறவின் விவரிப்பே "யாத்திரை" என்று கூறலாம். ஒருவகையில் இது காஃப்காவின் "தந்தைக்கு கடிதம்" போன்றது. "யாத்திரை" அடிப்படை இதுவாயிருந்தாலும், இதில் பெரும்பகுதி நாய்களைப் பற்றின சம்பவங்களும் மனப்பதிவுகளும் இடம்பெற்றுவிடும் - இதில் நுட்பமான சித்தரிப்புகளுடன் கூடவே வேடிக்கையான விளையாட்டுகளும் சேர்ந்து கொள்ளும். லிஸ்ஸி, ஜிம்மி, வால்டர், அச்சுதன், ஸாம் என்று அய்ந்து நாய்கள் இடம்பிடித்துக்கொகின்றன. ''காய்கள்'' என்ற பெயரிலேயே ஒரு நாவல் இருக்க, இதிலும் நாய்கள் ஆக்கிரமித்துக்கொள்வது நூதனமானது.

"அவன் (நவீனன்) வாழ்க்கையில் ஒரு ஐந்து நாய்கள் குறுக்கிட்டன. குறைந்தது ஒரு ஐம்பது மனிதர்களாவது இதே முறையில் அவனுடன் தொடர்பு பெற்றிருந்தனர். இதே ரீதியில் ஒரு 10 பெண்கள்தான் அவன் நினைவிற்கு வந்தனர்."

ரோகிகளைக்கூட நகுலன் நாவல் என்றே குறிப்பிடுவதால் ''யாத்திரை'' மட்டுமே குறுநாவல் என்று சொல்லக்கூடியதாக அமையும்.

●



படிப்பகம்

www.padippakam.com



# ஸ்ரீநேசன் கவிதைகள்

ஓர் இரவைத் திறந்தேன்
ஏகப்பட்ட மூடிய
விரல்கள்
அதிலொரு விரலைத் திறந்தேன்
ஏகப்பட்ட மூடிய இரவுகள்
0

வாரம் முழுதொன்று
உடனிருந்து பிரிகிற வேளை
பேருந்தில் ஏற்றி
விடை பெற்றுச் சென்று
விட்டவன்
எதற்கோ என்னெதிரே வந்தான்
அதற்குள்
இன்னொரு உலகத்தில்
சஞ்சரித்து விட்ட எனக்கு
புதியதொரு நண்பனின்
திடுக்கிடலைத் தந்தான்
0

புழுக்கமான முன்னிரவுக்குப் பின்
நள்ளிரவில்
கனத்த மழையொன்று பெய்கிறது
நனைந்தசையும் எல்லாவற்றின் மீதும்
மின்னல் ஒன்று பளீரிட்டு
சில கணநேரம் உறைகிறது
அவ்வமானுஷ்ய வேளை
நீண்ட நாளாய்க் குழந்தையின்றித்
துக்கித்துக் கிடக்கும்
தம்பதியரின் எதிர்வீட்டு ஜன்னல்
அசாதாரண வேகத்தில்
படீரென்று திறக்கிறது
உள்ளே கொடியில்
குழந்தை ஒன்றின் நீர் சொட்டும்
நனைந்த ஆடை
0

திரும்ப முடியாத
இரவு
முழுவதும் விழித்து
இருந்த என் காதலை
நிர்வாணமாய்க் கண்டு
விடிந்த என் வனமெங்கும்
முகைகளெல்லாம் முலைகள்
மலர்களெல்லாம் யோனிகள்
0

குழந்தை ஒன்று
தனது சின்னஞ்சிறு கரத்தை
சூரியனுக்கெதிரே ஆகாயத்தில் வைக்கிறது
உடனே எடுத்தும் கொள்கிறது
பூலோக அப்பொழுது
ஒரு இரவைக் கண்டு
விடிகிறது
0

கனவின் இரவில்
சூரியன் உதிர்ந்து
விழித்த காலை
படுக்கையில் கண்டேன்
உன்
நெற்றிப் பொட்டொன்று
ஒட்டிக் கிடந்தது.
0



படிப்பகம்

www.padippakam.com

## இடாலோ கால்வினாவின் கதை - 2

# பூனையும் போலீஸ்காரனும்

தைஸ்பிரைஸ்



கொஞ்ச காலத்திற்கு முன்பு, ஒளித்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களைக் கண்டுபிடிப்பது தொடங்கியிருந்தது. ஒரே மாதிரியானவர்களாகவும் மானுடத்தன்மை அற்றவர்களாகவும் தோன்றச் செய்யும் தோல் தொப்பிகளுடன், எச்சரிக்கை மணி ஒலிக்கின்ற திறந்த வண்டிகளில் ஏறிக்கொண்டு யாராவது ஒருவேலையாளின் வீட்டில் அலமாரியைத் துழாவவும், ஸ்டவ் பைப்பினை கழற்றிப்பார்க்கவும் போலீஸார் விரைவர். அச்சமயத்தில் பவாரினோ என்னும் போலீஸ்காரன், வதைக்கின்ற கவலையின் பிடியில் இருப்பதாகத் தன்னை உணர்ந்து கொண்டான்.

சமீபத்தில் போலீஸ் பிரிவில் சேரும் வரையிலும் பவாரினோ, வேலை இல்லாதவனாகயிருந்து வந்தான். கடுமையான உழைப்பும் தோற்றத்தில் அமைதியும் கொண்டுள்ள இந்நகரின் மையத்திலே இரகசிய இடம் பற்றி சமீபத்திலேதான் தெரிவிக்கப்பட்டது; வீதிகளை ஒட்டியுள்ள காரைச் சுவர்களின் பின்னே இருண்ட மூலைகளிலும் மறைவான இடங்களிலும், பளபளக்கும் துப்பாக்கிக் காடுகள், முள்ளம்பன்றியின் முட்களைப் போல மிரட்டலுடன் காத்திருப்பதாகக் கூறப்பட்டது. இயந்திரத் துப்பாக்கிகள், நிலவறையில் பதுக்கப்பட்ட துப்பாக்கி குண்டுகள் மற்றும் அதி நவீனக் களத் துப்பாக்கி மறைத்து வைத்திருப்பது பற்றிப் பேசப்பட்டது. மெத்தைகளில் கைத்துப்பாக்கிகள் தைத்து மறைக்கப்பட்டுள்ளதாகவும் தரைப் பலகைகளுக்கு கீழே பெரிய துப்பாக்கிகள் ஆணிகளால் அடித்து வைக்கப்பட்டுள்ளதாகவும் பேச்சு நிலவியது. தன்னுடைய ஜனங்கள் மத்தியிலேயே பவாரினோ சிரமப்பட்டான்; ஒவ்வொரு மூலையும், குப்பை மேடும் புதிரானதாக, தொல்லை தருவதாகத் தோன்றின; அடிக்கடி கள்ளத்துப்பாக்கி ஒன்றை நினைத்துக் கொண்டான் தன் குழந்தை பருவத்து வீட்டின் வரவேற்பறையில் இருப்பதாகக் கற்பிதம் செய்தான்; அவ்வீட்டின் அறைகளில் ஒன்று ஒருமுறை ஓர் ஆண்டுக்காலம் மூடியே இருந்தது. மங்கிய லேஸ் ஓரங்கள் கொண்ட வெல்வெட் சாய்வு நாற்காலிகளுக்கிடையே காணப்பட்ட அக்களத் துப்பாக்கியின் சேறுபடிந்த சக்கரங்கள் தரை விரிப்பு மீதும், அதனைத் தாங்கியிருக்கும் கட்டமைப்பு சரவிளக்கைத் தொட்டவாறும், அந்த அறையினையே அடைத்துக்கொண்டு, பியானோவின் பூச்சை கீறிக்கொண்டு கிடந்தது.

ஒரு மாலைவேளையில் தொழிலாளர் குடியிருப்பில் திடீர் சோதனை செய்யவந்த போலீஸார், ஒரு வரிசையைச் சுற்றி வளைத்தனர். அலுத்துச் சோர்ந்து போனதாய்த் தோன்றும் பெரிய வரிசை அது - ஏகப்பட்ட மானுடரைத் தாங்கித் தாங்கி, சுவர்களும் தரைகளும் பலவீனமாகி, துளைகள் கொண்டதும் சொரணையற்றதுமான தசையாக மாறிவிட்டதுபோல் இருப்பது.

முற்றத்தில் குப்பைகள் கொட்டப்படும் பேரல்கள் நிறைந்திருக்கும். ஒவ்வொரு வீடும் இரும்புத் தகர தடுப்புகளால் பிரிக்கப்பட்டிருக்கும், கிராதிகளால் சூழ்ந்திருக்கும். கிராதிகளில் துணிமணிகள் கிடக்கும், சன்னல்களின் மரச்சட்டங்கள் வழியாக ஸ்டவ் பைப்புகள் இறங்கியிருக்கும், கடைசி மூலையில் கழிவறைக் குடில்கள் இருக்கும், வீடுதோறும் கரிப்புகை படிந்த தையல் இயந்திரங்களின் சடசடப்பு நிறைந்திருக்கும், வளைந்து நெளிந்து செல்லும் சாக்கடைகளும் நாறுகின்ற முகப்பு மாடங்களுமாயிருக்கும்.

அப்பழைய கட்டிடங்களின் அடித்தளத்திலிருந்து மேற்கூரைக்கு கரிய நாளங்களாய் நாற்றமடிக்கும்



படிப்பகம்

www.padippakam.com

படிக்கட்டின் திருகு சுழல்பாதை போகும் - அவற்றின் வழியே அறைகளுக்கும் கூடங்களுக்குமான வாயில்கள் சிதறிக் கிடக்கும்.

காலடிகள் துயரத்துடன் எதிரொலித்திட, கதவுகளில் எழுதப்பட்டுள்ள பெயர்களை வாசிக்க முயன்றவாறு போலீஸார் அப்படிகளில் ஏறினர்; எட்டிப்பார்க்கின்ற சிறார் மற்றும் அலங்கோலமாயிருக்கும் பெண்டிரின் தலைகளின் ஊடே சுற்றிச் சுற்றி வந்த அவர்கள் ஒரு வரிசையாக காணப்பட்டனர்.

மற்றவர்களிடமிருந்து பிரித்துப் பார்க்க இயலாதபடிக்கு பவாரினோ தனது தலைக் கவசத்துடன் இருந்தான் - அக்கவசம், அவனது இருண்ட நீல விழிகளின் மீது கூரிய நிழலைப் படியச் செய்தது; ஆனால் அவனது இதயம், குழப்பமானதும் தொந்தரவு செய்வதுமான எண்ணங்களுக்கு இரையாக இருந்தது. அவர்களது பகைவர், போலீஸ் மற்றும் கண்ணியமான மக்களின் பகைவர், இக்கட்டிடத்திலுள்ளே மறைந்திருப்பதாக அவனுக்குக் கூறப்பட்டிருந்தது. அரைபாதியாக மூடப்பட்டிருந்த அறைக்கதவுகளை பதற்றத்துடன் நோக்கினான் பாவரினோ; ஒவ்வொரு மேசையினுள்ளும் ஒவ்வொரு அலமாரியின் பின்னேயும் பயங்கரமான ஆயுதங்கள் மறைக்கப்பட்டிருக்க வேண்டும். அங்கே வாடகைக்கு இருக்கும் ஒவ்வோர் ஆணும் பெண்ணும் ஏன், அவநம்பிக்கையுடனும் பதற்றத்துடனும் அவர்களை நோக்கவேண்டும்? அவர்களிடையே ஓர் எதிரி இருந்தால், அவர்களெல்லாம் எதிரிகளாக வேண்டும் அல்லவா? மாடிகளிலுள்ள சுவர்களுக்குப் பின்னே, மலம் விழுவது கேட்கும்; அவசரத்தில் அகற்றப்படும் ஆயுதங்களாய் அவை இருக்கக்கூடாதா?

அவர்கள் தாழ்ந்த அறை ஒன்றினுள் நுழைந்தனர்; சிவப்பு-வெள்ளைத் துணி விரிக்கப்பட்ட பலகையைச் சுற்றிலும் அமர்ந்து அக்குடும்பத்தினர் இரவு உணவை உண்டு கொண்டிருந்தனர். குழந்தைகள் அழுது கொண்டிருந்தனர். தந்தையின் முழங்கால்மீது அமர்ந்து உண்ணும் கடைக்குட்டிச் சிறுவன் மட்டுமே வெறுப்பு நிறைந்த கரு விழிகளால் அவர்களை அமைதியாகப் பார்த்துக்கொண்டிருந்தான். நெஞ்சில் உள்ள பதக்கங்கள் துள்ளும் வகையில் "இவ்வீட்டைச் சோதனையிடவும்" என உத்தரவிட்டான் சார்ஜண்ட். "தெய்வமே, ஏழை ஜனங்களாகிய எங்களையா! வாழ்நாளெல்லாம் நேர்மையாக இருந்த எங்களையா!" என்று நெஞ்சில் கை வைத்திருந்த மாதொருத்தி கூறினாள். பனியன் அணிந்து பரந்த முகமும் குறும்புதர் தாடியும் கொண்டிருந்த தந்தை, குழந்தைக்கு ஊட்டிக்கொண்டிருந்தார். அவர் அவர்களைப் பக்கவாட்டில் நோக்கிய அவர், முரண் சுவையுடன் நோக்கியிருக்கலாம்; பின்னர்த் தோள்களைக் குலுக்கிவிட்டு, குழந்தைப்பக்கம் திரும்பினார்.

போலீஸார் நிறைந்த அந்த அறையில் திரும்புவது சாத்தியமற்றது. பயனற்ற உத்தரவுகளை வழங்கிய சார்ஜண்ட், நடவடிக்கைகளை முடுக்கிவிடுவதற்குப் பதிலாக தடைப்படுத்தினான். ஒவ்வொரு மேசை நாற்காலியினையும் அலமாரியினையும் பவாரினோ பதற்றத்துடன் சோதனையிட்டான். பனியன் அணிந்துள்ள அந்நபர், எதிரிதான்! இக்கணம்வரையிலும் அப்படியில்லாதிருந்தாலும், மேசை இழுப்பறைகள் திறந்து கிடந்ததையும், மேரிமாதா மற்றும் இறந்து விட்ட முன்னோரின் படங்கள் கிழிபட்டுத் தொங்கியதையும் பார்க்கின்ற அவர், இப்போது நிச்சயம் எதிரியாயிருக்கவேண்டும். அவர் அவர்களது எதிரியானால், இந்த இடம் முழுவதும் பொறிகளாய் நிறைந்திருக்கவேண்டும்; ஒவ்வொரு மேசை இழுப்பறையிலும், பிரித்துப் போடப்பட்ட இயந்திர துப்பாக்கி பாகங்கள் இருக்கவேண்டும்; உணவு மேசையைத் திறந்தால், தனது மாரினை நோக்கிப் பொருத்தப்பட்டிருக்கும் துப்பாக்கியை அவன் காணக்கூடும்; கம்பிகளில் தொங்கும் ஜாக்கெட்டினுள்ளே பளபளக்கும் குண்டுகளின் வார் ஆடிக் கொண்டிருக்கலாம்; ஒவ்வொரு வாணலியிலும் கையெறிகுண்டு மறைக்கப்பட்டிருக்கலாம்.

பவாரினோ சிரமத்துடன், மெலிந்து நீண்ட தன் கைகளை நீட்டினான். இழுப்பறை ஒன்றில் கணகண ஒலி கேட்டது; குத்தீட்டிகளா? இல்லை, கரண்டிகளும் முட்கரண்டிகளுந்தான். சில தாள்கள் உள்ளீடற்ற ஓசையை எழுப்பின; குண்டுகளா? இல்லை, புத்தகங்கள்தாம். படுக்கை அறை நிரம்பிக் காணப்பட்டதால், தாண்டிச் செல்ல முடியவில்லை. இருவர் படுக்கைகள் இரண்டு; முகாம் படுக்கைகள் மூன்று; திரை மீது இரு மெத்தைகள் இருந்தன. அறையின் மறுகோடியில் கட்டிலில் ஒன்றில் அமர்ந்தபடி ஒரு குழந்தை பல்வலியால் அழுதுகொண்டிருந்தது. இப்படுக்கைகளுக்கிடையே ஒன்றுமில்லையா என்று உறுதிப்படுத்த, அவற்றைச் சற்று விலக்கிப் பார்க்க பவாரினோ விரும்பவே செய்தான்; ஒருவேளை மறைக்கப்பட்டிருந்த ஆயுதக் கிடங்கின் மீது தான் நின்று கொண்டிருந்ததாக ஆகிவிட்டால்,. படுக்கை ஒவ்வொன்றும் சிறு பீரங்கி ஒன்றை மறைத்திருந்தால் என்னாவது?

எதையும் கண்டறியாது பவாரினோ சுற்றிச் சுற்றி வந்தான். ஒரு கதவைத் திறக்க முயன்றான்; அது பணியவில்லை. ஒருவேளை களத்துப்பாக்கியாயிருக்கலாம்! துப்பாக்கிக்குழாயில் செயற்கை மலர்கள் கொண்ட ஜாடியுடன் மேற்பகுதியில் விசித்திர உருவங்கள் கள்ளங்கபடமின்றி அமர்ந்திருக்கும், பால்யகாலத்து வரவேற்பறை துப்பாக்கியை நினைத்துக்கொண்டான். திடீரென அக்கதவு திறந்து கொண்டது; அது வரவேற்பறை அல்ல, மாறாக உடைந்துபோன நாற்காலிகள், பெட்டிகளின் சேமிப்பறை. வெடிகுண்டுகளா? அங்கே தரைமீது இரு சக்கரங்களின் தடயங்களை பாவரினோ கண்ணுற்றான்; இங்கிருந்து குறுகிய வழி ஒன்றினூடாக அச்சக்கரங்களின் மீது எதுவோ இழுத்துச் செல்லப்பட்டிருக்கவேண்டும். பவாரினோ தடங்களைத் தொடர்ந்து சென்றான். தாத்தா, கை வண்டியை தன்னால் முடிந்த அளவு துரிதமாக தள்ளிக்கொண்டிருந்தார். ஏன் அந்தக் கிழவன் ஓடிக்கொண்டிருக்கவேண்டும்? ஒருவேளை அவன் கால்களைச் சுற்றியுள்ள துணி கைக்கோடாரி ஒன்றை மறைத்திருக்கலாம்! அவனருகே நான் போனால் அக்கிழவன் என் தலையை இரண்டாகப் பிளந்து விடுவான்! ஆனால் அவன் கழிப்பறைக்குத்தான் போய்க்கொண்டிருந்தான். ஒருவேளை இரகசியம் அங்கிருக்கிறதோ? பவாரினோ விரைந்தான். ஆனால் கழிப்பறைக் கதவு திறந்ததும் சிறுமி ஒருத்தி பூனை ஒன்றைத் தூக்கிக்கொண்டு வெளியேறினாள்.

சிறுவருடன் நட்புக் கொண்டபின் விசாரிக்கலாம் என



படிப்பகம்

www.padippakam.com

பவாரினோ கருதினான். பூனையை வருடுவதற்காக ஒரு கையை நீட்டினான். "அழகான பூனை" என்றான். அநேகமாக அவனை முட்டித்தள்ளியபடி பூனை தாவிச் சென்றது; ரோமம் அடர்ந்து சாம்பல் நிறத்தில் மெலிதாய் காணப்பட்டது. பற்கள் தெரிய நாய்போலத் தாவியது. தன்னுடைய ஒரே பிரச்சனை இப்பூனையுடன் நட்பு கொள்வதே என்பதுபோல பவாரினோ அதனை வருட முயன்றபடி "அழகான பூனை" என்றான். ஆனால் அப்பூனை அவ்வப்போது விஷமத்துடன் அவனைப் பார்த்தவாறு பக்கவாட்டில் தாவி, ஓடியது.

"அழகான பூனை", "அழகான பூனை" என்றபடி அதன்பின் ஓடினான் பவாரினோ. தையல் இயந்திரங்களின் மீது குனிந்தவாறு இரு பெண்கள் பணிபுரிந்து கொண்டிருந்த அறைக்குள் போனான். தரையெங்கும் துணிக்கத்தரிப்புகள் குவிந்து கிடந்தன. "துப்பாக்கிகள் இருக்கின்றனவா?" என்றபடி அக்குவியலை விலக்கிய அவனது காலின் பூட்ஸ்களில் வெட்டுத்துணிகள் சிக்கிக்கொண்டன. அப்பெண்கள் சிரித்தனர்.

மூலையொன்றில் திரும்பி, படிக்கட்டுகளில் ஏறினான்; சில சமயங்களில் அப்பூனை அவனுக்காகக் காத்திருப்பதாய் தோன்றியது, ஆனால் அவன் சமீபத்துவிட்டதும், தாவிச் சென்றது. இன்னொரு தளத்திற்கு வந்து விட்டான். சக்கரங்கள் தொங்கியபடி இருக்க, சைக்கிள் ஒன்று அத்தளத்தை மறித்து நின்றது; சிறிய மனிதன் ஒருவன் நீர்வாளிக்குள் டயர் ஒன்றை வைத்துத் துளைபட்டிருக்கிறதா என்று பார்த்துக்கொண்டிருந்தான். பூனை ஏற்கனவே மறு கோடிக்குப் போய்விட்டது. "மன்னிக்கவும்" என்றான் போலீஸ்காரன். "அதோ இருக்கிறது" என்று சிறிய மனிதன் சுட்டிக்காட்டினான்; தண்ணீரிலிருக்கும் ட்யூப்பிலிருந்து ஆயிரக்கணக்கான நீர்க்குமிழிகள் எழுந்தன. "மன்னிக்கவும்" அவனைத் தடுத்து நிறுத்துவதற்காக, இவையெல்லாம் வேண்டுமென்று நிறுத்தப்பட்டுள்ளனவா, அல்லது அவனை விழச் செய்வதற்காகவா?

அவன் கடந்து சென்றான். அறை ஒன்றில் கிடந்த ஒரே படுக்கையில் வெற்று மார்புடனிருந்த இளைஞன் சுருண்ட தன் தலைமுடியைக் கைகளால் பற்றிக்கொண்டு மல்லாந்து படுத்தபடி புகைத்துக்கொண்டிருந்தான்.

இது சந்தேகத்தைத் தோற்றுவித்தது, "மன்னிக்கவும், பூனையொன்றைப் பார்த்தீர்களா?" படுக்கையின் கீழே பார்வையிட அது ஒரு நல்ல சால்ஜாப்பு. பவாரினோ கை நீட்டியதும் எதுவோ கொத்தியது, உள்ளூர் விதிகளை மீறி இரகசியமாய் வைக்கப்பட்டிருந்த கோழி தாவி வந்தது. வெற்று மார்புடனிருந்த இளைஞன் எந்தச் சலனமுமின்றி, புகைத்துக்கொண்டிருந்தான்.

அடுத்து, தொப்பிகள் செய்துகொண்டிருந்த கண்ணாடி அணிந்த மனிதனின் அறைக்குப் போனான். "சோதனை ... உத்திரவுகள்..." என்றான் பவாரினோ, வைக்கோல் தொப்பிகள், மிருதுவான வெல்வெட் தொப்பிகள் எனத் தொப்பிகள் விழுந்து சிதறின. திடீரென திரைமறைவிலிருந்து வெளிவந்த பூனை தொப்பிகளுடன் கணப்பொழுது விளையாடி விட்டு, மறைந்துவிட்டது. அதனுடன் நட்பு கொள்ளவிரும்புகிறானா, இல்லையா என்பது பவாரினோவுக்குத் தெரியாது போனது.

சமையலறை மத்தியில் கிழவன் ஒருவன் தபால்காரனின் தொப்பியுடன் இருந்தான்; கால் சராய்களை இழுத்துவிட்டுக்கொண்டு, கால்களைக் கழுவிக் கொண்டிருந்தான். போலீஸ்காரனைக் கண்டதும், இளித்தபடி, உள்ளறை ஒன்றைச் சுட்டிக்காட்டினான். பவாரினோ எட்டிப்பார்த்தான். அநேகமாய் அம்மணமாயிருந்த குண்டுப்பெண்ணொருத்தி, "உதவி" என்று கத்தினாள். தருமசங்கடத்திலிருந்த பவாரினோ மன்னிப்புகள் வேண்டினான். கைகளை முழங்கால்களில் வைத்தபடி தபால்காரன் இளித்தான். சமையலறையினை விட்டு வெளியேறி மொட்டை மாடிக்குப் போனான்.

மொட்டை மாடியெங்கும் உலர்த்தப்பட்ட துணிகளால் நிறைந்து காணப்பட்டது. இடையிடையே தடுப்புகள் கொண்டிருந்த அம்மொட்டை மாடியில் தட்டுத்தடுமாறி புதிர்வழிப் பாதையில் சிக்கிக்கொண்டது போல் திரிந்தான். ஒரு மூலையில் தலைகாட்டும் பூனை இன்னொரு மூலையில் பதுங்கிக்கொள்ளும். தான் மாட்டிக் கொண்டதாக பவாரினோ பீதியுற்றான்; அவனது சகாக்கள் வெளியேறியிருக்க அவன்மட்டும் இங்கே அகப்பட்டுக்கொண்டிருக்கலாம்; இவனால் மனம் புண்பட்ட இம்மனிதர்களின் கைதியாக, இவ்வெண் தடுப்புகளின் கைதியாக இருக்கக்கூடும். ஒரு வழியாக இடைவெளி ஒன்றைக் கண்டு சுவருக்கு வெளியே நோக்கினான். கீழே முற்றத்தில் வெளிச்சம் நிறைந்து காணப்பட்டது. ஆணைகள் பிறப்பிக்கப்படுவது, எதிர்ப்புகள் எச்சரிக்கைகள் என்றும் கூச்சல்களுக்கிடையே போலீஸார் எறும்பு வரிசையாக படிகளில் ஏறுவதும் இறங்குவதுமாயிருந்ததைத் தான் பார்த்தது, அச்சத்துடனா அல்லது விடுதலை உணர்வுடனா என்று பவாரினோவால் நிச்சயப்படுத்த முடியவில்லை.

அவனருகே சுவர்மீது அமர்ந்திருந்த பூனை வாலை ஆட்டியபடி, அலட்சிய சுபாவத்துடன் தென்பட்டது. அவன் நெருங்கும் போதெல்லாம் தாவி ஓடியது. அப்புறம் மேல்மாடத்திற்குச் செல்லும் குறுகலான படிக்கட்டில் மறைந்து போனது. போலீஸ்காரன் பின்தொடர்ந்தான்; கரிய கட்டிடங்களின் மீது நிலவு பிரகாசிக்கத் தொடங்கியிருந்தது. பவாரினோ தலைக்கவசத்தை எடுத்தான்; அவனது முகம், மெலிந்த, அழகிய சிறுவனின் முகம்போல மீண்டும் மானுடத்தன்மை கொண்டது.

"அசையக்கூடாது. உன்னை மறைத்துக்கொண்டேன்" என்றது ஒரு குரல். பெரிய சன்னலோரப் படியில் தோள்வரை நீண்ட கூந்தலும் உதட்டுச்சாயம் பூசிய உதடுகளும்கொண்டு காலணிகள் இல்லாது காலுறைகள் மட்டும் அணிந்த பெண்ணொருத்தி பதுங்கியிருந்தாள். மங்கிய வெளிச்சத்தில், படங்களுடன் கூடிய புத்தகத்திலிருந்து கீச்சுக்குரலில் வாசித்துக்கொண்டிருந்தாள்.

அவளின் ஒரு மணிக்கட்டைப் பற்றிய பவாரினோ திறந்து பார்ப்பதற்காக "துப்பாக்கியா?" என்றான். தனது கையை விலக்கியதும் அவளது கம்பளிச் சட்டைத் திறந்து கொள்ள பந்துபோல உருண்டிருந்த பூனை போலீஸ்காரன் மீது பற்களைக் காட்டிக்கொண்டு பாய்ந்தது. ஆனால் பாரினோ இப்போது அது ஒரு விளையாட்டென்பதை உணர்ந்துகொண்டான்.

ஓடுகளின் மீது பூனை விரைந்தது, விளிம்புச் சுவரில் சாய்ந்து கொண்டு, அது ஓடிச்செல்வதையும் கூரைகளுக்கிடையே சுதந்திரமாயிருப்பதையும்



படிப்பகம்

www.padippakam.com

கவனித்தான் பவாரினோ.

"மாலை நேரத்து உடையில் தன்னை நோக்கிய துப்பாக்கியுடன் பிரபு வருவதை மேரி தன் படுக்கை அருகே கண்டாள்" என்று அப்பெண் வாசித்துக்கொண்டிருந்தாள்.

உழைப்பாளர் இல்லங்களில் எல்லாம் எங்குப் பார்த்தாலும் விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. தனக்குக் கீழே மாபெரும் நகரம் பரந்து கிடப்பதை பாரினோ நோக்கினான்; தொழிற்சாலை வளாகத்திற்குள்ளாக இரும்பாலும் காரையாலும் கட்டப்பட்டிருந்த கட்டிடங்கள் உயர்ந்திருக்க, புகைப் போக்கிகளிலிருந்து புகை வளையங்கள் போய்க்கொண்டிருந்தன.

"சர்.ஹென்றி அவர்களே, உங்களுக்கு எனது முத்துக்கள் வேண்டுமா" கிறீச்சொலி வற்புறுத்திற்று "வேண்டாம், மேரி, நீதான் வேண்டும்"

காற்றடிக்கத் தொடங்கியதும், இரும்பு மற்றும் காரையில் கூட்டம் தனக்கெதிராய் இருப்பதாக பவாரினோ உணர்ந்தான்; ஆயிரம் மறைவிடங்களிலிருந்து முள்ளம்பன்றி தன் முட்களை சிலிர்த்துக்கொண்டது. பகைவனின் பிரதேசத்தில் அவன் இப்போது தனித்திருந்தான்.

"என்னிடம் சொத்து சுகமுண்டு, பிரம்மாண்டமான மாளிகையில் வசிக்கிறேன். வேலையாட்கள் உண்டு, நகைகள் இருக்கின்றன, வேறென்ன வேண்டும் எனக்கு?" புன்னகைக்கீற்றுகளுடன் கண்ணா மூச்சு ஆடும் ஆடவரும் பெண்டிரும் சிதறிக்கிடக்கும் பக்கங்களின் தன் கருங்கூந்தல் தவழ, அப்பெண் வாசித்துக்கொண்டிருந்தாள்.

விசில்களின் கீச்சொலியினையும் எஞ்சின்களின் உறுமலையும் பவாரினோ கேட்டான்; போலீஸார் அக்கட்டிடத்தை விட்டு வெளியேறிக்கொண்டிருந்தனர். தரையிலுள்ள ஒரு பொந்தில் தன் கைத்துப்பாக்கியை புதைத்துவிட்டு, வானத்து மேகக்கூட்டங்களின் கீழே பறந்துபோக ஆசைப்பட்டான்.

●

## கல் தூளிகள்

அமங்கலத்தில் கரைந்து போன
கோதுமைப் பொம்மைகளே!
நில்லாத நதியானது
நதியைச் சிசுவாய்த் திரட்ட
குறும் பாதத்தில் கட்டிய கல்தூளி
மதுர மரக்கொப்பில் தூளிகளாய்
மிதக்கும் வெளியின்
உள்ளே நேர்ச்சை வென்று
பிறந்து மறைந்தோரின்
நீடித்த குழந்தைமை துயில்
கரையும்
ஈனா பெண்ணிதயத்தில்
தூர்க்கப்பட்ட குளத்தின் கனவலை
மறைந்திருக்கும் அரூபம் பிளந்து
ரூபம் நடக்க
நடக்கும் சூன்ய சம்வாதத்தில்
கொடுப்பதும் எடுப்பதுமான
கரம் கட்டுண்டது
ஜனிப்பற்ற விதையாய்

அ. குமார்

எம்.பூர்ணிமா





படிப்பகம்

www.padippakam.com



# கலகக்காரனின் திரைக்கதை

## ஜான் ஆபிரஹாம்

வெளியீடு
தாமரைச் செல்வி பதிப்பகம்
31/48, ராணி அண்ணா நகர்
கே.கே.நகர்
சென்னை -14
விலை -உரூ. 80
தொகுப்பாசிரியர் - ஆர்.ஆர். சீனிவாசன்

மனித வாழ்க்கையைப்பற்றி முழுமையான பிரக்ஞை இல்லாத எவருக்கும் எவ்வளவு நல்ல பயிற்சி வாய்த்தாலும் நல்ல இலக்கியத்தையோ நல்ல திரைப்படத்தையோ உருவாக்கிட இயலாது. இன்னோர் அம்சமும் இருக்கிறது. மனிதனை நேசிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். அன்பு இல்லாத இடத்தில் உன்னதமான எதுவும் நிகழ்வதில்லை. இலக்கியத்திலோ, பிற கலை வடிவங்களிலோ நான் இருண்மையை வெறுப்பது அதனால்தான். நான் சொல்வது எனது சகமனிதர்களுக்குப் புரிய வேண்டும். அவர்கள் அதை ரசிக்கவேண்டும். ஒரு குழந்தைக்குக்கூட எனது சினிமா புரியவேண்டும் என்ற பிடிவாதம் எனக்கு இருக்கிறது.

அதற்காக ரசிகர்களை முன்னால் கண்டுகொண்டு நான் படத்தை உருவாக்குவதும் இல்லை. படம் எடுக்கும்போது அங்கே நான் மட்டுமே இருந்தேன். நான் சொல்ல விரும்புகிற விஷயங்களை என்னுடைய போக்கில்தான் சொல்கிறேன். இங்கே யாருக்கும் புரியாத விஷயங்கள் எதுவுமில்லை. படைப்பு மனப்பூர்வமாக சிதைவு அடையும்போதுதான் இருண்மை உணரப்படுகிறது.

தங்கக் கோபுரத்திலிருக்கிறவர்களுக்கும் இந்த நோய் பீடிக்கலாம். தங்கக் கோபுரத்தில் அமர்ந்து மனித வாழ்க்கையைப் பார்க்கவும் விளக்கம் சொல்லவும் நான் ஒரு போதும் தயாரில்லை. சுற்றியுள்ள மனிதர்களின் கூட்டத்தில் ஒருவன்தான் நான் என்ற உணர்வு எனக்கு இருக்கிறது. அன்பு தான் என்னுடைய தத்துவம் என்று முன்பே சொல்லிருக்கிறேன். நான் நேசிப்பவர்களுக்காகத் தான் படம் எடுக்கிறேன். நான் நேசிப்பவர்களுக்கு நான் சொல்வது புரியும் என்ற முழு உணர்வு எனக்கிருக்கிறது.

கடந்த ஐம்பது வருடங்களாக நாம் கொச்சையான திரைப்படங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இந்த ஆபாசம் நமது பார்வையாளர்களைப் போதை மருந்து போலப் பாதித்திருக்கிறது. இது மாறவேண்டும். மாற்றப்படவேண்டும். அது போன்ற அணுகுமுறை புதிய திரைப்படக்காரர்களுக்கு உருவாகவேண்டும். அதை இருண்மை என்று வியாக்கியானம் செய்யவேண்டாம். தவறான வழிகளில் அலைந்தவர்கள் சரியான பாதையைக் காணும்போது திகைத்து நின்றுவிடலாம். இந்தப் பிரமை தற்காலிகமானது. இது மாற்றப்பட காலதாமதம் நேராது....

...நான் யாருக்காகத் திரைப்படம் எடுக்கிறேன் என்பதில் எனக்கு உறுதியான ஓர் உணர்வு உண்டு.

பார்வையாளனை எல்லாக் காலத்திலும் வஞ்சிக்க முடியாது. சமூகத்திற்குத் தேவையானதை - மனிதனின் முன்னேற்றத்திற்கு மேன்மையானதை அளிக்கவேண்டும் என்பதுதான் ஒரு கலைஞனின் பணி என்று நான் நினைக்கிறேன். என் நம்பிக்கைகளின் மூலம் நான் மேன்மையானவை எவை என்பதைத் தீர்மானிக்கிறேன். அந்த தீர்மானத்தின் படி மனிதனைத் தொட்டுப் பார்த்து உணர்ந்து கொள்கிறேன். அவனுடைய உணர்வுகள், வேதனைகள் எல்லாம் எனக்குத் தெரியும். நான் அவனோடு நேரிடையாக விவாதிக்கிறேன். இந்த விவாதம்தான் என் உணர்வாக மாறுகின்றது. நான் திரைப்படம் எடுக்கச் செலவழிக்கும் பணத்தினால் சில பேர்களுக்கு உணவளிக்கலாம். அது அவர்களின் ஒருவேளைப் பசிக்குப் பரிகாரமாகலாம். ஆனால், அது மட்டும் போதுமா? தங்கள் பட்டினிக்குக் காரணம் எதனால் என்பதையும் அவர்கள் அறிய வேண்டும். யதார்த்தம் என்னவென்று அவர்களுக்கு உணர்வு உண்டானால்தான், என்னால் ஒரு வாழ்க்கையை உண்டாக்கிக்கொடுக்கவும் முடியும்.

ஐந்து நட்சத்திர ஓட்டலில் தங்கி, பதினாயிரக்கணக்கில் பணம் பெற்றுக்கொள்ளும் ஒரு நடிகையை ஏழை வேஷத்தில் நடிக்க வைத்துப் பல கம்யூனிஸ்டுகள் செய்ததைப் போல் திரைப்படம் எடுக்க என்னால் முடியாது. மனிதர்களின் தேவைகளையும் ஏழ்மையையும் சுரண்டல் செய்யும் விஷயத்தில் இங்கு முதலாளிகளுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் இடையில் யாதொரு வித்தியாசமும் இல்லை. மனிதனின் மென்மையான உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டுப் பணம் உண்டாக்கும் போட்டிதான் இங்கு நடக்கிறது....

...அடிப்படையில் நான் மனிதனை நேசிப்பவன். சமூகத்தைப் பற்றிய புரிதல் என்னுள் உண்டு. அவர்களின் மீட்சியில் எனக்கு அக்கறையுண்டு. அவர்களின் வீழ்ச்சியை என்னால் சகிக்க முடியவில்லை... சினிமா, அறிதலுக்குத் துணை செய்வதாக இருக்கவேண்டும். அதனால்தான் வியாபார சினிமாவுக்குப் போகாமல் அறிதல் என்ற தளத்தில் அவர்களின் சுயஎழுச்சிக்கு உதவுவதில் கவனம் செலுத்துகிறேன். அறிதல் என்ற தளத்தில் அனைத்தும் அடங்கும். ஒரு மனிதனை மனிதனாக்குவது அதுதான். தான் சிந்திக்கும் தளத்திற்கு மற்றவர்களையும் கொண்டு வருவதும், அவர்களைப் பிரக்ஞை உள்ளவர்களாக்குவதும் தான் ஒரு குருவின் வேலை.




செத்துப்போன மனத்திற்கு உணர்வூட்ட வேறுவழியில்லை எழுபது வருட வியாபார சினிமாக்காரர்கள் நடிகர்களின் இமேஜை வாழ்க்கையை விட பெரியதாக உருவாக்கி நம்மை மனரீதியிலான அடிமைத்தனத்திற்கு உள்ளாக்கினர். அதனால்தான் மூன்றாவது கண் வேண்டுமென்று சொல்கிறேன். மூன்றாம் கண்ணாமல் பார்ப்பது ஒரு தீவிர அனுபவம். நம் காதும், கண்ணும் பழக்கத்திற்கு அடிமையானவை. உணர்வு அழிந்து போன ஒரு சமூகத்தை நான் எதிர்கொள்கிறேன். ●



படிப்பகம்

www.padippakam.com



சிறுகதை    ராமச்சந்திரன்

# செவிப்பறை

## அழகிய பெரியவன்

மாரியாத்தா பண்டிகையிலே வெட்டி நல்ல விடை பருவத்து எருமைக்கிடாத் தோலை வளை மூட்டி தயாராய் காயவும் வைத்திருக்கிறது. வீட்டுப்புறத்தாலேயே குழிவெட்டி கிளிஞ்சல் போட்டு தோலை ஊரவிட்டு, மயிரெல்லாம் கொட்டின பிறகு சவ்வு கிழித்து ஊறவிட்டது. கடுக்காய், வேலம்பட்டை, ஆவாரம்பட்டையென்று போட்டு இன்னமும் ஊறவிட்டது. உதிராமலிருக்கும் மயிர்களைச் சூரிக்கத்தியால் ஜவுரி எடுத்துவிட்டு, நாலு மூலையிலும் இழுத்து வைத்து முளை அடித்து வெயிலில் காயவிட்டு எங்கேயும் போகாமல் பக்கத்திலேயே காவல் கிடந்தது. அசந்தால் நாய் இழுத்துக்கொண்டு போய்விடுமே. எல்லாமே ஆனது. இன்று கட்டிவிடணும். இந்தத்தடவையும் பலாமரமே தே போதும் போதும் என்றாகிவிட்டது. தனக்கன் மரம் கிடைத்து. ஆனால் அதைப் போடவில்லை. சின்னக்குழந்தையை விட்டால் ஊரிலே யாருக்கும் தப்புக்கட்டத் தெரியாது. இறுக்கிப்பிட்டு முறுக்குப்போட்டு அவன் கட்டினானென்றால் அடி என்னா? என்னா? என்று கேட்கும். இப்போது அவனுக்கு வயசாகிவிட்டாலும் அந்த வலு போகவில்லை. காலம்பரமே காட்டுராஜா போய்விட்டான்.

"யோவ் மாமா, எந்திரிய்யா போலாம். இன்னிக்கி முடிச்சிப்புடனும்"

காட்டுராஜாவும், சின்னக்குழந்தையும், சாமனும் குப்புத்தாயி வீட்டுக்குப்போய் "தண்ணீ"

இழுத்துக்கொண்டு காட்டுராஜா வீட்டு மாட்டுக்கொட்டகைக்கு வந்து சேர்ந்தார்கள். மாட்டுக் கோமியத்தின் கரிப்பு வாசம். சாணி மண்டிய பசுந்தரையில் வேலை துவங்கிவிட்டது. கொட்டகையின் ஒரு மூலையின் அணைப்பாய்ச் சட்டியும், டோல் மதாங்கியும் தொங்கின. பொண்டாட்டியிடம் கருவாடு சுட்டுத்தரச் சொல்லி காட்டுராஜா வாங்கித்தந்தான். கட்டையின் அளவு பார்த்துத் தோலை வெட்டி, சாணுக்கொரு துளையென்று கணக்காய்ப் போட்டான் சின்னக்குழந்தை. காட்டுராஜா, மிஞ்சின தோலில் வார் கிழித்தான். கடுக்காய் நெடியுடன் புளித்த கார நாற்றம் தோலிலிருந்துக்கிளம்பியது. கட்டை மேல் தோலை பரப்பி முதலில் நாலு மூலையிலும் வாரைப்போட்டு இழுத்துக் கட்டையுடன் பீய்ந்து விட்டு, பிறகு ஒவ்வொரு துளையாய் வார்போட்டு வாங்கி முறுக்கினார்கள்.

"என்னடா காலம் இது ராஜீ. பிலேத்திரி காயிதம் போட்டு, நெட்டு வச்சி பீஞ்சிடறாங்கடா இப்ப மோளத்துக்கு. டப்பு டப்புன்னு அடிக்கிறானுங்க. மோளம்னா இது மோளம். அடிச்சா, சும்மா டங்கு டங்குன்னு துள்ளறதுல"

"யோவ் அத்த வுடுய்யா, அந்த உரி சுத்துற பாட்டெ பாடேன்யா"

"உரியோ உரி உரியோ உரி
பனை மரத்துல பாச்ச
ஒங்கொம்மா புண்ட தோச்ச
உரியோ உரி உரியோ உரி
மரக்காச் சாமா ஆளு
மரக்காப்புள்ள பெத்தான்
உரியோ உரி உரியோ உரி"

கரிக்காப்பற்கள் தெரிய சாமனும் காட்டுராஜாவும் குலுங்கினார்கள்.

"மாமே, கலைமகள் கொட்டாயில செரியான படம் போட்டுக்கிறான்யா. சிலிக்கி என்னாமா சூத்து காட்டான்ற. ஒங்க வயசில பாத்துக்கமாட்ட. சாயந்திரமா



படிப்பகம்

www.padippakam.com

வாய்யா போலாம்."

"தாயோளி! இந்த வயசில கூட சிலிக்கி படம்னா உசுரு. முன்னால போயி ஒக்காந்துனு. அவ ஆட்டம் வரும்போதெல்லாம் தெறைக்கிட்ட குனிஞ்சி குனிஞ்சி பாத்துனிருப்பான்.

சாமனும், காட்டுராஜாவும் மீண்டும் சிரித்தார்கள். சின்னக்குழந்தை காது முறைத்துக்கொண்டு தப்பு வார் முறுக்கிக்கொண்டிருந்தான். அவனுக்கு ஒரு காது சுத்தமாகக் கேட்காது. மறுகாது மட்டும் சுமாராகக் கேட்கும். அதுவும் அருகில்போய்க் காதிலே வாய் வைத்து கத்தவேண்டும். ஊர்ப்பிள்ளைகள் அவன் காதிலே எதையோ சொல்வதுபோல் போய் 'கூக்' போட்டுவிட்டு ஓடுவது தினமும் நடக்கும். பெரியவர்களுக்கும் இளக்காரந்தான். முகத்துக்கு நேரே திட்டிச் சிரிப்பார்கள்.

தப்பு தயாராகிவிட்டது. சின்னக்குழந்தைக்கு அதை தடவிப்பார்க்கையில் கிளர்ச்சியுண்டானது. அது கையிலிருப்பது ஒரு குதூகலத்தைக் கையில் ஏந்தியிருப்பது போலிருந்தது. கைப் பழக்கத்தின் உந்தலில் அவன் அதை அடிக்கத் துவங்கிவிட்டான். தப்பு அடிப்பதில் சின்னக்குழந்தையிடம் யாரும் நிற்கமுடியாது. ஒண்டி மோளத்தில் அவன் சூரன். ஒத்தடி, ஓட்டியடி, அலங்காரம், துள்ளல், டங்கு என எப்படியும் அவன் விரல்கள் இயங்கும். கல்யாணம், சாவு, பண்டிகை, ஊர்கோலம், பூப்பு, காது குத்தல், எல்லாவற்றுக்கும் பேண்டுசெட்டு வைத்துவிடுகிறார்கள். சின்னக்குழந்தை வெறியாய் அடித்துக்கொண்டிருந்தான். அவன் மனமும் அடிபோலவே துள்ளியது. கண்கள் பிரகாசமடைந்து. நீர்ப்பற்றுடன் மின்னின. பற்கள் வெளித்தெரிய முகம் விரிந்தது. அவன் கைகளும், மேளக்குச்சியும், உடலும், இசையும் எல்லாமே துள்ளல் காற்று அதிர்ந்து மாட்டுக்கொட்டகையும், வீடும், வீதிகளும் எகிறின. போடு போடென்று போட்டான். நரம்புகள் விடைக்க ஆடச்சொல்கிற அழைப்பு ஒவ்வொர் அடியிலும் விழுந்தது. காட்டுராஜா ஆடவும் துவங்கிவிட்டான்.

தப்பு அடித்து எவ்வளவோ நாள் ஆகிவிட்டது. முன்பெனில் எந்த விசேசத்துக்கும் சின்னக்குழந்தையை அழைத்துப்போக ஆள் வரும். மகன் தலையெடுத்து அரசாங்க உத்தியோகம் போனபிறகு யார் கூப்பிட்டாலும் போவதில்லை. மகனும் கறாராகச் சொல்லிவிட்டான்.

"ஊர் மானத்தோட நான் ஒலாத்தனுமா வேணாமா? இனிமே மேளங்கீளம் அடிக்கப்போனே, எனக்கு நல்லாவந்துடும் அப்புறம்"

பார்வதி கிழவி பாடி அவன் பறையடிக்க வேண்டும்.

"அகிலா பரிமளமே

ஒயிலான மானினமே

அடியென் அஞ்சுகமே

பஞ்சவர்ணக் கொஞ்சுங்கிலரி வாகனமே

ஆனாலும் பெண்ணரசி..." என்று பாட்டு எடுத்தானென்றால் மேளக்காரர்களின் கை சலிக்கும் வரை பாட்டு நீளும். அவள் வாயிலிருந்து. பாட்டுக்கள் வெளிவந்தபடியே இருக்கும். நடவுப்பாட்டு, கும்மி, ஆராரோ, ஒப்பாரி எல்லாமும் பார்வதியின் கைவசம். அவள் பாடிக்கொண்டிருந்த காலங்களில் சின்னக்குழந்தையின் காதும் கேட்டுக் கொண்டுதானிருந்தது. அர்சத் பாயின் நிலத்தை வாரத்துக்கு உழுது கொண்டிருந்தார்கள் அவர்கள் அப்போது. ஒவ்வொரு நாளும் ஒரு பூ மலர்வாய் தித்திப்புடன் போய்க்கொண்டிருந்த பொழுதுகள் அவை. எல்லாப் பயிர்களுமே அவள் பாடியதால்தான். அன்று வளர்ந்தன என இப்போதும் கிழவன் சொல்வான். அர்சத் பாய் அந்தச் சுத்துப்பக்கமே இல்லாதமாதிரி முதன்முதலாய் நிலத்திலே நீர் இறைக்கும் பம்புசெட்டுப் போட்டது அப்போதுதான். பொத்தானை அழுத்தியதும் தண்ணீர் பாயும் அதிசயம். சின்னக்குழந்தைக்கு எப்போதும் விடலைகள்போலத் தண்ணீர்ப் பைப்பில் காதுவைத்து உள்ளிருந்து வரும் ஓசையைக் கேட்பதே வேலையாய் இருக்கும். தந்திக்கம்பத்திலிருந்து கேட்கும் ஓசைபோல வரும் அந்த ஓசையும். அவன் காதுவைத்திருக்கும் சமயம் பார்த்து ஒரு பொத்தானைப் பார்வதி அழுத்தியதில் திடீரென்று பீய்ச்சி அடித்த தண்ணீரால் தூக்கியெறியப்பட்டான் சின்னக்குழந்தை. விழுந்த இடத்தில் நின்றிருந்த செடியொன்றின் காய்ந்த குச்சியொன்று காதில் குத்திக் கேட்கும் திறன் போய்விட்டது. தண்ணீர் பாய்ந்த அதிர்ச்சியில் மறுகாதின் கேட்புத்திறனும் குறைந்துபோனது. பார்வதி அத்துடன் பாடுவதை நிறுத்திவிட்டாள்.

சின்னக்குழந்தைக்கு வாரத்துக்கு இரண்டு படம். வெயிலடித்தாலும், மழை பொழிந்தாலும் போய்விடுவான். தரைச்சீட்டு வாங்கி, மணல் குவித்து உட்கார்ந்தபடி பொறி கடலை கொறித்துக்கொண்டு ஆட்டம் பார்ப்பது என்பது அலாதி சுகம். சிலுக்கு இருக்கிறதாய்ப் பொய் சொல்லித் தன்னை கூட்டி வந்து விட்ட காட்டுராஜா, சாமன் ஆகியோர் மீது எழுந்த கோபம் மீனாவால் தீர்ந்துவிட்டது. படம் முடிந்து வருகையில் மனது முழுவதும் நிறைந்துவிட்ட மீனா. எந்தப் படத்தில் கதாநாயகன் தப்பு அடிக்கிறவனாக இருந்திருக்கிறான். இந்த வயசு வரைக்கும் பார்த்த ஒரு படத்திலும் அப்படி இல்லையே. கிழவனின் மனது பெரும் தாக்கமடைந்துவிட்டது. படம் ஓடிக்கொண்டிருக்கையிலே திடீரென்ற காட்சி மாற்றத்தில் சின்னக்குழந்தை நிலை குலைந்து போனான். வேட்டியை மடித்துக்கட்டிய பாரதி, கழனியில் நாற்றுக்கட்டுக்களை வீசுகிறான். நடவு நடந்துகொண்டுள்ளது. வெள்ளரித்துண்டு போன்ற தொடைகள் தெரியும் வண்ணம் சேலை ஏற்றிய பெண்டுகள். அழகிய கண்ணம்மாள் வந்து பாடுகிறாள். அவள் பாட்டு அலைஅலையாய் எழுந்து பாரதியை இழக்கிறது. நம் வாழ்க்கையை எப்படிப் படம் பிடித்தார்கள். சிலிர்த்தான் கிழவன். வயசில் பார்வதியும் மீனாவைப் போலத்தான். கிழவனுக்கு முறுக்கேறியது. அவன் முன்பு இதே டெண்டில் கண்ட இந்தியன் தாத்தா அவனில் இப்போது வந்து இறங்கினான். ஒரே பாய்ச்சலில் திரையுள் போய்விட்டான் கிழவன். பார்த்திபனுக்கு வர்மக்கலையின் சூட்சும அடிகள் விழுந்தன. மீனா பதறவேயில்லை. பார்த்திபனை வீழ்த்திவிட்டு மீனாவுடன் ஆடத்துவங்கினான் கிழவன்.



படிப்பகம்

www.padippakam.com

தான் வந்ததால் மீனா மிக்க சந்தோஷமடைந்ததாயும் எண்ணிக்கொண்டான்.

அன்றிரவு அவன் கனவொன்று காண நேர்ந்தது. இதற்கு முன் வாழ்வில் இடையூடியிராத கனவு. எதுவுமற்ற வெளியில் எல்லாமே பறைகளாகத் தெரிகின்றன. வானம் மாபெரும் பறையாக. பூமியும் மாபெரும் பறையாக. ஓடுகையிலும், நடக்கையிலும் அதிரும் பூமி பறை. நிலவும் பறையே. வழியெங்கும் பறைகளே. சின்னக்குழந்தை பார்வதியை பறைகளினூடாகத் தேடி அலைந்தான். அவன் மூச்சும், தொடுகையும் பட்டுப் பறைகளில் எழுந்த இசை அலைகள் அவனை விரட்டுகின்றன. வெகு தூரம் ஓடி, ஒரு சமவெளியைக் காண்கிறான். இந்த இருட்டு வெளிபார்வைக்குத் தெளிந்தபோது குயில்களால் நிறைந்திருக்கிறது. தோளிலும், கைகளிலும் குயில்களுடன் பார்வதி அங்கிருக்கிறாள். அவன் நிலா பறையை எடுத்துக்கொள்கிறான். நடந்து நடந்து மலையுச்சியை அடைகின்றனர். அவள் பாடுகின்றாள். அவன் பறை இசைக்கிறான். சமவெளி முழுதும் பாட்டாகி, வானமும் நிறைந்து சப்தத்துளிகளால் அடித்துப் பெய்கிறது. பாட்டுமழை. கனவு உறுத்திக்கொண்டே... மறுநாள் பொழுது விழுவதற்கு முன்பாகவே போய்ச் சாராயம் வாங்கிவந்து விட்டான். சின்னக்குழந்தை.. பேரம் பேத்திகளோ, பிள்ளைகளோ இல்லாவீடு. ஏகாந்தம். கிண்ணம் நிறையக் குழம்பு ஊற்றிவைத்துக்கொண்டு உட்கார்ந்தவர்கள் ஆளுக்குப் பாதி என்று போத்தலை தீர்த்துவிட்டனர். சின்னக்குழந்தைக்கும் பார்வதிக்கும் உலகம் சுழல்வது தெரிந்தது. பஞ்சுபோலக் காற்றிலே பறந்தனர். மீனாவைப்பற்றி பிரஸ்தாபிக்கத் துவங்கிவிட்டான் கிழவன். பார்வதி சிடுசிடுத்தாள். முன்னெப்போதும் இருந்திராத உணர்வுத்தூண்டல் பெற்ற கிழவன், பார்வதியைக் கட்டியணைத்து முத்தமிடமுயன்று முகத்திலே ஒரு இடியும் வாங்கிக்கொண்டான். பார்வதியை பாடச்சொல்லி கெஞ்சினான் கிழவன். அவனின் வேண்டுதல் குழைவுடன் தொடர்ந்தபடியே இருந்தது. கிழவியோ வீம்பாய் மறுத்துவிட்டாள்.

வெளியூரிலிருந்த தன் மகனைப் பார்க்கும்பொருட்டு போயிருந்த கிழவன் காதொலி கருவி வாங்கித்தரும்படி கேட்டுக்கொண்டான் மகனிடம்.

"இந்த வயசுல எதுக்கு அதெல்லாம்"

"உங்கம்மாவே கேலி பண்றாடா. ஊர் பசங்க ராவுடியும் தாங்கல"

அப்பனின் திருப்திக்கென்று மருத்துவர் முகத்தைகாட்ட அழைத்துப்போய் "வர மாசம் வீட்டுக்கு வரும்போது காது மிசினு வாங்கிவரம் போப்பா" என்று சொல்லி வண்டி ஏற்றிவிட்டான் மகன்

ஒருநாள் அதிகாலை மசமசவென்றிருந்த சாம்பல் வேளையில் கிழவனின் ஆசையிலே மண்ணள்ளிப் போட்டாள் பார்வதி. கிழவி செத்துப்போனாள். கிழவனின் நெஞ்சிலே எதுவோ ஒன்று வந்து உட்கார்ந்துக்கொண்டது. மனபாரம். எதுவும் செய்யவோ, யோசிக்கவோ, நிதானிக்கவோ விடாத பாரம். அவனால் அவள் சாவை நம்பமுடியவில்லை. அழவும் முடியவில்லை. வந்து வந்து சவத்தருகே நின்று கிழவியை வறண்ட பார்வையால் பார்ப்பதும், பின்பு எங்காவது ஒரு மூலையில் போய் உட்கார்ந்துக்கொள்வதுமாக இருந்தான். சாமனும், காட்டுராஜாவும் கிழவனைப் பிடித்துக்கொண்டு போய் வயிறு முட்டச் சாராயம் ஊற்றினார்கள். கிழவன் உளறிக்கொட்டினான். சாவு வீடு அமைதியாக இருந்தது கிழவனுக்கு. மக்கள் பேசிக்கொண்டுதான் இருந்தனர். கிழவனுக்குக் கேட்கவில்லை. உறவுப்பெண்களும், ஊர் பெண்களும் கும்பல் கும்பலாக அழுதுகொண்டுதான் இருந்தனர். அவனுக்குக்கேட்கவில்லை. வாசலிலே காட்டுராஜாவும், சாமனும் மேளம் அடித்துக் கொண்டிருந்தனர். அதுவும் அவன் காதுகளை எட்டவில்லை. யாருமே பேசாமல் மௌனமாய்ப் பார்வதிக்கு மரியாதை தருவதாய் நினைத்தான் அவன். சப்தமற்ற உலகிலே பார்வதியைக் கிடத்திவைத்து எல்லாரும் பார்த்திருப்பதாயும் எண்ணினான். இல்லை, ஒருவேளை பார்வதிதான் எல்லாருடைய சப்தங்களையும் எடுத்துக்கொண்டு திருப்பித்தரமுடியாது என்று சொல்லியபடி படுத்துக்கொண்டிருக்கிறாளோ எனவும் யோசனை செய்தான் கிழவன். எவர் எவரோ வந்து போனவண்ணமிருந்தனர். இன்னமும் அவன் மகன் வரவில்லை. ஆள் போயிருக்கிறது. மகன் அழைத்தும் போகாமல் கிழவனும் கிழவியும் இந்த ஊரிலேயே இத்தனைக்காலமும் இருந்துவிட்டனர். அவனுக்கென்று இருந்தவள் பார்வதி. போய்விட்டாள். இனிக் கிழவன் உயிர்கூடக் கெட்டியில்லை. இப்பவோ, அப்பவோதான். கிழவி அவனைவிட மாட்டாள். கூப்பிட்டுக் கொண்டுபோய் விடுவாள். எல்லார் வாயிலிருந்தும் வார்த்தைகள் கும்பல் கும்பலாய்ச் சரிந்துகொண்டிருந்தன.

கிழவன் முன்பு உழுதுகொண்டிருந்த அந்த நிலத்தின் எஜமான் பிள்ளைகள் வந்து போனார்கள். பழைய நினைவுகள் வந்து அலையாடின அவனுள். கண்களிலே திரை கட்டிக்கொண்டது. மூர்ச்சையானவன் போல விழந்தான்.

பெருத்த சலசலப்பு எழும்பியது. அவனைத் தூக்கிக்கொண்டுபோய் வீட்டுக்குள்ளே நார்க்கட்டிலில் கிடத்திவிட்டார்கள். நினைவு தெளிந்து மீண்டும் வந்து உட்கார்ந்துகொண்டான் சின்னக்குழந்தை. கூட்டம் அதிகரித்திருந்தது. ஒரு சடலத்தை நடுவில் வைத்துக்கொண்டிருக்கிறோம் என்ற உணர்வற்று இயங்கியது கூட்டம். ஊதுவர்த்திகளின் புகை கற்றை கற்றையாக மண்டியது. எல்லார் முன்பும் வைரக்குச்சிபோல படுத்துக்கிடந்தாள் கிழவி. வாய்மட்டும் திறந்தே இருந்தது. பாடுவதுபோல படுத்திருந்தாள். அவள் இப்போது பாடிக்கொண்டும் இருக்கக்கூடும். நமக்குத்தான் கேட்கவில்லை என்று தனக்குள் சொல்லிக்கொண்டான் கிழவன். தான் செவிடன் என்பது முதன்முதலாய் இப்போதுதான் வந்து அறைந்தது அவனை. அவள் பாடுவதையோ, பேசுவதையோ கேட்காமல் இத்தனை நாட்களும் போய்விட்டன. சைகையிலும், காதருகில் சத்தமிடும் எகத்தாளத்திலுமே வாழ்க்கை கட்டுண்டுவிட்டது.. சின்னக்குழந்தைக்கு நினைக்க நினைக்க நெஞ்சுள் எதுவோ கரைந்தது. மகன் வந்துவிட்டான். சாவு வீட்டில் பெருத்த அழுகுரல்கள் புதிதாய் எழுந்தன. அவனுக்கும் இப்போது கட்டுப்படுத்த



படிப்பகம்

www.padippakam.com

முடியாதபடி அழுகை வந்துவிட்டது. பொலபொலவென உந்தினான் கண்ணீரை சின்னக்குழந்தை.

பார்வதியை மண்ணுக்குள் இட்டுவிட்டு எல்லாரும் போய்விட்ட பின்பு திடுமென வெறிச்சோடிப்போனது வீடு. யாருமற்ற அங்கே இருப்புக்கொள்ள முடியவில்லை கிழவனுக்கு மலட்டுக் கணங்களின் காய்ச்சல் தாங்காமல் வெளிக்கிளம்பிய அவன் காட்டுராஜா வீட்டை அடைந்தான். சிறுபொழுதுக்குள் பறையின் ஓசை வச்சரக் குரலுடன் அழைக்கத்துவங்கியது. சின்னக்குழந்தையின் கைகள் துடியாய் இயங்கின. எங்கிருந்தோ வந்த காட்டுராஜா "என்ன மாமா" என்றான்.

"ஒங்க அத்த பாடறாடா"

கொஞ்சம் அடங்கிப்பின் ஆற்றாமையுடன் குரலெடுத்து தப்போசை.

●

யுவபாரதி

## ஒளிந்திருக்கும் வீடு

அந்த நிலையம் வெறிச்சோடிக் கிடந்தது
அல்லது பயணிகள் காத்திருந்தார்கள்
தேங்கியிருந்த சாலை நீரில்
தலை கவிழ்ந்த புன்னகை சிலிர்தாடியது
பாதையோர விடுதிகளில் ஸ்வெட்டருக்குள்
ஒடுங்கி தேநீர் உறிஞ்சிக் கொண்டிருந்தன
சில மஃப்ளர்கள்
நினைவுகளின் கதகதப்பு எனக்கு
திசை கலைத்து மிதந்து போகிறது
சற்றுமுன் ஓசையின்றி கடந்த
ரயிலின் வெண்புகை
ஃபெரன்ஹில்லின் வண்ணம் சுருங்காத
நீல மலர்கள் ஒரு திசையில்
மொட்டவிழ்கின்றன
முதுகில் பாடல்கள் நிரம்பி வழியும்
கூடைகளோடு சரிந்து மறைகிறார்கள்
சில தேவதைகள்
பைக்காராவின் வசீகரத்தில்
தொலைந்து விடுவேனோ என
முன்பு நீ இழுத்து பத்திரப்படுத்திய
என் வலது உள்ளங்கை
அத்திசைக்கு இழுக்கிறது
காலம் கரைத்த பால்யம் குழைத்து
இளமைக்கு மெருகூட்டிய நீ
ஒளிந்திருக்கும் வீடு
அந்த திசையில் தானிருக்கும்.

## வரவேற்றோம்

**சாமிக்கண்ணு எனச்சில மனிதரின் கதைகள் (புதினம் - நாவல்)**
ஆசிரியர் : ச. ராஜநாயகம்,
வெளியீடு : இளையநந்தன் பதிப்பகம்.
உறையூர், திருச்சி. விலை : 65.00 பக்கம் : 248

**சப்பாணி (சிறுகதைகள்)**
ஆசிரியர் : கே. ராஜதுரை,
வெளியீடு : ஜூபிட்டர் வெளியீடு
4ஏ, குஞ்சன்விளை, மணிக்கட்டிப் பொட்டல் (அ)
நாகர்கோயில் - 629 501
விலை : 50.00 பக்கம் : 128

**நேர்க்கோட்டு வரப்பு (கவிதைகள்)**
ஆசிரியர் : செய்யாறு வி.பாலு,
வெளியீடு : கவிதா பதிப்பகம்,
77, கண்ணுகாபுரம் தெரு, திருவத்திபுரம், செய்யாறு - 604 407
விலை : 7.00 பக்கங்கள் : 32

**தாய்மொழி வழிக்கல்வி (கட்டுரை)**
ஆசிரியர் : பொன்னீலன், வெளியீடு : தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்,
பாலன், இல்லம், 14, செவாலியர் சிவாஜி சாலை, சென்னை - 600 017
விலை : 3.00 பக்கம் : 16

**தமிழ்த் திரைப்படங்கள் கட்டமைப்பும் கதையாடலும் (கட்டுரை)**
ஆசிரியர் : சி. சொக்கலிங்கம், வெளியீடு : திணை வெளியீடு,
36, பகவதி லாட்ஜ், மீனாட்சிபுரம், நாகர்கோயில் - 1
விலை : 12.00 பக்கம் : 32

**ரஜினி : சில முகங்கள் (கட்டுரை) - சிலம்பம் வெளியீடு - 01**
வெளியீடு : பண்பாடு - மக்கள் தொடர்பகம், லொயோலா கல்லூரி, சென்னை - 600 034
நன்கொடை : 20.00 பக்கம் : 44

**ஈச்சம்பாய் (சிறுகதைகள்)**
ஆசிரியர் சு. சமுத்திரம்,
வெளியீடு : ஏகலைவன் பதிப்பகம்,
9, இரண்டாவது குறுக்குத் தெரு, டாக்டர். இராதாகிருஷ்ணன் நகர்,
சென்னை - 600 041
விலை : 35.00 பக்கம் : 192

**இவர்கள் வித்தியாசமானவர்கள் (கட்டுரை)**
ஆசிரியர் : அந்தணி ஜீவா, வெளியீடு : பூபால சிங்கம் புத்தகசாலை, 340, செட்டித் தெரு, கொழும்பு - 11
விலை : 40.00 பக்கம் : 160

**ஆசைக்கு வறுமை இல்லை (கவிதை)**

ஆசிரியர் : கவிஞர் அதங்கோடு அனிஷ்குமார், விலை : 12.00

முகவரி இல்லை, பக்கம் : 30



படிப்பகம்

www.padippakam.com





# பூஜ்யம்

**ஸ்ரீபதி பத்மநாபா,**

தரு வெளியீடு, 25, சென்குப்தா வீதி, ராம் நகர், கோவை 9 (1997 வெளியான 28 கவிதைகள்) உரூ. 28

சிரத்தை எதையும் கோராத சாதாரண வாசிப்புக்குப் பின் சலிப்பை மிச்சம் தரும் கவிதைத் தொகுப்பு. தொடர்ந்து தீவிரமாகக் கவிதைகளை வாசித்து வரும் வாசகன் ஞாபகத்தில் குறித்து வைத்துக்கொள்ள ஒரு கவிதையும் இதிலில்லை. நவீனக் கவிதைக்கு அடிப்படையான படிம வெளிப்பாடு, கவிதைக்கான மொழி குறித்த பிரக்ஞை, அதன் சாத்தியங்களை ஏற்படுத்தும் புதுமைக் கூறுகள் எதுவுமற்ற மேலோட்டமான உரைநடைத் தன்மையிலானவை பெரும்பான்மைக் கவிதைகள். உள்ளடக்கத்திலும் இன்றைய நவீன வாழ்வின் சூட்சுமங்களையோ, அபூர்வமான தருணங்களின் கணங்களையோ வெளிக் கொணராத புற நிலையின் விளிம்புகளிலேயே பல கவிதைகள் இயங்குகின்றன. இது கவனித்திருந்தாலும் இவரது வெளிப்பாட்டில் தனித்துவம் ஏற்பட்டிருக்கும். புதிதானதொரு தொகுப்பு என்பது கடந்த காலப் பதிவுகளை ஏதேனும் விதத்தில், படைப்பின் புதுமை அல்லது அனுபவங்களின் நவபார்வை; சோதனைகளின் வழி கடந்து செல்ல வேண்டிய அவசியமிருப்பதை உணர்த்தவே குறிப்பிடப்படுகிறது. இம் மனநிலையிலிருந்து வாசிக்கப்பட்ட இத்தொகுப்பு ஒருவித அலுப்பை உருவாக்கிவிடுகிறது. உன் மத்த நிலையில் இயங்கக்கூடிய காதல் இவர் கவிதைகளில் தட்டையான மொழி மற்றும் உணர்வுத் தளத்தில் தொய்வடைந்து விடுகிறது. ஒரு வகையில் இன்று சினிமாப் பாட்டுக்குகாரர்கள் வெளியிடுகிற 'புதுக்கவிதை'களின் தரத்தில்தான் பல கவிதைகள் உள்ளன. மேலும் தான் கவிஞன் என்ற ஞாபகத்தோடு எழுதப்பட்ட 'காதல'னின் கவிதைகளாகப் பலதை எதிர்கொள்ள நேர்வதில் சங்கடம் கூடுகிது. இன்றைய பெண்ணிய நிலையிலிருந்து சுதந்திரமாகத் தர்க்கிக்கச் செய்திருந்தும் தலைப்புகளின் 'காரணமாக 'அகலிகை' என்கிற தொன்மம் தன் நிலை பிறழ்ந்த தோற்றமடைகிறது. இவற்றை மீறி, மொழியாளுமை கொண்ட முயற்சிகளுக்காகவும், பத்மநாபா பயணப்பட வேண்டிய படைப்புக்களின் முன்மாதிரிக்காகவும் சில கவிதைகளை இங்குக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும். இரண்டாவது மரம், கனா வெளியில், கால அவஸ்தை (சப்தங்கள் காதில் ஏற்காத ஒரு மோன நிலையில் நானும் குருவியும் இந்த சூழலும் அமர்ந்திருக்கிறோம்), காகித ஸ்வரூபம், இடையில் ஓர் அவதாரம் (இறுதிப் பகுதி). பக்கம் விட்டு பக்கம் கம்ப்யூட்டரில் பிரிண்ட் எடுத்த கிராப்பிக்ஸ் ஓவியங்கள் (?), X, Y, Z கிராப் வடிவம் +, -, குறிகளின் பயன்பாடு, என்பவற்றால் ஒரு நவீனக் கவிதைத் தொகுப்புக்கான 'பிம்பத்தை' ஏற்படுத்தியிருப்பது கவிதை மனநிலைக்கு ஒவ்வாத செயற்கைத் தன்மையின் உச்சமாகும். இவை போன்ற வடிவமைப்பு ரீதியான புற மனநிலையை இவர் கைவிடுவதினால், சிறந்த கவிதைகளை இவர் அடைய முடியும் எனத் தோன்றுகிறது.

- தேவ்நேஷ்

# நெரிந்து

(கவிதைகள்) / **மதிவண்ணன்** / வேறு வேறு. 111ஆ, காந்தி, ஆத்தூர் - 636 102 / பக். 47 / விலை 20)





பேசப்படாத பகுதிகளை முன் எப்போதும் பேசிடாத வாய்கள் பேசத் தொடங்கிய தருணத்தை நவீன தமிழ்க்கவிதையின் பாய்ச்சலாக உணரலாம்.

மக்கள் சார்ந்த கவிதை எழுத்து வானம்பாடிகளை தொடர்ந்து கே.சி.எஸ். தணிகைச்செல்வன், இன்குலாப், பரிணாமன், அறிவுமதி என நிலைகொண்டது.

சோவியத் வீழ்ச்சி, ஆப்பிரிக்க மற்றும் பழங்குடிகளின் எழுச்சி, மண்டல்குழு அமல், தேசிய இனங்களின் புத்துணர்ச்சி, ஈழப்போர் என்பதான எண்பதுகளின் இறுதி படைப்புலகை புதிய திசைக்கு நகர்த்தியது.

இடைநிலை விளிம்பு நிலைச் சாதிகள், சிறுபான்மை சமயங்கள் பெண்கள் ஆகியோர் தங்களின் இருப்பையும், அடையாளத்தையும் தேடத்தொடங்கினர் பேச்சுமொழி, தொன்மங்கள், குலக்குறிகள் சார்ந்த வாழ்க்கை முறைப் பதிவுகளாக, விமர்சனங்களாக, பிரகடனங்களாக முன்வைக்கப்படுகின்றன.

தமிழில் பழமலய் தொடங்கி இளமுருகு, அறிவுக்குயில், கரிகாலன், ஹெச். ஜி. ரசூல், இளம்பிறை என்.டி.ராஜ்குமார், நா. சிவக்குமார், ஹமீம் முஸ்தாபா எனத் தொடரும் கவிதை இயக்கத்தில் ம.மதிவண்ணன் தன்னையும் இணைத்துக்கொள்கிறார்.

குணமும் மணமும் நிறைந்த குசுவிலிருந்து / எடுத்துக்கொண்டிருக்கிறேன் / என் அசலான கவிதைக்கான / கச்சாப்பொருட்களை (39) -மேன்மை, புனிதம் என்பதாக முன்னிறுத்தப்பட்ட தேனொழுகும் பலநூற்றாண்டு கவிகளை கேள்விக்குள்ளாக்கி - மலக்குழி



படிப்பகம்

சுத்தப்படுத்தியவனின் பேரன் (11) கையில் சரஸ்வதி கொடுத்த எழுத்தாணியோ விநாயகன் எடுத்துக்கொடுத்த வார்த்தைகளோ இல்லை. மாறாக, பீவழித்துக்கொண்டிருந்த கொடுவாளை / கூர் தீட்டி (42) வைத்திருப்பதாகப் பிரகடனம் செய்கிறார்.

நாராயணத் தாத்தாவுக்கப்புறம் / சக்கிலியக் குடியில் இல்லாமலேயாகிவிட்ட / கட்டைக்குழல் சொல்லும் / எங்களை முந்தி / எங்கள் கலை செத்துக்கொண்டிருப்பதை (6) - கவலைப்படும் மதிவண்ணன் தங்கள் ரணம் பற்றி நீலிக்கண்ணீர் வடிக்க வருவோரை எல்லாத்தையும் பொத்திக்கொண்டு / தூரமோடிப்போ என விரட்டுகிறார்.

சுற்றியிருப்பவர் பாலுறுப்புகளை / விழிப்புடன் கண்காணித்திருப்பதோடு / முந்து விடுகிறது / சக மனிதர் மீதான அக்கறைகள் (20) / நிகழ்வின் வக்கிரத்தை, போலிமையை தோலுரிக்கும் கவிதை.

காலம் தள்ளும் கறுப்பு வளையல்காரிகளின் / கைகளில் வந்தாவது / சரியாய் இருக்குமா? / வாத்திச்சிகளின் கைப்பிரம்பும் / பொம்பளைப் போலீசின் லத்தியும் (32) என விசனப்படும் கவிஞர் அறிந்ததுதான் அதிகாரம் இந்த அமைப்பில் யார் கைக்கு வந்தாலும் மீண்டும் ஒரு அதிகார பீடம் உருவாகிவிடும் என்பதும் இந்த அமைப்பு சீர் குலைக்கப்படாத வரை கருவிகள் பல ஆனாலும் காரியம் ஒன்றாகத்தான் இருக்கும் என்பதும், அம்மாசி சக்கிலிச்சி அறிந்ததில்லை / ஆப்பிள் பழருசி / மக்கள் என்பது / சக்கலியனையும் சாம்பானையும் சேர்த்துதான் / என்பதையறிந்தவன் கவிஞன் (26) - ‘ஊருக்கு வெளியே சேரி’ என எழுதும் எழுத்தாளக் கோமான்களுக்கு வேண்டுமானால் மதிவண்ணன்களின் வரவு முகச் சுளிப்பு தரலாம்.

அறியப்பட்ட அழகியலை மறுதலிக்கும் எதிர் அழகியல் தளத்தில் இயங்கும் இவர் கவிதை அதிர்ச்சியை மட்டுமல்ல, அற்புத ஆனந்தத்தையும் தரவல்லது.

விழிமலர் விரிப்பில் வீழ்ந்து கொஞ்சு மொழிப்புதிர்ப்பொருளில் / இறங்கிக்கிட்டே போகுங்கால் (8) கற்கவசம் கட்டிய மனிதமுகங்களுக்கிடையில் (9) போன்ற அழகும், புதுமையும் மிக்க லாவகமான மொழி வீச்சு இவரை ஆள்கிறது. சங்கக் கவிதைகளுக்கு நிகராக வளமான தெறிப்புகள் ஆங்காங்கே மின்னலிடும் இத்தொகுப்பு அதிக எதிர்ப்பைத் தருகிறது.

- இரா. காமராசு

# அஞ்சலை

## கண்மணி குணசேகரன்

வெளியீடு : அருள் புத்தக நிலையம், 12,வாணியர்வீதி, குறிஞ்சிப்பாடி-607 302 விலை : 85.00 பக்கம் : 264 கடலூர் மாவட்டம்.

வாழ்க்கையில் கேள்விப்பட்ட அல்லது நேரில் சந்தித்த உண்மைச் சம்பவங்களோடு பெருமளவு கற்பனையைப் போட்டு பிசைந்து "கவிதை" பண்ணிக்கொண்டிருப்பதுதான் எழுத்தாளர்களின் வாடிக்கை. ஆனால் அஞ்சலை? கற்பனைக் கதாபாத்திரமாகவே இருந்து தொலைத்திருக்கலாம்.

உண்மை சுடுகிறதே... என்ன செய்ய? அஞ்சலை ஒரு வாழும் எதார்த்தம்.

அஞ்சலை - சரித்திரம் படைக்கிறவள் அல்ல. சராசரி கனவுகளோடு வாழும் ஒரு சாதாரணம் அவள். புரட்சிப் பெண் அல்ல. புழுத்துப் போன மனிதர்களின் புரட்டுகளுக்கு வெகு சுலபமாய்ப் பலியாகிப் போனவள்.

இளமைக் கனவுகளோடு துள்ளித்திரிகிற அஞ்சலையாய் அறிமுகமாகி, தாலி கட்டப் போகிறவனாய் ஒருவன் அடையாளங்காட்டப்பட்டு, முகம் கூட அடையாளம் தெரியாத இருட்டில் வேறொருவன் தாலி கட்ட... முதல் முறையாக சமூகத்தின் கோர நகங்களால் அஞ்சலை கிழிக்கப்படுகிறாள்.

இரண்டாவது முறை தன் சொந்த சகோதரியாலேயே ஏமாற்றப்பட்டு, வாழ்க்கை சீரழிக்கப்படும் போது சமூகம் இவ்வளவு குரூரமாக கூட இயங்குமோ என்கிற அவலம் நம்மை அடிவரை அழுத்துகிறது. அடிவயிறு எரிகிறது.

ஆனால், ஒவ்வொரு முறையும் அவள் சீறி சினந்து பொங்கும்போதும், அவள் கோபத்தில் சத்தியத்தின் குரல் ஒலிப்பதை நம்மால் கேட்க முடிகிறது.

வசனங்களும், சம்பவ இடங்களுமே கதை உயிரோட்டத்தைத் தீர்மானிக்கின்றன. வெகு யதார்த்தமான உரையாடல்கள்.

சமூகத்தின் அடித்தட்டு மக்களின் வாழ்க்கையை இவ்வளவு நுணுக்கமாகவும், ஆழமாகவும் யாரும் சொல்லியிருப்பதாகத் தெரியவில்லை. கூர்மையான நோக்கு.

இடக்கரடக்கலாகப் பயன்படுத்தப்பட்டிருக்கும் சில வார்த்தைகளைத் தவிர்த்திருக்கலாம் என்று தோன்றினாலும். அவை அடித்தட்டு வாழ்க்கையின் இயல்போடு ஒட்டியிருக்கின்றன என்பதையும் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்.

எழுத்தெல்லாம் வாழ்க்கையாகி விடுவதில்லை. வாழ்க்கையெல்லாம் எழுத்தாகி விடுவதுமில்லை.

இந்த இரண்டுமே கண்மணி குணசேகரனுக்கு கைகூடியிருக்கிறது.

அஞ்சலை - இன்னமும் எங்கோ ஒரு மூலையில் வாழ்ந்து கொண்டிருக்கிற மானுடத்தின் எச்சம். அடித்தட்டு மக்கள் அனுபவிக்கிற அவலத்தின் மிச்சம்.

- பாரதிமணாளன்






www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

ஜீ.முருகனின்

# சாயும் காலம்

வெளியிடு:
தாமரை செல்வி பதிப்பகம்
31,48, ராணி அண்ணா நகர்
கே.கே.நகர், சென்னை -14
விலை - ரூ. 45

## பிரம்மராஜன்

ஆசிரியனின் அறிக்கைகளும், பிரகடனங்களும், (எழுத்துக் கொள்கை) எழுதாமல் விட்டுப் போன காலத்தைப் பற்றிய அவஸ்தையின் பதிவாக்கல் களும்,ஆசிரியனின் தனிப்பட்ட முன்னுரையும் இல்லாமல் வந்திருக்கிறது ஜீ.முருகனின் **சாயும் காலம்.** இருப்பினும் ஆசிரியனின் யதார்த்தம் குறித்த ஒரு பார்வை பின்னட்டையில் காணப்படுகிறது. ஆனால் அது வாசகனைப் பாதிக்கும் அளவிற்குப் பாசாங்கில்லாததாகவும் இருக்கிறது.




இதனாலேயே அவருடைய சில கதைகள் குழந்தைகளுக்கு எழுதப்பட்ட முழுமுற்றான புனைவுகள் போலத் தோற்றமளிக்கின்றன. இன்னும் சில தேவதைக்கதைகள் போன்றும் மேலோட்டமாய்த் தெரிகின்றன. ஜீ. முருகன் இத்தகைய முழுமுற்றான புனைவுகளைத் தேர்வதற்குக் காரணம் யதார்த்தத்தின் ஈர்ப்பற்ற தன்மைதான். இந்தத் தொகுப்பில் உள்ள கதைகளை உத்தேசமாக 5 வகையாகப் பிரிக்கலாம்.

1. சீரியசான யதார்த்ததை அடிப்படையாகக் கொண்டவை.
2. யதார்த்தம் இறுதியில் புனைவான திருகலாகி முடிபவை.
3. குழந்தைகளுக்கு எழுதியவை போலத் தோன்றும் முழுப் புனைவானவை.
4. பாலியல் பிரச்சனைப்பாடுகள் நிறைந்தவை.
5. தேவதைக் கதைகள் போன்ற மந்திர நிகழ்வுகள் கொண்டவை.

ஆயினும் தேவதைக் கதைகளிலும் பாலியல் பிரச்சனைப்பாடுகள் இடைவெட்டுகின்றன. மிகச் சுருக்கமான கதைத்திட்டமும் **(Plot)** குறைந்த எண்ணிக்கையிலான கதைப்பாத்திரங்களும் உள்ள கதைகளையும் ஜீ. முருகனின் சாயும் காலம் தொகுப்பு கொண்டிருக்கிறது. கதையைத் தொடங்கும் விதத்தில் ஒரு வித சகஜபாவத்தை எல்லாக் கதைகளிலும் காணமுடிகிறது. அதிகபட்ச பிரஸ்தாபம் இல்லாமல் கதைகளின் தொடக்கத்தை ஒரு சிறிய வாக்கியத்தில் எழுதித் தொப்பென்று போட்டு விடுகிறார் ஜீ.முருகன். மந்திர வாள் போன்ற கதைகளை நீதிக்கதைக்ளாகவும் படிக்கலாம். தவறில்லை. படித்த பிறகு அதிலிருந்து கிடைக்கும் நீதியை எந்த நிகழ் உலகிற்கு அனுசரிப்பது என்பது வாசகனின் வேலை. இந்தத் தொகுப்பின் சிறந்த அம்சமாக எனக்குத் தெரிவது அது அளிக்கும் வாசக சுதந்திரம். எழுத்தாளனின் பிரதிக்கும் படித்து வியாக்கியானம் அளித்துப் புரியப்படும் பிரதிக்கும் (படிப்பவர் சாதாரண வாசகராக இருந்தாலும் சரி, மிகப் பெரிய விமர்சன மேதையாக இருந்தாலும் சரி) எப்போதுமே ஓர் இடைவெளி நின்று போகிறது. இதைக் கட்டுடைத்தல்காரர்களுமே கூட ஒப்புக்கொள்வார்கள். வாசித்தல் என்ற வாசக அனுபவத்திற்கு நிறைய சுதந்திரம் இருக்கும் பிரதியே சிறந்த பிரதி. இசையில் எப்படி பாலிஃபொனி சிறந்ததோ அப்படி ஜீ.முருகன் வாசகனுக்கான நிறைய சுதந்திரத்தை இந்தக் கதைகளில் அனுமதித்து எழுதியிருக்கிறார். சாயும் காலம் தொகுதியில் சில கதைகளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட, ஆழமான அர்த்தங்களைத் தருதைற்கு முடிகிறது. மேலும் விவரணை மொழியை முருகன் கதை சொல்லுவதற்குத்தான் பயன்படுத்துகிறார் என்பது ஆறுதலாக இருக்கிறது. பல பின்நவீனத்துவ வாதிகள் (தமிழில்) தன்னைத்தானே காமுறும் நார்சிச வெளிப்பாடாகப் பயன்படுத்துகின்றனர்.

முதல் கதை என்னுடைய வகைப்பாட்டில் முதலாவதில் சேர்கிறது. கதையின் இறுதியில் கொடுக்கப்படும் திருப்பங்கள் எல்லாக் கதைகளுக்கும் பொருந்தி வருவதிலை. நாய் என்ற தலைப்பிட்ட கதை மந்திர வாள் என்ற கதை அளவுக்குச் சிறப்பாக அமையவில்லை. ஓர் அனுபவம் நமக்கு நடந்ததுதானா என்கிற ஐயப்பாடு எழுகிற மாதிரியும், நிகழ்ந்தது கனவின் கருகிலா, நிஜம் போன்றே தெரியும் கானலிலா என்ற சந்தேகம் எழும்பும் படியும் சில கதைகள் அமைகின்றன. இந்தத் தொகுதியின் வெற்றிகரமான கதைகளும் அவை. 'இரண்டாவது மரணம்' மற்றும் 'ஆற்றோடு போனவன்' ஆகிய இரண்டு கதைகளையும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். என்றாலும் இவற்றின் அடிப்படைக் கட்டுமானமாக இருப்பது ஸ்தூல யதார்த்தமாகவே இருக்கிறது. ஒரு பிரமை கொண்ட வேற்றுலகத்தின் பிள்ளைப் பிராயத்தில் பயணித்துத் திரும்பும் சந்தோஷம் தருவதாக இருக்கிறது



படிப்பகம்

www.padippakam.com

மஞ்சள் பாம்புகள் கதை. ஆயினும் இது முழு முற்றான புனைவல்ல. எல்லா மனிதர்க்குள்ளும் மிஞ்சியிருக்கும் கபடற்ற குழந்தைமையை நோக்கிப் பயணப்படுகிறன மஞ்சள் பாம்புகள்.

மேலும் வாழ்க்கையை மேன்மைப்படுத்துபவை யாவும் கலை நுண்பொருள்களே (Artefact) எனின் கலை நுண்பொருட்களை உருவாக்குபவன் கலைஞனாகிறான். A thing of beauty is joy for ever என்று எழுதிய ஜான் கீட்ஸ் என்ற ஆங்கிலக் கவிஞனின் வார்த்தைகளையும் இங்கு நினைவு கூறலாம். மொழிக் கலைஞர்கள் தவிர வேறு நுண்கலைஞர்கள் நம்மிடையே இருக்கின்றனர். கலை நுண்பொருளை உருவாக்குபவன் லௌகீகமான அதிகார மையங்களைக் கையாள்பவனை விட ஆபத்தானவனாகவும் சக்தி வாய்ந்தவனாகவும் இருக்கிறான். தேவதைக்கதை போன்ற 'மந்திர வாளி'லும் தற்போதைய வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் மற்றொரு சிறுகதையான 'வேட்டை' யிலும் இந்த அம்சம் சித்தரிக்கப்படுகிறது. வேட்டை கதையில் வரும் ஆசாரி, 'ஆற்றோடு போனவனில்' வரும் பிரம்மாண்ட நாற்காலி செய்யும் அப்பா, 'சாயும் காலத்தில்' வரும் பழைய யூரியா பைகளிலிருந்து மாடுகளுக்குக் கயிறுகளைத் தயாரிக்கும் பண்ணையாள் போன்றவர்கள் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர். பலவிதமான முடிவுகளுடன் விளக்கங்களுக்கு உட்படுத்த முடியக் கூடியயதாக அமைக்கப் பட்டிருக்கிறது 'சாயும் காலம்' சிறுகதை. அதற்குத் தேவைப்படுகிற உள்குறிப்புகளும் அந்தக் கதையிலேயே பொதிந்துள்ளன. தொகுதியின் நல்ல கதைகளில் ஒன்று இது.

பாலியில் பிரச்சனைப்பாடுகள் (Sexual Problematics) மிக்க இரண்டு கதைகள் உருமாற்றம் மற்றும் கன்னி. 'உருமாற்றம்' மெய்யாகவே மனமாற்றம் என்ற தலைப்பிடப்பட்டிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும். ஒரு விதமான கட்டுப்பாடற்ற பாலியல் விடுதலையை (பாலியல் வக்கிரங்களுடன்) நோக்கி நகர்வனவாக இந்த இரண்டு கதைகளும் தெரிகின்றன. உருமாற்றம் கதையில் வரும் பெண், காதல் பற்றி அவள் கொண்டிருந்த கருத்துருவாக்கில் சிதைவுற்ற சக மனுஷிக்கான அனுசரணையை உணர்வதுடன் முடிகிறது. இந்த மனமாற்றம் அத்தகைய பெண்ணிடம் சாத்தியம் இல்லை என்று நினைக்கிற ஊர்க்காரர்களுக்குத்தான் அது அதிர்ச்சியாக இருக்கிறது. இதை விட இன்னும் கூடுதலான, வெளிப்படையான விவரித்தல்களுடன் (bordering on the Lines of pornography) எழுதப்பட்டிருக்கிற 'கன்னி' என்கிற கதையின் மூலம் ஆசிரியர் எதை உணர்த்த வருகிறார் என்பது பற்றிய விவாதமும் வாசகனின் மனதில் எழுகிறது. நாட்டுப்புற ஆய்வியல் மூலம் இது போன்ற சடங்குகள் கன்னியாக இறந்த பெண்ணுக்கு தரப்படுகின்றனவா என்பதைப் ஆராய்ந்து பார்க்கலாம். ஆனால் இலக்கிய வகைமையில் இது ஒரு முழுமுற்றான பாலியல் புனைவு. ஒரு கனவாகவும் இந்தக் கதை வாசிக்கப்பட முடியும். இச்சைகள் (Desires), செயல்கள் (Acts), சுகிப்புகள் (Pleasures) ஆகிய மூன்றில் நாம் எதற்கு முக்கியத்துவம் அளிக்கிறோம் என்பதைப் பொருத்து கன்னி கதை துலக்கம் பெறலாம் அல்லது கண்டனத்துக்கு உள்ளாகலாம். பாலியல் ரீதியான மீறல்கள் ( Sexual Transgressions) எப்போதும் மனித மனதிற்கு அதிகபட்ச ஈர்ப்புடையனவாகவே இருந்து வந்திருக்கின்றன. இதன் காரணமாகமாகவே விலக்கி வைப்புகளும் (Exclusions) தடைப்பாடுகளும் (Proscriptions) ஆரம்பகாலச் சமூகங்களில் தொடங்கி இன்றைய சமூகம் வரை தொடர்கின்றன. இந்த மாதிரியான விஷயங்களை முதன் முதலில் மிக வெளிப்படையாகப் பாதசாரியின் குறுநாவலான காசியில் பார்க்க முடிந்தது. காசி தன் நண்பனிடம் ஒரு கனவைப் பகிர்ந்து கொள்கிறான்.

" என்ன காசி ... சொல்டா ..."
" ராத்திரி ஒரு கனவு ... மனசு கஷ்டமாயிருக்கு..."
" என்ன, சொல்லு ...என்ன"
''வனாந்தரத்துக்குள்ளே மத்தியான நேரம். பிரம்மாண்டமான சிலை,. மார்பிலே முகைஞ்சு முகைஞ்சு பால் குடிச்சிட்டிருக்கேன். . அப்புறம் என் அக்காவை – – முகம் – – புணர்றா மாதிரி"
*(பாதசாரி – – காசி) பீட்சி. 16*

பயணம், சிம்மாசனம் இளவரசி மற்றும் மரணம், ஆகிய இரண்டு கதைகளையும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். பயணம் கதையின் பிரதான பாத்திரமல்லாத ஜோசியக்காரனே அதன் நாயகன் மனித மனம் இயங்கும் விதம் குறித்தும் மனிதர்கள் இந்த ஸ்தூல உலகுடன் ஒத்திசைவது பற்றியும் அந்த ஜோசியன் கொண்டிருக்கும் கருத்துக்கள் ஜோசியர்களுக்கே சம்பந்தமில்லாத அளவுக்கு நவீனமாக இருக்கின்றன. கடைசிக் கதையான சிம்மாசனம். ஒரு மெட்டாஃபிக்ஷனாக அமைந்திருக்கிறது. எழுத்தாளன் எழுதும் கதையைபடித்துவிட்டுத்தான் அதில் வரும் இளவரசி கோபப்படுகிறாள். வடிவ அளவில் இந்த தொகுதியில் உள்ளவற்றில் அது சிக்கலானதாகத் தெரிகிறது. புழு போன்ற கதை ஆசிரியர் இன்னதைத்தான் சொல்லப் போகிறார் என்பதை யூகிக்கும்படியாக அமைந்திருக்கிறது. இது ஒரு பலவீனமாக அம்சந்தான், அதன் அங்கத்தை நாம் ரசித்தாலும் கூட.

ஜீ.முருகனின் மின்மினிகளின் கனவுக் காலம் என்ற அவருடைய முதல் புத்தகத்தைப் படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. அதைப் படித்திருந்தால் முருகன் இந்தத் தொகுதியில் அடைந்திருக்கும் கலை ரீதியான நேர்த்தி சாதனைகளை என்ன என்பதைச் சொல்வதற்கு வசதியாக இருந்திருக்கும். சாயும் காலம் படிக்கப்பட வேண்டிய ஒரு சிறுகதைத் தொகுதி என்பதில் எந்த ஐயமும் இல்லை. சமீபத்திய முக்கிய இலக்கிய நிகழ்வாக சாயும் காலம் தொகுதியின் வரவினைச் சொல்லமுடியும்.



படிப்பகம்

www.padippakam.com

# பனிக்குழந்தை

## ஏஞ்சலா கார்ட்டர்

குளிர்காலத்தின் மத்தியக் கட்டம் - ஈடிணையற்ற சீமாட்டியும் சவாரி செல்கின்றனர். அவர் சாம்பல் நிறத்து பெட்டைக் குதிரையிலும் அவள் கரிய நிறத்துப் பெட்டைக் குதிரையிலும் அமர்ந்திருக்கின்றனர்; கரிய ஓநாயின் மின்னும் தோலாடையைப் போர்த்தியிருக்கிறான். சிவந்த குதிகளுடன் கூடிய உயரமான, கரிய, மின்னும் காலணிகளை அணிந்திருக்கிறான்; ஏற்கனவே வீழ்ந்திருந்த பனிமீது புதிதாய்ப் பனி வீழ்ந்தது; வீழ்ந்து முடிந்ததும் உலகமே வெண்மையாகிவிட்டது. 'பனி போன்று வெண்ணிறப் பெண் வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்' என்கிறார் பிரபு. சவாரி செய்து போகின்றனர். பனியில் பள்ளமாயிருக்கும் ஓரிடத்திற்கு வருகின்றனர்; இப்பள்ளம் குருதியால் நிரம்பியுள்ளது. 'குருதி போன்று சிவந்த பெண் வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்' என்கிறார். மீண்டும் சவாரி செய்கின்றனர், வெறுங்கிளையொன்றில் அண்டங்காக்கை ஒன்று அமர்ந்திருக்கிறது. 'அப்பறவை இறகு போல் கரிய பெண் வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்'

அவர் தமது வரையறையை முடித்ததுமே வெண்ணிறச் சருமம், சிவந்த வாய், கரிய முடி கொண்டு நிர்வாணமாய் இருக்கும் பெண்ணொருத்தி சாலையருகே நின்றிருந்தாள்; அவள் அவரது ஆசையின் குழந்தை, சீமாட்டி அவளை வெறுத்தாள். பிரபு அவளைத் தூக்கிக் குதிரையில் தன் முன்னர் அமர்த்திக்கொண்டார்; சீமாட்டியிடம் இருந்த எண்ணமெல்லாம் ஒன்றே ஒன்றுதான்: அவளை நான் எப்படி வெளியேற்றுவேன்?


தன் கையுறையை நழுவ விட்ட சீமாட்டி அதனை எடுத்துத்தருமாறு அந்த யுவதியிடம் கூறினாள்; அவ்வாறு அந்த யுவதி எடுக்கப்போகும் தருவாயில், 'உனக்குப் புதிதாய் வாங்கித்தருகிறேன்' என்று சொல்லி விட்டார் பிரபு. அப்போது சீமாட்டியின் தோள்களில் கிடந்த கம்பளிப்பட்டை நிர்வாணமான யுவதியை சுற்றிக்கொண்டுவிட்டது. பின்னர், பனியில் உறைந்துபோன குளமொன்றில் தன் வைர ஊக்கினை நழுவ விட்ட சீமாட்டி, 'தாவிப் போய் அதனை எடுத்துவா' என்றாள்; 'இப்படிச் சில்லிடும் குளிர்காலத்தில் நீந்திப் போக அவளென்ன மீனா?' என்று பிரபு கேட்டுவிட்டார். அப்போது சீமாட்டியின் கால்களிலிருந்த காலணிகள் யுவதியின் கால்களுக்குப் போய்ப் பொருந்திக்கொண்டன. இப்போது சீமாட்டி எலும்பு போன்று வெறுமையாயிருக்க, யுவதியோ கம்பளிப்பட்டையும் காலணிகளும் கொண்டிருந்தாள்; பிரபு தன் மனைவிக்காக வருந்தினர். அவர்கள் ரோஜாக்கள் பூத்திருந்த புதருக்கு வந்து சேர்ந்தனர். 'எனக்காக ஒன்று பறித்து வா' என்றாள் சீமாட்டி. 'இதனை என்னால் மறுதலிக்க இயலாது' என்றார் பிரபு.

எனவே யுவதி ஒரு ரோஜாவை பறிக்கின்றாள்; விரலில் முள் குத்துகிறது; குருதி கசிகின்றது, கூச்சலிடுகின்றாள்; வீழ்ந்து விடுகிறாள்.

அழுதபடி குதிரையிலிருந்து இறங்கும் பிரபு கால் சட்டைகளை அவிழ்த்து இறந்து விட்ட யுவதிக்குள் தன் உறுப்பினை திணிக்கிறார். கால்களால் உதைத்துக்கொள்ளும் பெண் குதிரை மேலிருக்கும் சீமாட்டி கண்களை ஒடுக்கியபடி பார்க்கின்றாள்; பிரபுவின் வேலை துரிதத்தில் முடிந்து போனது.

அப்போது அந்த யுவதி கரையத் தொடங்கினாள்; சீக்கிரமே அவ்விடத்தில், பறவையொன்று போட்டிருக்கக்கூடிய இறகு, குருதிக்கறை - நரி வேட்டையாடிச் சென்ற தடயம் போல - மற்றும் புதரிலிருந்து அவள் பறித்த ரோஜா மட்டுமே காணப்பட்டன. இப்போது சீமாட்டியிடம் மீண்டும் அவளது உடுப்புகளும் வந்துவிட்டன. ரோஜாவை கையிலெடுத்த பிரபு அதனைத் தன் மனைவியிடம் தந்தார், அவள் கீழே போட்டு விட்டாள்.

'இது குத்துகிறது!' என்றாள். •



**Burning you Boats / Angela Carter/ Chatto & Windus, London** தொகுப்பிலிருந்து
தமிழில் : சா. தேவதாஸ்




படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

ஹீரோ பேந்தர் வாங்க...




**திருமலை மோட்டார்ஸ்**

932-933, பெங்களூர் மெயின் ரோடு,
பாலகிருஷ்ணா காம்ப்ளக்ஸ்,
ஸ்டேட்பேங்க் அருகில்,
துக்காப்பேட்டை,
செங்கம்-606 709